தமிழீழ ஆவணக் காப்பகம்

# எரிமலை

சித்திரை 1994



www.tamileelamarchive.com

தமிழீழ ஆவணக் காப்பகம்

# தொலைந்த கனவும் சிதைந்த இருப்பும்

நடுநிசி நிசப்தம் குலைத்து
உறுமிச் செல்லும்
இயந்திர மிருகங்கள்

கட்டிடங்களால்
முக்காடு போட்ட முழுநிலவு
மெல்ல மெல்ல
முனகி நடக்க
தூக்கம் தொலைந்த இரவுகளில்
நினைவுகளில் நனைந்து
திட்டுத்திட்டாய் மனது வெடிக்கும்

புளுக்கம் போர்த்திய
சித்திரை மாதம்

முற்றத்து மாமரம்
இலைகளை அசைத்து
சாமரம் வீசும்
சொரிந்த மணற்பரப்பில்
சரிந்திருந்து
நட்சத்திரங்கள் சூழ்ந்த
நிலவைப் பார்க்கையில்
மனது நிறையும்

"யாரடி கள்ளி நீ - இந்த
அகாலவேளையில்..." என
அரவங்கள் அடங்கிய
இரவுகள் தோறும்

பனங்கள்ளில் சுதியேற்றி
சுருதி தப்பிப்பாடும்
பொன்னையா அம்மானின்
பாடல்கூட
இனிமையாய்த் தோன்றும்

இருளில் கரைகின்ற
கைவிளக்கு வெளிச்சத்தில்
முன்காலில் முகம் புதைத்து
என்வீட்டு நாய்கூட
கனவு மயக்கத்தில்
கண்மூடிக் கிடக்கும்

எப்போதாவது
நினைவுகளை இரை மீட்டால்
தொலைந்து போன பக்கங்கள்
ஒவ்வொன்றுமே
இனிய கவிதைகளாய்
மனதுள் விரிய

வெளிச்சத்தைக் கண்டு
வீரிட்டு அலறும் மேசைமணிக்கூடு
கனவுகளுக்கு அப்பால்
எழுகின்ற இரைச்சலுக்குள்
அவசர அவசரமாய்
என்னையும் தொலைக்க

-கஜன்-

www.tamileelamarchive.com

தமிழீழ ஆவணக் காப்பகம்



# எரிமலை

கலை பண்பாட்டு
அரசியல் சமூக ஏடு

பதின்மூன்றாம் ஆண்டு
சித்திரை 1994

ஆக்கங்கள்
அபிப்பிராயங்கள்
மற்றும் தொடர்புகட்கு



**எரிமலை**
தாய்மண் வெளியீடு
தமிழர் ஒருங்கிணைப்புக் குழு
C/O T.C.C-France,
341, Rue des Pyrénées,
75020 Paris.
Tel: 43 58 11 42


# விதியை வெல்வோம்

சிறீலங்காவின் ஜனாதிபதி, சகல வல்லமை படைத்தவர். நிர்வாக அதிகாரத்தை முழுமையாகத் தன் கைவரப் பெற்றவர். அது மாத்திரமல்ல, இராணுவம், சட்டவாக்கம், நீதி பரிபாலனம் ஆகியவற்றுக்கும் அவரே மேலாண்மை உள்ளவர். சிங்களத் தலைவர். இவர் வெளிப்படையாகவே தமிழ் மக்களுக்கெதிரான இனவாதத்தைக் கக்கித் திரிகிறார். வடக்கு, கிழக்கென இரு மாகாணங்களாகப் பிரிப்பதற்கு, கிழக்கில் விரைவில் குடியொப்பத்தை வைக்கப் போவதாக உறுதியாகத் தெரிவித்துள்ள அவர், அதனை நடைமுறைப்படுத்தவும் செய்வார். கிழக்கு மாகாணத்திலும், வவுனியாவிலும் உள்ளூராட்சித் தேர்தல்களை இராணுவ ஆட்சியின் கீழ் வைத்து, இராணுவத்தினரும், பொலிசாரும் வாக்குப் பெட்டிகளைப் பறித்து வாக்குகளைத் திணித்து கேலிக்கூத்தொன்றை நடத்தியது போல், குடியொப்பமும் அதேபாணியில் வைக்கப்படும். ஆனால், கிழக்கு மாகாணத்தில் குடியொப்பம் என்பது அலட்சியப் படுத்தக்கூடிய வேடிக்கை விடயமன்று. தமிழர் தாயகத்தை அரசியல் ரீதியாகத் துண்டாடும் முயற்சி. இராணுவ ஆக்கிரமிப்புக்குள் தென்தமிழீழத்தை நிரந்தரமாக்கும் செயல். சிங்களக் குடியேற்றங்களை அங்கீகரிக்கும் நடவடிக்கை. கேந்திர முக்கியத்துவம் வாய்ந்த திருகோணமலையை சிங்கள மயமாக்கும் இராணுவ நகர்வு. தமிழர் தாயகக் கோட்பாட்டையும், சுயநிர்ணய உரிமையையும் மறுதலிக்கும் ராஜதந்திரச் செயற்பாடு. இத்தகைய பச்சையான இனவாதத்தையும், இன அழிப்பு நடவடிக்கையையும் - சர்வதேச சமூகம்(?) கண்டிக்கும் என்று தமிழ் மக்கள் ஏமாந்திருந்ததாகவே படுகின்றது. ஆனால், சிங்கள இனவாத நடவடிக்கைகளை, சர்வதேச சமூகம் அங்கீகரிப்பது மாத்திரமல்ல அவற்றிற்கு ஆதரவு அளிப்பது போன்றே நிலைமைகள் காணப்படுகின்றன. இதன் மூலம் சர்வதேச சமூகத்தின் இரட்டை வேடத்தனமும், இரட்டை அளவுகோல் முறையும் எமது தேசியப் பிரச்சினையிலும் தெளிவாக வெளிப்படத் தொடங்கியுள்ளன.

சந்தை ஜனநாயகத்தை விஸ்தரித்தல் என்ற திட்ட ரீதியில் சிறீலங்கா அரசு, சிறந்த ஒரு நண்பனாக இந்து சமுத்திரப் பிராந்தியத்தில் மேற்குலகுக்குத் தென்படுவதையே இந்நிலைமை காட்டுகிறது. சிங்கள மேலாதிக்கத்தை தமிழ் மக்கள் மீது நிலைநாட்டும், சிறீலங்காவின் ஒற்றையாட்சி அரசியல் யாப்பின் கீழான, மாகாணசபைத் தீர்வொன்றை தமிழ் மக்கள் மீது அரசாங்கம் திணிப்பதற்குத் தேவையான ஆதரவை வழங்கவும் மேற்குலகம் முற்படலாம். அதுமாத்திரமல்லாமல் வடக்கு, கிழக்கென தமிழர் தாயகத்தைத் துண்டாடும் முயற்சிக்கும் அது தன் ஆசீர்வாதத்தை வழங்கலாம். அப்படி வழங்கும்போது அதன் கண் திருகோணமலையில் நிலைத்திருக்கவும் வாய்ப்புண்டு. இத்தகைய, யதார்த்த நிலைக்குப் புறம்பான தீர்மானத்தை எடுத்துச் செயற்பட முயற்சி நடைபெறுவதாகக் கூறும்போது, ஒட்டுமொத்தமாக சர்வதேச சமூகத்தையோ, மேற்குலகத்தையோ குற்றம் கூறியதாகக் கருதமுடியாது. சர்வதேச சமூகம், மேற்குலகம் என்று கூறும் போது, பலம் பொருந்திய சில வல்லரசுகளையே இது குறிக்கிறது என்பதை நாம் உணர்ந்துகொள்ள வேண்டும். அங்கும் பல நாடுகள் மக்களின் தேசிய அபிலாசைகளைக் கருத்தில்கொண்டு, தேசங்களின் வரலாற்றைப் பின், முன்னாக நீண்ட நோக்குடன் பார்த்து, உண்மையான, நீதியான சமாதானத்தைக் கொண்டுவர முயற்சிப்பவைகளும், அடக்கப்பட்ட மக்களின் விடுதலைப் போராட்டத்துக்கு உறுதியான ஆதரவு அளிப்பவைகளும் உண்டு என்பதை நாம் மறந்து விடக்கூடாது.

இச்சந்தர்ப்பத்தில், எமது பிரச்சினை தொடர்பாக இந்தியாவின் அணுகுமுறையிலும், சிலமாற்றங்கள் தென்பட ஆரம்பித்துள்ளன. சுதந்திர தமிழீழ நாட்டுக்கு ஆதரவு அளிக்காமை, விடுதலைப் புலிகளை மட்டும் தமிழ் மக்கள் பிரதிநிதியாக அங்கீகரிக்காமை ஆகிய விடயங்களில் தொடர்ந்தும் ஒரே நிலைப்பாட்டை இந்தியா எடுக்கும் என்பதோடு, சிறீலங்காவின் தீவிர இனவாதப் போக்கை அங்கீகரிக்காமை, தமிழரின் சிறுபான்மையின உரிமைகள், வடக்கு, கிழக்கு இணைந்த தமிழரின் வரலாற்று ரீதியான குடியிருப்புப் பிரதேசங்கள் ஆகியவற்றிலும் இந்தியா, தொடர்ச்சியான நிலைப்பாட்டைக் கொண்டிருக்கும் என்பதை எதிர்பார்க்கலாம். இந்து சமுத்திரப் பிராந்தியத்தில், இந்தியாவின் நலனுக்கு அச்சுறுத்தலாக ஏற்பட்டு வரும் நிகழ்வுகள், எமது தேசியப் பிரச்சினையில் ஒரு அடிப்படையான கொள்கை மாற்றத்தை வகுக்க இந்தியாவை நிர்ப்பந்திக்கலாம். காஷ்மீரிலும், சிறீலங்காவிலும் அமெரிக்கா காலூன்ற முயற்சி செய்வதாக இந்தியா குற்றம் சாட்டும் போது, தனது உள்நாட்டுப் பாதுகாப்புக் கொள்கைக்கு மாறாக, தமிழீழ மக்களின் சுயநிர்ணய உரிமையை அங்கீகரித்து, தமிழீழத்தை நிரந்தர நண்பனாக ஆக்கிக்கொள்ளும் சந்தர்ப்பத்தை உருவாக்குமா என்ற கேள்வி எழலாம். இது பல்வேறு பலச்சமநிலைகளைச் சீர்தூக்கிப்பார்த்து முடிவெடுக்கும் இந்தியக் கொள்கை வகுப்பாளரில் தங்கியுள்ளது.

இவ்வாறு, சர்வதேச, பிராந்திய உறவுகள், நிலைமைகள், அக்கறைகள் இருந்தபோதும், தமிழீழ மக்கள், தங்களை எதிர்கொள்ளும் போர் அரக்கனை (பொருளாதாரம் உட்பட) விஞ்சவும், விடுதலையை வெல்லவும் தங்கள் சொந்தப் பலத்தில் உறுதியுடன் நின்று நடத்தும் போராட்டம் சர்வதேச நிலைமைகளையும் எமக்குச் சாதகமாகத் திருப்பும். அல்லாது போனால் இனவாதத் தீர்வொன்றை எம்மீது திணிக்கும் முயற்சியுடனான பொருளாதார, இராணுவ அழுத்தங்களால் நாம் நசிந்து போய்விடுவோம். ஆயினும் இதுவே தற்கால உலக அரசியல் விதி எனில் அதனை மக்கள் பலத்தால் வெல்வோம்.

www.tamileelamarchive.com

தமிழீழ ஆவணக் காப்பகம்



# அன்னை பூபதியின் தியாகம் உலக வரலாற்றில் ஒப்பற்றது



இன்று நாம் ஒரு மகத்தான தியாகியை, அந்தத் தியாகியின் அற்புதமான அர்ப்பணிப்பை நினைவுகூர்ந்து எமது இதய அஞ்சலியைச் செலுத்தி நிற்கின்றோம்.

எமது புனித விடுதலைப் போராட்டத்தில் வரலாற்றுக் காவியமாகிவிட்ட எமது தியாகிகளில் அன்னை பூபதி ஓர் உன்னத இடத்தைப் பெறுகிறார்.

ஒரு பெண்ணாக, ஒரு தாயாக, ஒரு குடும்பத்தின் தலைவியாக வாழ்ந்துவந்த சாதாரண வாழ்க்கையைத் துறந்து, தனது சமூகத்தின் சுபீட்சத்திற்காக, தனது இனத்தின் விடுதலைக்காக அவர் தனது உயிரை அர்ப்பணித்தார்.

அவரது தியாகம் ஒப்பற்றது, உலக வரலாற்றிலேயே புதுமையானது.

இந்திய இராணுவ அடக்குமுறைக்கெதிராக அவர் தொடுத்த அறப்போர் காந்திய தேசத்தைத் தலைகுனிய வைத்தது.

தனிமனிதப் பிறவியாக அவர் சாகவில்லை. தமிழீழத் தாய்க்குலத்தின் எழுச்சிவடிவமாக அவரது தியாகம் உன்னதம் அடைந்தது.

அன்னை பூபதி நினைவு தினத்தை முன்னிட்டு தமிழீழத் தேசியத் தலைவர் வே. பிரபாகரன் அவர்கள் விடுத்த (19-4-90) அறிக்கையிலிருந்து.

www.tamileelamarchive.com

தமிழீழ ஆவணக் காப்பகம்


# சமராடும் முனையில் ஓர் உயிர் காக்கும் பணி





## ஒரு மருத்துவப் போராளியின் முதல் அனுபவம்

**தூயவன்**

10.11.93 அன்று நடுநிசி. இருளுடன் கூடிய குளிர்காற்று உடலை ஊடுருவிச் செல்வதை உணர்கிறேன். பாரம் கூடிய நீர்த்துளிகள் என்மேல் விழுந்து தெறிக்கின்றன. எனது பாதணிகள் நிலத்தில் புதைவதை உணர்கிறேன். முன்னால் வழி காட்டிச் செல்பவரின் உதவியும் வேகமும் எனக்கும் கைகொடுக்கிறது. இது ஒரு தென்னந்தோப்பு என்பதைப் புரியமுடிகிறது.

திடீரென என்முன்னால் சாக்குப்படங்கு ஒன்று தொங்குவதை தொட்டுத் தெரிந்து கொண்டேன். அதை விலக்கிச் செல்ல இன்னுமொரு சாக்குப் படங்கு தடைப்பட்டது. அதையும் விலக்கியபோது, கண்ணைப்பறிக்கும் மின்னொளியூட்டிய ஒரு கொட்டகையினுள் நான் நின்றேன். இவ்வொளியில் ஒரு கீற்றுக்கூட வெளியில் தெரியவில்லையே! ஆம், அப்படி ஒரு ஒளிக்கீற்று வெளியில் தெரியுமானால், நாம் அங்கிருப்பது சாத்தியமாகாது.

எனக்கு இது முதலனுபவம்.

வெள்ளாடை அணிந்தவண்ணம் பிரதான மருத்துவர்களும் வேறுசிலரும் நோயாளியைச் சுற்றி நின்று சிகிச்சை செய்வதைத்தான் தெரிந்திருந்தேன். 'அல்பா' கதிரால் அச் சத்திரசிகிச்சை அறை தொற்று நீக்கப்பட்டிருக்கும். எதுவித வேறுபாடு, இடையூறுகளும் இருக்காது பணி நிதானமாக நடைபெறும். ஆனால் அங்கு சுற்றிவர மண் மூடைகள் அடுக்கப்பட்டுள்ளன. ஆயினும் ஒருபக்கம் மேசையொன்றில் மருத்துவப் பொருட்கள் சீராக அடுக்கப்பட்டுள்ளன. தரையில் விரித்திருக்கும் பாய்களைக்கொண்டு, இவ்விடம் ஒரே தடவையில் நாற்பது பேரைக் கவனிக்கக்கூடியதாக இருக்கும் என்பதை விளங்கிக் கொண்டேன். நேராக இரண்டு பக்கமும் சுமார் 8 அடி உயரத்தில் கட்டப்பட்டிருக்கும் கயிறு, அங்கு சிகிச்சைக்காக வருபவர்களுக்கு திரவஊடகம் அவசியம் ஏற்றப்பட வேண்டியிருக்கும் என்பதை உறுதிப் படுத்தியாயிற்று.

அங்கு, நிற்கும் ஒவ்வொருவரினதும் முகத்தைப் பார்க்கிறேன். எல்லோரிடத்திலும் ஒரு அமைதி நிலவுகிறது. ஆனால் அவர்களின் கண்கள் எதையோ வினாவுவது போல இருக்கிறது. எத்தனையோ களங்களின் அனுபவத்தைப் பெற்ற இவர்கள் எதையும் கதைக்காதது எனக்கு வியப்பளிக்கவில்லை. ஏனெனில் இவர்கள் செயல்வீரர்கள்.

சாமம் இருள் வடிவில் கழிகிறது. எல்லோரும் பரபரப்பாகிறார்கள்.

ஏதோவொன்றை அவர்கள் தெரிந்துவிட்டார்கள். நானும் அவர்களுடன் இணைகிறேன். துப்பாக்கிச் சத்தங்களும் குண்டு வெடிப்புச் சத்தங்களும் தூரத்தில் கேட்கின்றன. 'சண்டை தொடங்கி விட்டது.... சண்டை தொடங்கி விட்டது...' எல்லோர் வாய்களும் முணுமுணுக்கின்றன.

வாகனம் நாம் இருக்கும் கொட்டிலின் முன் வந்து 'பிறேக்' அடித்து நிற்கிறது. "விலகு... விலகு... என்ர அம்மா... ஐயோ என்ர அம்மா....." எனக் கேட்கும் குரல்கள் என்னை ஒரு கணம் உலுப்பியது. முன்னிருந்த சாக்குப் படங்கு விலக, காயப்பட்ட போராளிகளைத் தூக்கிக்கொண்டு உள்ளே விரைந்து வந்து கிடத்துகிறார்கள். இரத்த மணம் வீசுகிறது. அவர்கள் வேதனையால் முனகும் சத்தமும் மற்றவர்கள் இயங்கும் போது ஏற்படும் காலடிச் சத்தமும் அவ்விடத்தின் சூழலை முற்றாக மாற்றிவிடுகிறது. ஒவ்வொரு போராளியாக பிரதான மருத்துவர் வேகமாகக் கவனிக்கிறார். நாடித் துடிப்பையும் காயங்களின் தன்மையையும்

www.tamileelamarchive.com

தமிழீழ ஆவணக் காப்பகம்

# மறுமலர்ச்சியில் சித்தமருத்துவம்

தமிழீழத்திற்குத் தனித்துவமான மொழி கலை பண்பாடு இருப்பது போல மருத்துவமும் தனித்துவமான ஒன்றாக இருந்திருக்கிறது. அதுவே சித்த மருத்துவம்.

சித்தமருத்துவம், தமிழர் தம் ஆதியான கலைகளில் ஒன்றாக இருந்திருக்கிறது. அகத்தியர், காலந்தொட்டு திருமூலர், பதினெண் சித்தர்கள் வழியாக இம்மருத்துவ மரபு சீர்பெற்று வந்திருக்கிறது எனலாம். மனம் எனும் சூக்குமப் பொருளுக்கும் உடல் என்ற பௌதீகப் பொருளுக்கும் இருக்கும் தொடர்பை அடிப்படையான எண்ணக் கருவாக இது கொண்டிருக்கிறது.

'மன நலம் மன்னுயிர்க்கு ஆக்கம்
இனநலம் எல்லாப்புகழும் தரும்'

எனும் குறள் மேற்கூறிய கருத்தை உறுதிப் படுத்துகிறது.

இன்றைய போர்க்காலச் சூழலில் கிடப்பில் கிடந்த எத்தனையோ அரும்பெரும் கலைகள் வெளிச்சத்துக்கு கொண்டுவரப்பட்டது போல சித்தமருத்துவமும் புதுப்பொலிவும் விசாலமும் வேண்டி நிற்கிறது. வைத்தியக் கலாநிதி நச்சினார்க்கினியர் குறிப்பிடுகையில், "மேல்நாட்டு வைத்தியர்கள் சித்தமருத்துவத்தை வளர்த்து மீண்டும் உன்னத நிலைக்கு கொண்டு வரவேண்டும் என விரும்புகிறார்கள். நாமும் எங்களுக்கு கைகொடுத்து உதவக்கூடிய எமது மருத்துவ மரபை வளர்ப்பது கடமையாகும்." என்றார்.

புதிய அறிவியல் பார்வையினூடாக எமது சித்தமருத்துவத்தின் எல்லைகளை விரிவுபடுத்தி உலகறியச் செய்யவேண்டும் எனத் துணைவேந்தர் அ. துரைராஜா சித்த வைத்திய ஆராய்ச்சி நிலையம் தமிழீழத்தில் திறந்து வைக்கப்பட்டபோது ஆற்றிய உரையில் குறிப்பிட்டார்.

கவனித்து, யாருக்கு முதலில் அவசர சிகிச்சை செய்யவேண்டும் என முடிவெடுத்து, அவர் செயற்படத் தொடங்குகிறார். எல்லோரும் இயங்குகிறார்கள்.

காயக்காரர்களின் எண்ணிக்கை அதிகரிக்கிறது. இட நெருக்கடி. ஆயினும் எவரும் நிதானம் இழந்த தாயில்லை. காயமடைந்த போராளி களின் வேதனைக் கதறலைக் கேட்டும் தமது உணர்ச்சிகளை வெளிப்படுத்தாமல் பணி தொடர் கிறது.

பிரதான மருத்துவர் என்னை அழைகிறார். மயக்க நிலையில் இருக்கும் போராளி ஒருவரைப் பார்த்தவண்ணம், "முயற்சி செய்வம்" என்றபடியே செயற்கைச் சுவாச முறைகளைச் செய்யும்படி பணிக்கிறார். நான் முழங்காலில் இருந்தபடி கைகளை நெஞ்சில் வைத்து அழுத்தம் கொடுக்கிறேன். இன்னொரு போராளியும் செயற் கைச் சுவாசம் கொடுக்கிறான்.

அப்பொழுது எனது பாதத்தில் யாரோ தட்டுவது போல உணர்ந்து திரும்புகிறேன். "அண்ணா, தண்ணி தாங்கோ.... ஐயோ அண்ணா, தண்ணி தாங்கோ..." இன்னுமொரு காயமடைந்த போராளியின் குரல் என் இதயத்தைப் பிழிகிறது.

ஆனால் 'ஒப்பரேசன் செய்யிற தென்றால் தண்ணீர் கொடுக்கக் கூடாது' என்ற கட்டளை என்னைத் தடுக்கிறது.

எனது பாதத்தைத் தடவிய படியே அந்தப் போராளி தண்ணீர் கேட்கிறான். இன்னுமொரு போராளி இதயமும் இயங்காமல் சுவாசமும் இல்லாமல் கிடக்கிறான்.

உயிர்... உயிர்... எவ்வளவு உன்னதமானது! பிரதான மருத் துவர் அப்போராளியின் கண் இமையை விரித்து லைற் அடித்துப் பார்த்துவிட்டு தலையாட்டுகிறார். "பிறெயின் டெத்தாயிட்டுது." எனக் கூறி விலகுகின்றார். ஏதோ நினைவு வந்தாற்போல் பின்னால் திரும்பி, தண்ணீர்கேட்ட போராளியைப் பார்க்கிறேன். இன்னுமொரு மருத்து வர் அவனது நாடித்துடிப்பைப் பரிசோதித்துவிட்டு, கண்ணிமை யையும் விரித்துப் பார்த்துவிட்டு தலையாட்டிவிட்டு விலகுகிறார்.

ஐயோ... என்று கத்தவேண்டும் போல் இருந்தது.

அப்போது யாரோ எனது முதுகில் தட்டிக்கொடுப்பதை உணர்ந்து திரும்பினேன். அங்கு நின்ற பொறுப்பாளர் என்னைப் பார்த்து,

"ஒன்றுக்கும் கலங்காதேயும்; நாம் கடக்கவேண்டிய பாதை இதைவிடக் கடுமையானது... உம் கடமையைத் தொடரும்." எனப் பணிப்பது போல உணர்கிறேன். மனச்சுமையிலிருந்து விடுபட்டு, இன்னொரு காயமடைந்த போரா ளிக்குச் சிகிச்சை செய்யத் தொடங் குகிறேன்.

மரணத்தைக் கண்டு பதற்றப் படுவதல்ல... அதன் பிடியிலிருந்து மனிதர்களை மீட்பதுதானே எங்கள் தளராத பணி! அதில் ஆழ்கிறேன்.

நன்றி:
விடுதலைப் புலிகள்

www.tamileelamarchive.com

தமிழீழ ஆவணக் காப்பகம்

# தமிழ்மொழிப் பேணலும் மாணவர் பங்களிப்பும்

மனோன்மணி சண்முகதாஸ்

## மாணவர் கல்வி நிலை

மாணவர் உலகம் நாளைய சமூகத்தின் வளர்ச்சிக்கும் கட்டுக்கோப்பிற்கும் இன்றியமையாத ஒரு தனி உலகமாகும். எந்த நாட்டிலும் மாணவர் நலன்கள் சரியாகக் கவனிக்கப்படாவிட்டால் அங்கு எதிர்காலத்தில் பல சிக்கல்கள் ஏற்படும். பாடசாலையிலே கல்வி பயிலும்போது ஒரு மாணவன் தன்னுடைய எதிர்காலத்தைப் பற்றிய ஒரு இலக்கைப் பெறுகின்றான். குழந்தை நிலையிலிருந்து வளர்ச்சி பெற்றுப் பள்ளிக்குச் செல்லும்போது, அக்குழந்தையின் மனநிலையிலே தன்னைப் பற்றிய ஒரு மதிப்பீடும் தோன்றுகின்றது. பெற்றோரின் அன்பினாலும் அரவணைப்பினாலும் வளர்ந்த நிலையில் மாற்றம் ஏற்பட்டுப் புதியதொரு சூழலிலே குழந்தை சிலமணி நேரம் வளரத் தொடங்குகின்றது. இவ்வேளையில் குழந்தையின் உடலும் உள்ளமும் வேகமான வளர்ச்சியை அடைகின்றது. பெற்றோருக்குப் பதிலாக ஆசிரியர்களது மேற்பார்வையிலும் கண்காணிப்பிலும் பாடசாலையில் குழந்தையின் பொழுது கரைகின்றது. இந்நிலையானது, அக்குழந்தை வளர்ந்து பெரியவனாகி சமூகத்திலே தனிமனிதனாக மாறும்வரை நீடிக்கின்றது. ஏறக்குறைய 25 வயதுவரை, கல்வி பயிலும் காலமாக குழந்தையின் வளர்ச்சியும் தொடர்கின்றது.

எனவே இந்த வளர்ச்சி நிலையில் ஏற்படும் சிக்கல்களைப் பற்றியும் அவற்றைத் தீர்ப்பதற்குரிய வழிவகைகள் பற்றியும் சமூகத்தவர் அனைவரும் எண்ணிச் செயற்பட வேண்டியது அவசியமாகும். இன்று கல்வி நிலை பற்றிப் பல்வேறு நிலைகளில் ஆய்வுகள் நடைபெற்று வருகின்றன. ஒவ்வொரு நாட்டிலும் அந்தந்த நாட்டிற்குரிய வசதிகளுக்கும் வாய்ப்புக்களுக்கும் ஏற்பக் கல்விநிலையும் மாறுபட்டுள்ளது. மாணவர் கல்விநிலை உயர வேண்டிப் பல நாடுகள் பல ஆய்வுகளை நடத்தி பல கருத்துக்களையும் நடைமுறைகளையும் வெளிப்படுத்தியுள்ளன. அவற்றை வேறு சில நாடுகள் முன்னுதாரணங்களாகவும் கொண்டு மாணவர் உலகத்தை வழிநடத்திச் செல்கின்றன.

இன்று மாணவர் உலகம் பல்வேறு சிக்கல்களை எதிர்நோக்குகின்றது. குறிப்பாக எதிர்கால இலக்கு ஒன்றினைத் தெரிவதில் இன்றைய எமது மாணவர் பெரிதும் அல்லற்படுகின்றனர். கல்வியின் நோக்கம் எது என்பதனைச் சரியாக விளங்கிக் கொள்ள முடியாமலுள்ளனர். இதற்கு வகுக்கப்பட்டுள்ள கல்வித் திட்டங்களும் ஓரளவு காரணமாக இருக்கின்றன. குறிப்பாகத் தமிழ் மாணவர்கள் எதிர்காலம் இத்தகைய திட்டங்களால் பெரிதும் பாதிப்படைய வழிவகுக்கப் பட்டுள்ளது. இன்றைய தமிழ் மாணவர்களின் தாய் மொழியான தமிழ் மொழிமூலம் கல்வி கற்பதை மாணவர் ஒரு தரக்குறைவான விடயம் என எண்ணத் தலைப்பட்டுவிட்டனர். எமது தமிழ் மொழியின் வளமும் முன்னைய சிறப்பும் மாணவர்களால் அறியப்படாத பொருளாக உள்ளன. மொழி சார்ந்த உயர் கல்வியை இன்றைய மாணவர்கள் தொடரவும் விரும்புவதில்லை. விஞ்ஞானக் கல்வியை மதிக்கும் அதே வேளையில் தாய் மொழி சார்ந்த உயர் கல்வியின் தரத்தை அவர்கள் குறைவாக மதிப்பிடுகின்ற நிலையும் ஏற்பட்டுள்ளது. இந்நிலை வளருமாயின் தமிழ் மொழியின் ஆற்றல் பற்றிய மதிப்பீடுகளும், கணிப்புகளும் குறைவு நிலையில் செய்யப்பட வாய்ப்பு ஏற்படும்.

மாணவர்களின் எதிர்கால நலனையும் தமிழர் சமூக நலனையும் கருத்திற் கொண்டு நாம் கல்வியைத் திட்டமிட வேண்டிய காலம் வந்து விட்டது. இதற்கெனப் பிறநாடுகளின் கல்விசார்ந்த திட்டங்களையும் நடைமுறைகளையும் பற்றி நாம் அறிந்து கொண்டு செயற்பட வேண்டும். எமது நாட்டில் மாணவர்களின் நலன் பற்றி நோக்குமிடத்து அவற்றைப் பொருத்தமாயின் நாமும் பின்பற்றுவது தவறன்று. ஏனெனில் மரபு நிலையான நமது தமிழ் மொழிக் கல்வியிலும் காலத்திற்கேற்ற மாற்றங்கள் பல கொண்டுவரப்பட வேண்டியுள்ளன. மொழியின் நிலை, மாணவர்நிலை, நாட்டுநிலை என்னும் மூன்று கோடுகளையும் இணைத்து செம்மையான முக்கோணநிலையில் நின்று செயற்படின் எமது மாணவர் கல்வியும் நலனும் நின்று நிலைக்கும்.

## மாணவர் கல்வி நிலையில் மொழியின் பங்கு

எமது நாட்டில் மாணவர் கல்வி நிலையில் தாய் மொழியின் பங்கு குறைவுபட்டுள்ளது. தாய் மொழி மூலம் கல்வி பயின்றால் நல்ல வேலைவாய்ப்புக்கள் கிடைக்

www.tamileelamarchive.com

தமிழீழ ஆவணக் காப்பகம்

காது என்றும், உயர் கல்வியைப் பெறுவது எளிதல்ல என்றும் மாணவர்கள் எண்ணுகின்றனர். பிறமொழியான ஆங்கில மொழி மூலம் கல்வி பயின்றால் இவை யாவும் எளிதாகும் என நம்பி வாழ்கின்றனர். அந்த மாணவர்களின் எண்ணத்திற்குப் பெற்றோரும், ஆசிரியர்களும் காரணமாக இருப்பதுடன் சிறிலங்காவின் கல்வித் திட்டங்களும் காரணமாக இருக்கின்றன. குறிப்பாக அறிவியல் சார்பான கல்வியைக் கற்பதற்கு ஆங்கில மொழி மூலமாக இருப்பது நல்லது என்ற எண்ணமும் இதற்கு இன்னொரு காரணமாகும். பல நாடுகளில் அந்தந்த நாட்டு மொழிகளிலேயே அறிவியல் சார்ந்த கல்வி நடைபெறுகின்றது என்பதை எமது நாட்டவர் இன்னமும் அறியாமல் இருப்பதும் இங்கு குறிப்பிடத் தக்கது. மேலைத்தேச நாடுகளில் ஆங்கிலம் அல்லாது வேறு மொழிகள் தாய் மொழியாகப் பேசப்படுகின்ற நாடுகளில் அந்தந்த நாட்டு மொழிகளிலே சகலதுறை சார் கல்வியும் நடைபெறுகின்றது. தமது நாட்டு மொழியிலேயே தமது கல்வி நடைபெறவேண்டும் என்ற தேசிய உணர்வு அங்கு இருப்பதே இதற்குக் காரணமாகும். பிறநாட்டு விடயங்களை அறிந்து கொள்வதற்கு அவர்கள் ஆங்கிலத்தை, உலகப் பொது மொழியாக அது இருப்பதனால் கற்கின்றனர். ஆங்கில மொழி அங்கு இரண்டாந்தர நிலையிலேயே வளர்கின்றது. அதனால் அந்த நாட்டு மொழிகளின் மதிப்பு குறைவுபடாமல் உள்ளது. ஆனால் இங்கே இந்நிலை வேறுபட்டுள்ளது. அந்நியராதிக்கத்திற்கு உட்பட்டிருந்த போது ஆங்கிலமொழி கல்வி மொழியாக்கப்பட்டது. ஆனால் அம்மொழியே தமிழ் மொழியைவிட வலுவும் வளமும் பெற்றமொழி என்ற நிலை இன்று உருவாகி விட்டது. மொழி பெயர்ப்பு, பிற மொழிப் பயிற்சி என்பன மக்கள் மத்தியிலே அறியப்பட்ட விடயங்களாக இருப்பினும் தமிழ்மொழி மூலம் அவற்றை எல்லோரும் அறியும் வாய்ப்பு ஏற்படவில்லை. நேரடியாக ஆங்கிலமொழி மூலம் அறிவுசார் கல்வியைப் பெறுவதே நல்லது என்றும், சிறப்பு என்றும் தாய்மொழியான தமிழ்மொழி மூலம் அவற்றைப் பெறுவது மதிப்புக் குறைவான செயல் என்றும் பலர் எண்ணி வாழ்கின்றனர். இந்நிலை மாறவேண்டும்.

உயர் கல்வி நிறுவனப் பணியாளர்களும், பல்கலைக்கழகப் பணியாளர்களும் கூட இவ்வாறே எண்ணிச் செயற்பட்டும் வருகின்றனர். தமது பணிமனை தொடர்பான ஆவணங்களையும் ஆங்கிலத்திலேயே பதிவு செய்து வைக்கின்றனர். எமது நாடு, பண்பாடு, மொழி, இலக்கியம் போன்ற விடயங்களையும் ஆங்கில மொழியிலேயே பிறருக்கு உணர்த்துவது அவசியம் என்று எண்ணிச் செயலாற்றுகின்றனர். இத்தகைய சமூகநிலைப்பாட்டினால் மாணவர் உலகமும் தாய்மொழி மூலமான கல்வியைப் புறக்கணிக்க ஏதுவாகின்றது. இன்று எமது நாட்டிலே பல மாணவர்கள் தமது மொழி ஆற்றலை இழந்திருப்பதற்கும் இதுவே முக்கிய காரணமாகும்.

எம்மைப் பற்றிய விடயங்களை எமது மொழியிலே முதலில் ஆவணப்படுத்த வேண்டும். சிறப்பாக பண்பாடு பற்றிய செய்திகளையும், நடைமுறைகளையும் தமிழ் மொழியிலேயே ஆவணப்படுத்தி வைக்கவேண்டும். உலகிலே தோன்றிய சில மொழிகள் இன்று பேச்சு வழக்கும், எழுத்துவழக்கும் அற்று மறையும் நிலையில் உள்ளன. இவை போன்ற நிலை தமிழ் மொழிக்கு ஏற்படாது பாதுகாக்க வேண்டியது தமிழரது தலையாய கடமையாகும். மாணவர்களின் பங்களிப்பு இதற்குப் பெரிதும் வேண்டப்படுவதொன்று. எதிர்காலத்தில் தமிழ்மொழி மூலம் அவர்கள் எல்லாவற்றையும் செய்யக் கூடிய ஆற்றல் பெற்றவர்களாக வளரவேண்டும். ஆரம்பக் கல்வி நிலை தொடக்கம் உயர்நிலைக் கல்வி வரை தமிழ்மொழியிலேயே தமது கல்வியைத் தொடர்கின்ற வாய்ப்பு அவர்களுக்கு அளிக்கப்பட வேண்டும். அறிவியல் துறைசார் கல்விநெறி பயிலும் மாணவர்களும் கூட தமிழ்மொழியில் தமது நாளாந்த தேவைகளை நிறைவாக்கக்கூடிய ஆற்றல் பெறவேண்டும். இல்லாவிடில் நாளாந்த வாழ்க்கை நிலையிலே தமிழ் மொழியின் தேவை இல்லாமற் போய்விடும். இதனை கல்வித் திட்டப் பணிப்பாளர்கள் கவனத்திற்கொண்டு வேகமாகச் செயற்பட்டால் மாணவர்களுடைய தமிழ்மொழிக்கான பங்களிப்பு செம்மையான நிலையிலே நடைபெறும்.

**நன்றி: சாளரம்**

**மொழி மனித உணர்வுகளின் வடிகால். அது தாய், சேய் எனும் பெரும் உறவுகளால் உயிரூட்டப்படுவது.**

**மொழியை 'உயிர்விதை' என திரு. சுந்தர ராமசாமி அவர்கள் குறிப்பிட்டமை இங்கு நோக்கத்தக்கது. புலம் பெயர்ந்த எம்மவர்களில் பலர், தமது குழந்தைகட்கு தாய் மொழியாம் தமிழைக் கற்றுக் கொடுப்பதில், ஆர்வமற்றோராக இருக்கின்றனர். இந்த ஆர்வமற்ற, ஏனோ தானோ என்ற போக்கு அவலமானது. இதை நாம் உணரத் தலைப்பட வேண்டும்.**

**இந்த நிலங்களில் எமது வாழ்வு வேர்விட முடியாது. அண்மைக் காலங்களில் வெளிப்பட்டு நிக்கின்ற இன, நிற வெறி அச்சுறுத்தல்களே அதை விளங்கிக்கொள்ளப் போதுமானதாக உள்ளது. எமது மொழிக்கு வளமூட்டுகின்ற பணி, புலம் பெயர்ந்த எம்மவர்களின் கடமைகளில் ஒன்றாக வரித்துக் கொள்ளப்பட வேண்டும். உலகம், அறிவியற் பாதையில் பெரும் பாய்ச்சலை நிகழ்த்தி வரும் வேளையில், நாம் அவற்றைக் கற்று அறிவியலால் தமிழுக்கு புது மெருகு தர வேண்டும்.**

**'நாங்கள் தமிழர்கள்' என்ற கூட்டுப் பண்பும் அதனால் ஏற்படும் வலிமையுமே எமக்குப் பாதுகாப்பானது. இன்றைய எமது விடுதலைப் போராட்டத்தால் எமது மொழி, புத்துயிர்ப்பும் புது வீச்சும் பெற்று வருகின்றது.**

**எமக்கும் மொழியைப் பேணி வளர்க்கின்ற பெரும்பணி உண்டு என்பதை சிந்தையிலிருத்தி செயற்படுவோம்.**

www.tamileelamarchive.com

தமிழீழ ஆவணக் காப்பகம்


# இந்திய சினிமா



## ஒரு தொடர்பியற் கண்ணோட்டம்

-சபா. ஜெயராசா-

இந்தியாவின் தொடர்பியலில் மிகவும் சிக்கல் பொருந்திய தாகவும், அதேவேளை கட்டுப் பாட்டுச் சபைகளால் மட்டும் நெறிப்படுத்த முடியாதிருக்கும் சாதனமாகவும், சினிமா அமைந்து விட்டது. இந்திய மொழிகளில் வருடமொன்றிற்கு மொத்தமாக 900-1000 இடைப்பட்ட சினிமாப் படங்கள் தயாரிக்கப்படுகின்றன. ஒருநாளில் சராசரியாக 122 இலட்சம் மக்கள் சினிமா பார்க் கின்றார்கள். தொலைக்காட்சி, வானொலி, பத்திரிகைகள் முதலி யவை சினிமாவோடு நேரடியாக வும் மறைமுகமாகவும் இடையுறவு கொண்டுள்ளன. இவையனைத் தினதும் கொடுமுடியாக அமை வது இந்தியாவின் அரசியல் பலம் வாய்ந்த தீர்மானிப்பு வலுக் கொண்ட தொடர்பியலாக சினிமா அமைந்திருத்தல் ஆகும்.

1912ஆம் ஆண்டிலிருந்து (ராஜ ஹரிச்சந்திரா) இந்திய சினிமாத் தொடர்பியல் ஆரம்பிக்கின்ற தாயினும் 1930ஆம் ஆண்டைத் தொடர்ந்து சினிமாத் தயாரிப்பிற் கான பல்வேறு நிறுவனங்கள் வளர்ச்சியடையத் தொடங்கின. 1936ஆம் ஆண்டில் வி. சாந்தாறாம் தயாரித்த 'அமர்ஜோதி' என்ற சினிமாப்படம், ஆரம்பகால இந்திய சினிமாவின் பண்புகளுக்கு ஓர் எடுத்துக்காட்டாகும். பாரம் பரிய இந்திய மரபிலே காணப் படும் சமூக நீதி, அற ஒழுக்கங்கள் என்பவற்றின் வற்புறுத்தலும், பாரம்பரிய நாடக மரபுகளோடு இணைந்த வடிவத் தொடர்ச்சியும் இந்திய சினிமாவிலே காணப் பட்டன.

மேற்கூறிய இரண்டு பண்பு களும் இந்திய சினிமாவின் உள்ளடக்கத்தையும் அமைப்பி யலையும் ஆரம்ப காலகட்டங் களிலே தாக்கிய வலுக்களாக அமைந்தன. இந்திய சுதந்திரப் போராட்டத்தை நேரடியாக எடுத் துக்கூற முடியாத இக்கட்டான நிலையில் பழைய புராணக் கதைகள், தொல்சீர் இலக்கியக் கதைகள் என்பவை சினிமாப் படமாக்கப்பட்டவேளை "இன்ப மான பொழுதுபோக்குப் பண்பு" படிப்படியாக உருவாக்கப்படல் ஆயிற்று. திட்டவட்டமான ஒரு செய்தியைச் சினிமாப்படங்களினூ டாகத் தெரிவிக்கவேண்டிய ஒரு தேவை தயாரிப்பாளருக்கு இருந்ததிலும் பார்க்க, அதன் வர்த்தக இலாபமீட்டற் பண்பே மேலோங்கியிருந்தது.

> 'மனிதருக்கும் புற உலகத்துக்குமிடையே தொடர்புச் சாதனங்கள் ஒரு போலிச்சூழலை உருவாக்கிவிடுகின்றன. மனிதரைச் சுற்றிச் சில கருத்துக்களை, சில உணர்வுகளை, அவை மிதக்கவிடுவதால் போலிச்சூழல் உருவாக்கம் நிகழ்கின்றது.'

வடிவமைப்பைப் பொறுத்த வரை, சினிமா என்பது நெறியா ளரின் ஊடகம் (மீடியம்) என்ற எண்ணக்கரு வலுப்பெறாது, நடிகரும், வசனகர்த்தாவும், மேலோங்கியிருந்த நிலை சினிமா வின் தரத்தைத் தாக்கியது. மேலும் பாரம்பரியமான இந்திய இசைத் தொடர்ச்சியிலிருந்தும் சினிமாவின் தனித்துவம் மீண்டெழ முடியாத நிலையில் கூத்தும், பாட்டும் விரவிய ஒரு மனோரம்மியப் பாங்கைச் சுதந்திரத்தின் பின்னர் இந்தியச் சினிமா பெறலாயிற்று.

பேசாத படத்திலிருந்து பேசும் படமாக மாறிய இந்திய சினிமா வின் தொழில்நுட்பம் 1960ஆம் ஆண்டுக்குப் பின்னர் வண்ணப் படமாக மாறிய வேளை மேலும், மேலும் மனோரம்மியப் பாங்கை யும், வர்த்தக விரிவாக்கலையும் பெறத்தொடங்கியது. கதை, நடனம், பாடல், காட்சி என்பவற் றிலே பாலியற் கவர்ச்சியை மேலோங்கச் செய்தல், வர்த்தக மயமாக்கலிற்கு வேண்டிய நிபந் தனையாயிற்று.

இந்திய சினிமாவிலே பெண் கள் பற்றிய சித்தரிப்பு ஆழ்ந்த விமர்சனத்திற்குரியது. பெண்கள் பற்றிய சினிமா அணுகுமுறை இருவகை மாதிரிகையாக்கப்படத் தக்கது. தியாக சொரூபி, கற்புக் கனல், கணவன் தவறுகள் பொறுத்தல், குடும்பநலன் பேணல், ஆண்கள் மீது தங்கியிருத்தல் போன்ற பாத்திரங்களிற் பெண்க ளைச் சித்தரித்தல் மாதிரிகையின் ஒருவகை, பாலியற் கவர்ச்சியாள ராக, விலைமகளாக, பெண்க ளுக்கே பெண்கள் எதிரியாகக் காட்டப்படல், இன்னொருவகை மாதிரிகை. பெரும்பாலான இந்தியச் சினிமாப் படங்கள் பெண்கள் பற்றிய வெகு மலின மான காட்சிகளையே தந்துள்ளன.

இவற்றுக்கு மாறுபாடான முறையில் இயற்பண்புவாதம், யதார்த்தவாதம் என்பவற்றைத் தழுவிய கலைச் சினிமாப் படங் களும், மக்களின் வாழ்க்கையைப் பண்பு நிலையாக மேலோங்கச் செய்வதற்கான ஆவணத் திரைப் படங்களும் தயாரிக்கப்பட்டு வருகின்றன. சினிமா என்பது நெறியாளரின் ஊடகம் என்பதைத் திட்டவட்டமாகப் புலப்படுத்துவ தாக கலைத்திரைப்படங்கள் அமைகின்றன.

விவசாய உற்பத்திப் பெருக் கம், உடல் நலம் பேணல், சுற்றாடற் பாதுகாப்பு, கால்நடை வளர்ப்பு மேம்பாடு, முதியோர்

www.tamileelamarchive.com

தமிழீழ ஆவணக் காப்பகம்

## 'புலிகளின் குரல்' வானொலிச் சேவை

இன்றைய எமது விடுதலைப் போராட்டச் சூழ்நிலையில் ஒரு தன்நிறைவு நிலையுடைய தமிழீழத்தை நோக்கி பல்வேறு கட்டுமானப் பணிகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. அந்தவகையில் 'புலிகளின் குரல்' வானொலிச்சேவை தகவல் பரிமாற்றத்துறையில் ஒரு வெற்றிகரமான முயற்சியே. இவ்வானொலிச் சேவை தமிழீழத் தேசிய விடுதலைப் போராட்டக் குரலாக மட்டுமன்றி தமிழ்த் தேசிய இனத்தின் மொழி, கலை, பண்பாட்டு விழுமியங்களை பேணிக்காப்பதோடு அவற்றை வளர்த்தெடுக்கும் கடமையையும் தன்னகத்தே கொண்டுள்ளது. போராட்டத்தைப் பின்னடைய வைக்காமலும், மறுதலித்தோ, கொச்சைப்படுத்தியோ இல்லாமலும் இருத்தல் மட்டுமே வரையறையாகக் கொண்டு கலைஞர்களின் இதய சுத்தியான, உணர்வுபூர்வமான படைப்புகளுக்கு வழிகோலுவதால் தரத்தில் வானொலிச்சேவை உயர்ந்தே நிற்கிறது.

நாடகம், தொடர்நாடகம், சிறுகதை, கவியரங்கம் போன்ற இலக்கிய வடிவங்களும் தளிர்கள், இளவேனில் போன்ற சிறுவர் நிகழ்ச்சிகளும், கழுமும் கானமும், களத்திலிருந்து போன்ற போராட்டக் கலைவடிவங்களும் ஒலியுருப்பெற்று மக்கள் இதயங்களை ஈர்க்கச்செய்வதில் ஆச்சரியமில்லை. "தேசிய விழிப்புணர்வையும் விடுதலையுணர்வையும் மக்களிடையே ஊட்டிவளர்த்து மக்களின் கருத்துலகத்தைக் கட்டி வளர்ப்பதில் மக்கள் தொடர்புச் சாதனங்கள் அரிய சேவையாற்றமுடியும்" என்ற தலைவரின் கூற்றுக்கிணங்க நீண்டகாலமாகச் செயற்பட்டுவரும் 'புலிகளின் குரல்' வானொலிச்சேவை நிச்சயம் ஒரு புரட்சிகரமான சாதனையே.

கல்வி என்ற துறைகளில் மக்களிடத்தே ஆழ்ந்து ஊடுருவிச் செல்லும் தொடர்பை ஏற்படுத்தக் கூடிய ஆவணத் திரைப்படங்கள் இந்திய அரசின் முயற்சிகளினால் பல்வேறு மொழிகளிலும் தயாரிக்கப்பட்டுள்ளன. இந்தவகையில் சினிமாவின் தொடர்பும் பிரயோகமும் திட்டமிட்டு ஆக்கப்பட்டுள்ளது. இந்தியாவின் குடித்தொகையில் சிறுவர்கள் கூடிய விகிதத்தினராக இருந்தபொழுதும் சிறுவர்க்கான சினிமாவின் வளர்ச்சி பெருமளவிலே பின்தங்கியுள்ளது.

இந்திய சினிமாவின் வளர்ச்சி ஒப்பீட்டளவில் நடிகருக்கும், வசனகர்த்தாவுக்கும் அளித்த முக்கியத்துவத்தோடு, அதன் அரசியற் செல்வாக்கு இணைத்து நோக்கப்படவேண்டியுள்ளது. இந்தியாவின் எழுத்தறிவு பின்தங்கியிருந்த மாநிலங்களிற் சினிமாவின் தொடர்பியல் வலுவடைந்தும் அதேவேளை நலிவடைந்த உள்ளடக்கத் தகுதியும் காணப்பட்டது. சினிமாவினாலே தரப்படும் செய்திகளை அப்படியே நம்பிவிடத் தக்கதாக உருவாக்கப்பட்ட கிராமப்புறத்து மக்களின் மனோநிலை அரசியல் தொடர்புகளுக்கு மேலும் வாய்ப்பானதாக அமைந்தது. இந்நிலையில் சினிமாப் படங்கள் தமது கொள்ளளவுக்கும் கூடிய வார்த்தைப் பிரயோகங்களையும், வசனங்களையும், சுமக்க வேண்டியேற்றப்பட்டது. ஒரு கதாநாயகனைக் கட்டியெழுப்ப வேண்டிய தேவையே சினிமாவின் கலைப்பண்புகளை மீறவும், புறக்கணிக்கவும் செய்தன.

மனிதருக்கும் புற உலகத்துக்குமிடையே தொடர்புச் சாதனங்கள் ஒரு போலிச் சூழலை உருவாக்கிவிடுகின்றன. மனிதரைச் சுற்றி சில கருத்துக்களை, சில உணர்வுகளை, அவை மிதக்க விடுவதால் போலிச் சூழல் உருவாக்கம் நிகழ்கின்றது.

உலகின் பல்வேறு நிகழ்ச்சிகளையும் மக்கள் தமக்குரிய தருக்கங்களினூடாக நோக்காது, தொடர்புச்சாதனங்களின் வரைபுகளினூடாகவும், அணுகுமுறையினூடாகவும் நோக்குதல் இவ்வாறான போலிச் சூழலின் வெளிப்பாடாகும். இந்தச் சந்தர்ப்பங்களில் இவ்வாறுதான் நடந்து கொள்ளவேண்டும் என்பவை தொடர்பான ஆசாரங்களையும், சடங்குகளையும் தொடர்புச் சாதனங்கள் வளர்த்துவிட்டன என்ற குற்றச்சாட்டும் உண்டு.

உவால்ற்றர் லிப்மன் என்பார் இவ்வாறான போலிச்சூழல் உருவாக்கம் பற்றிக் குறிப்பிடும் பொழுது உண்மையான புறவுலகம் என்பது சாதாரண மனிதர் அடையப்பட முடியாததாய் இருப்பதைச் சுட்டிக்காட்டினார். தொடர்புச் சாதனங்கள் உருவாக்கித் தந்த படங்களினூடாகவே நாம் சிந்திக்கின்றோம். பிரச்சினைகளை நோக்குகின்றோம்.

தொடர்புச் சாதனங்கள் பல்வேறு வார்ப்பு எண்ணங்களை அதாவது மீண்டும் மீண்டும் வலுப்படுத்தி வருகின்றன. இவை மக்களின் தொழிற்பாடுகளைத் தாக்குகின்றன. வார்ப்பு எண்ணங்களால் வடிவமைக்கப்படும் மனிதனது காட்சியே வெகுசன தொடர்புச் சாதனங்களின் பங்களிப்பாகவுள்ளது.

லிப்மன் கூறிய இந்தக் கருத்துக்கள் வர்த்தகப் பாங்கான வெகுசனத் தொடர்புச் சாதனங்களின் எதிர் மறைப் பண்புகளைக் குத்திக் காட்டுவதாக அமைகின்றது. உண்மையில் இந்தக் குற்றச்சாட்டைத் தொடர்புச் சாதனங்கள் மீது சுமத்தமுடியாது. தொடர்புச் சாதனம் எத்தகைய பண்பு நிலையில் ஆளப்படுகின்றது என்பதே இங்கு ஆழ்ந்து நோக்கப்படவேண்டியுள்ளது.

ஒரு சமூக ஆக்கத்தின் பொறியாளர் என்ற பணியில் தொடர்பு சாதனங்களின் பங்கேற்றல் முன்னைய கருத்திற்கு முரண்பாடானதாக அமைகின்றது. இந்த முரண்பாடுகளை மேலும் ஆழ்ந்து நோக்கும் பொழுது, ஒருவித உளவியற் சுரண்டல் நடவடிக்கையும் மேலோங்கி நிற்றலைக் காணமுடியும். உளவிறைப்பை ஏற்படுத்தும் குரூரமான நடவடிக்கைகளை வெளிப்படையாக மேற்கொள்ளாது மிகவும் சாதுரியமாக கருத்தேற்றம் செய்யும் பணியே உளவியல் நோக்கில் அதிக தாக்கமானது.

**நன்றி: வெளிச்சம்**

www.tamileelamarchive.com

தமிழீழ ஆவணக் காப்பகம்


# அன்னை பூமியில்



## ஆய்வரங்கு 1:

### யாழ். கடல் நீரேரி அபிவிருத்தித் திட்டம்.

எமது வளங்களைக் கொண்டு எமது கால்களில் நிற்கும் பொருண்மியத் தன்னிறைவை உருவாக்க வேண்டும். இல்லையேல் ஏனைய நாடுகளில் நிகழ்ந்தவை போன்ற சோக அனுபவங்கள் எமக்கும் உருவாக்கப்படலாம்.

நைஜீரியாவின் பயாவ்ரா மாநிலம் நடத்திய விடுதலைப் போராட்டம் பொருளாதாரத் தடையால் தவிடுபொடியானது. வியட்நாமிய யுத்தத்தில் பொருண்மியத் தடையை மக்களின் ஒருமித்த ஒத்துழைப்பும் மதிநுட்பமும் தகர்த்தெறிந்தது.

இன்று சிறிலங்கா அரசு திணித்து வரும் பொருளாதாரத் தடையை எதிர்கொள்ள எமது வளங்களை இனங்காணலும், பயன்பாட்டிற்குக் கொண்டுவருதலும் இன்றியமையாததாகும். அந்தவகையில், தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனத்தினால் பல திட்டங்கள் வகுக்கப்பட்டு செயற்படுத்தப்பட்டு வருகின்றன. அதில் ஒரு மைல் கல்லாக சென்ற வருடம் கார்த்திகைத் திங்கள் யாழ். பல்கலைக்கழக புவியியற்துறை மண்டபத்தில், முதன்மையான நீரேந்து பரப்பான யாழ். கடல் நீரேரியை அபிவிருத்தி செய்வது தொடர்பான ஆய்வரங்கு நடந்தேறியது.

தமிழீழத்தின் பலதுறைசார் அறிஞர் பலர் பங்குகொண்டு தங்கள் கருத்துக்களை முன்வைத்தனர்.

இவ்வாய்வரங்கில் ஆராயப்பட்ட திட்டங்கள் பின்வருமாறு:

1. யாழ். ஏரித்திட்டம் – நோக்கம், விபரம், நன்மைகள்.
2. உப்பாற்றுத் திட்டம்.
3. யாழ். குடாநாட்டின் நில, நீர் அபிவிருத்தித் திட்டம்.
4. தொண்டைமானாறு, நன்னீர் ஏரித்திட்டமும் அதன் பலாபலன்களும்.
5. தொண்டைமானாறு, உப்பாறு ஆனையிறவுக் கடல் நீரேரியை அண்டிய கரையோரப் பகுதியில் நிலப்பயன்பாடு.
6. யாழ். கடல் நீரேரியை அண்டியுள்ள நிலங்களை விவசாயத்திற்குப் பயன்படுத்துதல்.
7. மீன்களும் மீன் சார்ந்த உயிரினங்களின் வேளாண்மையும்.
8. கடல் வேளாண்மை இலாபமடைய தொண்டைமானாறு ஏரியை அபிவிருத்தி செய்தல்.
9. ஆனையிறவு கடல் நீரேரியின் கடல் வளம் சார் நன்மைகள்.

## ஆய்வரங்கு 2:

### மீளக்குடியமர்வுக்கான நீர்வளங்களை இனங்காணல்.

தமிழீழத்தின் பரந்து விரிந்த நிலப்பரப்பு, பண்டைக் காலம் தொட்டு பசுமைப் பரப்பும் செழுமையும் நிறைந்தது என்பது யாவரும் அறிந்ததே. இன்று அதன் தொன்மையான வளமும் பசுமையும் ஆக்கிரமிப்பாளரின் பிடியில் அகப்பட்டு, வேண்டுமென்றே சீர்குலைக்கப்பட்டு சின்னாபின்னமாகிப் போனது. தற்போதைய சூழ்நிலையில் பொருளாதாரத்தடைக்கு எதிராகவும் நாம் போர் தொடுக்கவேண்டியுள்ளது. அதற்கு மிக மிக இன்றிமையாதது எமது மண்ணின் நீரேந்துப் பிரதேசங்களின் கட்டுமானப் பணிகளில் கவனம் செலுத்துதல் என்பதை உணர்ந்து, தமிழீழப் பொருண்மிய மேப்பாட்டு நிறுவனமானது நீர்ப்பாசனத் திணைக்களம், யாழ். பல்கலைக்கழக விவசாய பீடம், போரூட் நிறுவனம் ஆகிய வற்றை இணைத்து 'மீளக்குடியமர்விற்கான நீர்வளங்களை இனங்காணுதல்' என்ற தலைப்பில் சென்ற வருடம் மார்கழி மாதம் ஆய்வரங்கு ஒன்றை, கிளிநொச்சியிலுள்ள யாழ். பல்கலைகழக விவசாயபீடத்தில் நிகழ்த்தியுள்ளது.

இவ்வாய்வரங்கில் பின்வரும் திட்டங்கள் ஆராயப்பட்டன.

1. விவசாய உற்பத்தி அபிவிருத்தியில் பாரிய நீர்ப்பாசனக் குளங்களின் முக்கியத்துவம்.
2. விவசாய உற்பத்தி அபிவிருத்தியில் சிறிய நீர்ப்பாசனக் குளங்களின் முக்கியத்துவம்.
3. ஆற்றுப் படுக்கைகளும் அவற்றிலுள்ள நீரின் தற்போதைய பயன்பாடும்.
4. சூரியனாறு தொடக்கம் பாலியாறு வரை.
5. பாலியாற்றுக்குத் தெற்காக உள்ள ஆற்றுப்படுக்கைகள்.
6. அமுலாக்க நெறிமுறைகளும் புனருத்தாரணத்துக்கான குளங்களும்.
7. நீர்வளம் பராமரித்தல்.
8. நீர் முகாமைத்துவம்.

தன்னிறைவுப் பொருண்மியத்தை நோக்கிய பாதையில் இந்த இரு ஆய்வரங்குகளும் பெரியதொரு உந்து சக்தியைக் கொடுக்கும்.

www.tamileelamarchive.com

தமிழீழ ஆவணக் காப்பகம்

# பூபதி அம்மா ஒரு புயல்

— ஜெயா —



அந்தத் திரை;
அன்பு அறநெறி அமைதி என்றோதும்
குறுகும் சிந்தனையை கொண்ட பேரு நரிதன்
உள்ளம் மறைத்து, உலகை ஏய்க்க
உடலில் அணிந்த கவர்ச்சித் திரை;
அமைதித்திரை!
பிளந்தது; பூபதியம்மாவின் உயிரைப்போல்.

எம்மை அமுத்திய அந்தத் திரையுள்
அமிழ்ந்து கிடந்தோம்.
மூச்சுத்திணற, கண்கள் மிரள
நா வறண்டது.
தொண்டைக்குழியின் ஈரம்வற்றி
குரல் மெலிந்தது.
காதுகள் அடைக்க, கண்கள் இருள
காத்துக் கிடந்தோம்.

"மின்னல்த் தெறிப்பு"
"பேரிடி ஒலிப்பு"
எதிரியைப்போலவே, எம்முள்ளும் நடுக்கம்.
"பூபதிஅம்மா"; இழந்தாவிட்டோம்?

அமைதித் திரையோ அகலக்கிளிந்தது.
ஒளி தெறித்தது; கண்கள்கூச உலகைப் பார்த்தோம்.
உலகம்கூட, அமைதித்திரையுள் நாங்கள் பட்ட சோகம்
அறிந்தது.

ஐம்பத்திஆறு வயது,
பிள்ளையை நினைத்தாளா?
பிள்ளையின் பிள்ளையை, பேரனை நினைத்தாளா?
கொஞ்சிச் சோறூட்டி தாலாட்ட நினைத்தாளா?
கொண்டவனை விட்டுப் பிரிகின்ற கணங்களைத்தான்
நினைத்தாளா?
யாவும் மறந்தாள்!
ஆயுதம் ஏந்திப் பழகா அவளின்
"உயிரே ஆயுதம்"

"அமைதித்திரை பிளந்தது;
பூபதிஅம்மாவின் உயிரைப்போல்"

www.tamileelamarchive.com

தமிழீழ ஆவணக் காப்பகம்



# கிளாலிப் பயணம் ஒரு துயர வரலாறு

## இட அமைவு

யாழ்ப்பாணக் குடா நாட்டையும் அதன் வெளிநிலப் பரப்பையும் ஊடறுத்து ஏறத்தாழ 30 மைல்கள் உள்நுழைந்து, பொன்னாலை தொட்டு தலைமன்னார் வரை நீண்டு பரந்த கடலால் நீருட்டப்படும் யாழ்ப்பாணக் கடல் நீரேரியின் மிக ஆழமானதும் விசாலமானதுமான நீர்ப்பரப்பே கிளாலிக் கடனீரேரி. தற்போதைய பயணப்பாதை கிளாலி தொட்டு ஆலங்கேணி வரை 20 மைல்கள். இக்கடனீரேரியினூடாக பெருநிலத்தை இணைக்கும் மிக முக்கியமான பாதை ஆனையிறவு. இது செயலிழந்து போயுள்ளது.

கொம்படி – குஞ்சுப்பரந்தன்

இப் பாதை போக்குவரத்துக் ஒவ்வாதது- மாரிகாலங்களில் கடல் நீர் மேலேறி கொம்படியைப் கடற் பரப்பாக்கும்- கோடையில் புதை மணல் பூமி; மக்கள் பயணிக்கத் தான் செய்தார்கள். இடர்கள் அவர்களுக்குப் புதிதல்லவே.

இதோ மீண்டும் கிளாலி- ஆலங்கேணியூடு மக்கள். ஆழ்கடல் அலைகளின் மேல் இரவின் அமைதியுடன் உறவாடியபடி ஓடங்கள். மூட்டை முடிச்சுக்களும் அக்கரையில் வாழும் உறவுகளின் நினைவும் சுமையாய் அழுத்த- 20மைல் பயணம் 2000 மைல் பயணமாய் போனது.

கடலில் குருதியோட்டம்- பேரினவாத அரசின் வெறித்தனங்கள்- தமிழ் மண்ணில் காலகாலமாய்த்தான். எனினும், அனைத்து வழிகளும் மூடப்பட்ட நிலையில் கிளாலியூடு பயணம் செய்த மக்களின் போக்குவரத்திலும் அதன் கொடூரப் பார்வை பதிந்தது. சிறீலங்காப் படை வழமை போல தனது கசாப்புக்கடையை கிளாலிக் கடலிலும் விரித்தது. கிளாலிக் கடற்பரப்பை தடைசெய்யப்பட்ட வலயம் என்று பிரகடனப்படுத்தியது.

நாட்டுப்படகுகளில் கொந்தளிக்கும் கடலை இரவிரவாகக் கடக்கும் நூற்றுக்கணக்கான மக்கள் போவது உல்லாசப் பயணமா? கொழும்பிலும் வெளிநாடுகளிலும் தங்கள் உறவினருடன் தொடர்பு கொள்ளவும், மருத்துவ சிகிச்சைக்காகவும் வியாபார நடவடிக்கைகளுக்காகவும் வரும் மக்களைக் கொன்று குவித்து விட்டு தீவிரவாதிகள் கொல்லப்பட்டனர் என மார்தட்டும் அரசு.

92 டிசம்பர் நடுப்பகுதியில், சிறீலங்கா கடற்படை, விமானப் படையுடன் இணைந்து கிளாலிப் போக்குவரத்தை தடைசெய்யும் நடவடிக்கையை மேற்கொண்டது. விளைவு- ஆயிரக்கணக்கான மக்கள், வயதானவரும் நோயாளிகளும், குழந்தைகளும் பலதரப்பட்ட வயதினருமாக ஆலங்கேணியில் பல நாட்களாக தரித்திருந்தனர். சுகாதார வசதிக்குறைவால் வயிற்றோட்டம் பரவியது- தொண்டர்ஸ்தாபனங்கள் பட்டினியால் தவித்த மக்களுக்கு உணவுப் பொட்டலங்களை வழங்கின.

www.tamileelamarchive.com

தமிழீழ ஆவணக் காப்பகம்

## மீட்புப்பணியில்

திரண்டிருந்த மக்கள் கூட்டத்தின் பரிதாபநிலை- போக்குவரத்தை மீளவும் நடத்துவதற்கு நடவடிக்கை எடுக்கவேண்டிய நிலையில் புலிகள்.

**19, மார்கழி 92.**

கடற்புலிகள் கடற்படைப் படகுகளைத் துணிவே கவசமாய் எதிர்கொண்டனர். சிலநாட்களில் கடற்படை பின்வாங்குகிறது. கிறிஸ்துமஸ் இரவில் கடற்புலிகள் காவல் அரண்களாக நிற்க பயணம் மீண்டும் தொடர்கிறது.



**2, தை 1993.**

இயந்திரப் பழுதால் படகுத் தொடரைவிட்டு அலைந்த 4 பயணிகள் படகுகளை வழிமறித்த கடற்படையினர் கண்மூடித்தனமாகச் சுட்டனர்- துண்டாடினர்- ஒரு படகைத் தீவைத்துக் கொளுத்தினர்- 35 உடல்கள் அங்குமிங்குமாக கடற்கரையில் ஒதுங்கிப் போயின.

**6, தை 1993.**

அரசாங்கம் யாழ். கடனீரேரியையே தடைசெய்யப்பபட்ட வலயமாக ஆக்கியது.

**10, தை 1993.**

பத்திரிகையாளர் மாநாட்டில் வெளிநாட்டுப் பத்திரிகையாளர் கூட்டம்- அரச பேச்சாளர் பிரிகேடியர் அங்கம்மன பேசுகிறார்,

"கிளாலியில் படுகொலை நடந்ததாகத் தெரியவில்லை" படுகொலை செய்யப்பட்டோரில் கிளிநொச்சி மாவட்டக் கல்வி அதிகாரி ஆறுமுகம் தங்கராசாவும் ஒருவர் என்று நிருபர் ஒருவர் குறிப்பிட்டபோது "அவர் புலிகளால் கொல்லப்பட்டார்" என்றார் பிரிகேடியர். பயணிகள் படகில் நடந்த ஏனைய கொலைகள் கடற்படைக்கும் புலிகளுக்கும் இடையிலான சண்டையில் நடந்தவை என்றும் அவர் குறிப்பிட்டார்.

**மீண்டும் துயரம்.**

**27, தை 1993.**

பொருட்கள் ஏற்றிவந்த படகு உலங்குவானூர்தியின் தாக்குதலால் தீப்பிடித்தது. 2 படகோட்டிகளும், 2 பயணிகளும் மரணமானார்கள்.

**2, மாசி 1993.**

5 பயணிகளை ஏற்றிவந்த படகுமீது கடற்படையினர் சுட்டதில் கடலுள் குதித்த ஐவருள் ஒருவர் மட்டும் கரையேறினார். நால்வரின் கதி தெரியவில்லை.

**9, மாசி 1993.**

பொருட்கள் ஏற்றிவந்த படகுகளின் மீது சுட்டதில் 2 படகுகள் முற்றாகச் சேதம். 2 பேர் கைது செய்யப்பட்டு படகில் பிணைத்து இழுத்துச் செல்லப்பட்டனர். படகோட்டிகள் குதித்து நீந்திக் கரையேறினர் ஒருவரைத்தவிர.

**10, மாசி 1993.**

ஜனாதிபதியின் ஆலோசகர், பிரட்மன் வீரக்கோன் பத்திரிகையாளர் மாநாடொன்றில் மாசி-7 அன்று கடற்புலிகளின் 10 படகுகளைத் தாக்கி மூழ்கடித்ததாகத் தம்பட்டம் அடித்தார்.

கிளாலித்தடையை நீக்க அரசு ஆலோசித்து வருவதாக பத்திரிகைச் செய்திகள் வந்துகொண்டிருந்த நேரம் தமிழீழக் காவற்துறையினர் ஆலங்கேணிக் கரையில் 8 உடல்களைக் கண்டுபிடித்தனர்.

**11, மாசி 1993.**

கடற்புலிகளுக்கும் கடற்படைக்கும் இடையே ஏற்பட்ட மோதலில் தீப்பிடித்த சிறிலங்கா கடற்படைப் படகு பின்வாங்கிவிட்டது.

**14, மாசி 1993.**

சிறீலங்காவின் கடற்படை ரோந்துப் படகுகள் பொருட்கள் ஏற்றிவந்த ஒரு படகைத் தாக்கின.

**17, மாசி 1993.**

உணவுப் பொருட்கள் ஏற்றிவந்த ஆறு படகுகள் கடற்படையின் கொடுமையான தாக்குதலுக்கு உள்ளாகின.

**19, மாசி 1993.**

2 பிணங்கள் அடையாளம் காண முடியாத அளவில் சீர்குலைந்து கடனீரேரியில் மிதந்து மீட்கப் பட்டது.

**28, மாசி 1993.**

ஆட்லெறி செல் கடனீரேரியை கடக்கும் பயணிகளின் படகுகளைத் தாக்கின. ஒரு படகில் பயணம் செய்த நான்கு பேர் கடலில் குதித்து நீந்தியதில் இருவர் மட்டும் உயிருடன் கரைசேர்ந்தனர்.

**8, பங்குனி 1993.**

கிளாலி- ஆலங்கேணிப் படகுத் துறைகள் ஆட்லெறி செல் தாக்குதலால் முற்றுகையிடப்பட்டது.

**24, பங்குனி 1993.**

புலமைப்பரிசில் விருதுபெறுவதற்காக சென்றுகொண்டிருந்த யாழ். பல்கலைக்கழக மாணவர் மற்றும் பயணிகள் மீது மேற்கொண்ட தாக்குதலில் முதலாம் ஆண்டு மருத்துவபீட மாணவன் வில்சன் நிக்கோலாஸ் (வயது 21) கொல்லப்பட்டார். இரண்டு மாணவர்கள் காயப்படுத்தப்பட்டனர்.

www.tamileelamarchive.com

தமிழீழ ஆவணக் காப்பகம்




**13, சித்திரை 1993.**
கடற்புலிகள் பயணிகள் படகின் மீது தாக்குதல் நடாத்த முயற்சித்த கடற்படை ரோந்துப் படகுகளைத் தாக்கி விரட்டினர்.

**13, வைகாசி 1993.**
புக்காரா விமானங்கள் கிளாலிக் கிராமத்தில் வெறித்தனம் ஆடின. இரண்டு பொதுமக்கள் கொல்லப் பட்டனர். 10 பேர் காயமுற்றனர். அல்லிப்பளையில் சில படகுகள் சேதமுற்றன.

**24, வைகாசி 1993.**
பயணிகளின் படகைத் தாக்க வந்த இரண்டு கடற்படை விசைப் படகுகளுக்குப் பலத்த அடியைக் கடற்புலிகள் கொடுத்தனர்.

**11, ஆனி 1993.**
கடற்படைப் படகு ஒன்று சேதப்படுத்தப்பட்டு பின்வாங்கியது. இரண்டு கடற்புலிகள் வீரமரணம் அடைந்தனர்.

**29, ஆனி 1993.**
கிளாலி, அல்லிப்பளைக் கிராமங்கள் மீது இரவு 7.30 மணிக்கு மேற்கொள்ளப்பட்ட விமானக் குண்டுவீச்சின் விளைவாக போக்கு வரத்துத் தடைப்பட்டது.

**8, ஆடி 1993.**
கிளாலித்துறையில் கடற்படைப் படகுகளால் துப்பாக்கிச்சூடு மேற்கொள்ளப்பட்டது.

**12, ஆடி 1993.**
கடனீரேரியின் நடுவில் நிலையெடுத்த கடற்படைப்படகுகள் கிளாலி ஆலங்கேணிக் கரைகளை நோக்கிச் சுட்டன.

**29, ஆடி 1993.**
இயந்திரப் பழுதால் படகுத் தொடரைவிட்டுப் பின்தங்கிப் போன இரண்டு படகுகள் கடற் படையின் மிருகத்தனமான தாக்கு தலுக்கு ஆளாகின. எட்டுப் பேர் கொல்லப்பட்டனர். ஆறு பேர் காயமுற்றனர். எட்டுப் பேர் எதுவித காயமுமின்றித் தப்பிகொண்டனர்.

**10, ஆவணி 1993.**
காலநிலை கடுமையாக இருந்த சமயம் இரண்டு பயணிகள் படகுகள் கடற்படைப் படகுகளால் வழிமறிக்கப்பட்டு அதிலிருந்த 19 பயணிகள் கடற்படையினரால் இழுத்துச் செல்லப்பட்டனர். அடுத்தநாள் அவர்கள் பிணமாக மீட்கப்பட்டனர். இத்தாக்குதலில் இரண்டு குடும்பங்கள் முழுவதுமே அழிந்துபோனது.

**26, ஆவணி 1993.**
கடற்படைப் படகுகள் கிளாலியிலிருந்து ஆலங்கேணி சென்று கொண்டிருந்த பயணிகள் படகுத் தொடரை தாக்க முயற்சித்த வேளை கடற் கரும்புலிகள் பாய்ந்து இரண்டு அதிவேக கடற்படைப் படகுகளைத் தகர்த்தெறிந்தனர். கடற்புலிகள், பயணப் படகுத் தொடரைப் பாதுகாத்துக்கொண்டிருந்த சமயம் கடற்படையினருக்கும் கடற்புலிகளுக்கும் உக்கிரமான சண்டை நடந்தது. சண்டையின் உக்கிரத்தின் நடுவே இரண்டு கடற்படைப் படகுகள் நழுவி பயணிகள் படகுகள் மத்தியில் ஊடுருவ முயற்சித்தது. அந்தச் சமயம் இரண்டு கடற்கரும்புலிகள் மேஜர் நிலவன், கப்டன் மதன் 'குமரப்பா', 'புலேந்திரன்' என்ற வெடிமருந்து நிரப்பிய இரு படகுகளிலேறி அவ்விரு கடற்படைப் படகுகளைச் சிதறடித்தனர். இந்த இரு வீரர்களின், வீரச்சாவு நூற்றுக் கணக்கான பயணிகளின் உயிரைக் காப்பாற்றியது. இதேவேளை மற்றும் மூன்று கடற்படைப் படைகளை வழிமறித்த கடற்புலிகள் ஒரு படகினை ஆர். பி. ஜி. ஆல் தாக்கி பின்வாங்கச் செய்தனர். மற்ற இரு படகுகளும் அதைத்தொடர்ந்து நாகதேவன்துறை கடற்படைத்தளம் சென்றன.

ஒரு உயரதிகாரி உட்பட பத்து கடற்படையினர் கொல்லப்பட்டனர். பலர் காயமுற்றனர். மூன்று கடற் புலிகள் வீரச்சாவு அடைந்தனர். இரண்டு 50 கலிபர் துப்பாக்கி உட்பட பெருந்தொகையான ஆயுதங்களைக் கடற்புலிகள் கைப் பற்றினர். நாலு கடற்படையினரின் உடல்கள் 27- ஆகஸ்டில் சர்வதேசச் செஞ்சிலுவைச் சங்க அதிகாரிகளிடம் பருத்தித்துறையில் வைத்துக் கையளிக்கப்பட்டது.

**29, ஆவணி 93- காலை 9.29 மணி,**
புலிகளின் நாலு விசைப் படகுகள் கடற்படையின் சுப்பர் டோராப் படகைச் சமருக்கு இழுத்தன. சமர் தொடர்ந்து கொண்டிருந்த வேளை, மேஜர் புகழரசன், கப்டன் மணியரசன் எனும் கடற் கரும்புலிகள் இருவர் வெடிமருந்து நிரப்பிய படகில் விரைந்து அந்த சுப்பர் டோறாவை சேதமுற மோதினர். நாலு

www.tamileelamarchive.com

தமிழீழ ஆவணக் காப்பகம்

அதிகாரிகள் உட்பட 12 படையினர் கொல்லப்பட்டனர். படகு எரிந்து கொண்டிருந்த வேளை கடற்புலிக் கமாண்டோக்கள் 20 மி.மீ. பீரங்கி உட்பட கனரக ஆயுதங்களை மீட்டபின் வெடிமருந்து வைத்துப் படகை மூழ்கடித்தனர்.

கடற்புலிகளும் கடற் கரும் புலிகளும் தங்கள் வெற்றிகரமான தாக்குதல்களால் தமிழீழப் பிரதேச நீர் பரப்புகளில் ஒன்றான கிளாலி யூடாகப் பயணம் செய்யும் தமிழ் மக்களின் உயிரைப் பாதுகாக்க தாம் தீர்மானம் எடுத்திருப்பதை சிறீ லங்கா பேரினவாத அரசுக்கும் உலகுக்கும் பிரகடனப்படுத்தி யுள்ளனர்.

துயர நிகழ்வுகளால் துவண்டு போன எங்கள் கடனீரேரி இன்று அந்த மாவீரரின் குருதி கலந்து வீரம் பொங்கியபடி உள்ளது. அதில் பயணிக்கும் மக்கள் ஒவ்வொரு வரின் மனதிலும் மரணித்த மாவீரர் களினதும், மக்களினதும் நினைவு நிறையும். இடர்களை வெற்றிப் படிகளாக்கி இலக்கை நோக்கிய விடுதலைப் பயணம் வீறுநடை போடுகிறது.

பூநகரி முகாம், நாகதேவன்துறை கடற்படை முகாம் மீது விடுதலைப் புலிகளால் மேற்கொள்ளப்பட்ட தாக்குதல், கடற்படை இராணுவத் தளங்களை அழித்து மக்களின் போக்குவரத்தை இலகுவாக்கியது.

ஆயினும், வான்வழிவந்து பயணிகள் மீது தாக்குதல் நடத் துதல் இன்னும் தொடர்கிறது.

❋❋❋

# சிறீலங்காவில் பறிபோகும் பத்திரிகைச் சுதந்திரம்

ஒரு ஜனநாயக நாட்டின் அடிப்படை உரிமைகளான பேச்சுச் சுதந்திரம், எழுத்துச் சுதந்திரம் என்பவற்றுக்கு தடை ஏற்படும் போது அந்த நாட்டின் ஜனநாயகம் என்பது கேள்விக்குள்ளாகின்றது. இன்று சிறீலங்கா அரசானது பத்திரிகைகளுக்கு எதிராகத் தொடுத்துள்ள அராஜகப் போரானது கூர்ந்து கவனிக்கப்பட வேண்டியதொன்றாகும். அரசசார்புப் பத்திரிகைகள் தவிர்ந்த ஏனைய பத்திரிகைகள் அனைத்தும் ஓரணியாய்ச் சேர்ந்து குரல் கொடுக்க முயற்சிப்பதை தற்போது நோக்கமுடிகின்றது.

சிங்கள அரசானது ஜே.வி.பி. அழிப்பு என்ற போர்வையில் அறுபதினாயிரத்துக்கும் மேற்பட்ட தனது மக்களையே கொன்றொழித்த வேளையில் மௌனித்திருந்த பத்திரிகைகள் நேர்த்தியான செய்தியாளன் றிச்சாட் டி சொய்சாவின் கொடிய கொலைக்குப் பின்னர்தான் சற்று விழிக்கத் தொடங்கின. புலி எதிர்ப்பு முகாமுக்குள் இத்தகைய பத்திரிகைகள் ஒத்திசைவாக இயங்கி வந்தாலும் கூட அண்மைக் காலமாக புலிகளுக்கு எதிரான அரச நடவடிக்கைகளில் திருப்தி காணாத பத்திரிகைகள் அரசை விமர்சிக்க முற்பட்டவேளையில்தான் அரசின் கழுகுக் கண்களில் இந்தப் பத்திரிகைகள் அகப்பட்டுக்கொண்டன. விடுதலைப் புலி எதிர்ப்புப் பிரச்சாரத்தில் சிறீலங்காவில் இருந்து வெளிவரும் சிங்கள, ஆங்கிலப் பத்திரிகைகள் அனைத்தும் தீவிர இனவாதக் கருத்துக்களை வெளியிடுவதில் போட்டி போடுவதையும் அவதானிக்கலாம். தமிழ் மக்களுக்கு எதிரான நடவடிக்கைகளில் சில, சிங்கள மக்களுக்கு எதிராகவும் அரசினால் பிரயோகிக்கப்படும் வேளையிலேயே இப்பத்திரிகைகள் தடுமாறுகின்றன. அரசாங்கத்தைத் தட்டிக்கேட்க முற்படுகின்றன. இதனால், அண்மைக்காலமாக பத்திரிகைகளுக்கு எதிராக அரசினால் நேரடியாகவும் மறைமுகமாகவும் அச்சுறுத்தல்களும் கொலை மிரட்டல்களும் கூட விடுக்கப்பட்டிருப்பதை அறியமுடிகிறது. அரசின் அண்மைக்காலத் தொடர்ச்சியான இராணுவத் தோல்விகள் (மண்கிண்டியிலிருந்து பூநகரி வரை) அரச பத்திரிகைகளுக்கிடையிலான விரிசல் நிலையினை மென்மேலும் அதிகரிக்கச் செய்துள்ளது.

எல்லாவற்றுக்கும் மேலாக அண்மையில் 'சூரியகந்த' மலையில் கண்டுபிடிக்கப்பட்ட மனித எலும்புக் கூடுகளின் புதைகுழிகள் விவகாரம் அரசுக்கும் பத்திரிகைகளுக்கும் இடையே தாக்கமான முறுகல் நிலையை தோற்றுவித்துள்ளது என்றே கூறலாம். இவ்விடயத்தில் பத்திரிகைகள் எடுத்துக்கொண்ட தீவிர கவனமானது உள்நாட்டிலும் வெளிநாடுகளிலும் இருந்து பல நெருக்குதல்களை அரசுக்கு ஏற்படுத்துவதாக இருந்தது குறிப்பிடத்தக்கது. அவசரகாலச் சட்டத்தின் கீழ் பத்திரிகைகளுக்கு எதிராக அரசு செயற்பட்ட போதும் அது வெற்றியளிக்காத நிலையில் அராஜக ரீதியான செயற்பாட்டிலேயே அரசு இறங்கியுள்ளதானது ஜனநாயகத்திற்கு சாவு மணியடிக்கவும் சர்வாதிகார அரசு உருவாக்கத்திற்குமான அடிக்கல் என்றே கருத இடமுண்டு. அரசின் இந்த நடவடிக்கைகளுக்கு எதிராகப் பத்திரிகைகள் ஒருமித்து உறுதியான தீர்க்கமான நடவடிக்கையில் இறங்காவிடில் விளைவு பாரதூரமாகும்.

நிலவன்

www.tamileelamarchive.com

தமிழீழ ஆவணக் காப்பகம்

# பறை - பறைமேளக்கூத்து - தேசியக் கலை வடிவங்கள்

## சில குறிப்புக்கள்

**-சர்வே-**

தமிழீழத் தேச நிர்மாணம் இன்று பல பரிமாணங்களில் விரிவடைந்து வருகின்றது. எமக்கிடையிலான ஏற்றத்தாழ்வுகளைக் களைந்து ஒரு முழுமையான தேசிய உருவாக்கத்தினை நாம் மேற்கொள்ளும் காலகட்டமாக இன்றைய காலகட்டம் உள்ளது. இதனால் இன்று எம் முன்னால் பல தேசியக் கடமைகள் காத்திருக்கின்றன. அவற்றுள் முக்கியமான ஒன்றாக தமிழீழ மக்களுக்கான தேசியக் கலைவடிவங்களை பாதுகாப்பதும் அவற்றை முழுமையான வகையில் வளர்த்தெடுப்பதும் அமைகின்றது. இது இன்றைய தமிழீழக் கலைஞர்கள் முன்னால் உள்ள அவசரப் பணியாகும். தமிழீழ மக்களுக்கான தேசிய நாடக வடிவம், இசை வடிவம், நடன வடிவம் போன்றவை உருவாக்கப் படவேண்டும். தமிழீழ மக்களின் நடன வடிவம் எனும் போது இன்று நாம் பரதத்தினைத்தான் காட்ட வேண்டியவர்களாக இருக்கின்றோம். பரதம் தமிழர்களுக்கான நடன வடிவம் எனப் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்படுகின்ற போதும் அது ஈழத்தமிழர்களின் அடையாளத்தினை வெளிப்படுத்தும் நடன வடிவம் அல்ல. கதகளி என்றவுடன் கேரள மக்கள் நினைவுக்கு வருவது போல, கண்டிய நடனம் என்னும் போது சிங்கள மக்கள் நினைவுக்கு வருவது போல எம்மை வெளிப்படுத்த எமக்கு ஒரு நடன வடிவம் வேண்டும். எமது கூத்துக்களைப் பயன்படுத்தி இதை உருவாக்க முடியும். இதே போன்றுதான் ஏனைய கலைகளிலும் எமது தனித்துவமான அடையாளங்களை வெளிப்படுத்தக் கூடிய வடிவங்கள் உருவாக்கப்பட வேண்டும். இதற்காக உழைக்கவேண்டிய நிலையில் உள்ள எம் கலைஞர்களின் முன்னே எமது தேசிய வாத்தியங்களில் ஒன்றான



பறை, கலைவடிவமான பறைமேளக் கூத்து தொடர்பான சில கருத்துக்களை முன்வைக்க விரும்புகிறேன்.

சில மாதங்களின் முன்னே, 23-01-1993 சனிக்கிழமை அன்று நோர்வே, ஒஸ்லோவில் தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தினர் நடத்திய 'புலர்வின் பூபாளம்' என்ற கலை நிகழ்வினைப் பார்வையிடும் வாய்ப்பு எனக்குக் கிடைத்தது. அந்நிகழ்ச்சியில் `Super Zemper Kan' எனும் ஆபிரிக்க இசை நடனக் குழுவினர் இசை நடன நிகழ்ச்சி நடத்தினர். இந்த நிகழ்ச்சியில் அவர்கள் உபயோகித்த வாத்தியங்கள், அவர்களின் நடன வேகம் ஆகியவை எம்மவர்களுக்குப் பிரமிப்பினை ஊட்டின. ஏறத்தாழ அரை மணி நேரம் நடந்த இந்நிகழ்ச்சி மிகுந்த வரவேற்பினைப் பெற்றது. தமிழர் சமூகத்தின் மத்தியில் மட்டுமல்ல, இக்குழுவினரின் நிகழ்ச்சி மேடையேறும் இடங்களில் எல்லாம் பெரும் வரவேற்பினையே பெற்றுவருகின்றது.

இந்நிகழ்ச்சி முடிவடைந்த பின்னர் எம் மத்தியில் இத்தகைய கலைவடிவம் இருந்தும் அது தாழ்ந்து போய் இருக்கும் நிலையினை எண்ணி வேதனை என்னுள் எழுந்தது. இத்தகைய வீச்சுள்ள இசையினை வழங்கும் சக்தி எமது பறை வாத்தியத்திற்கே உண்டு என்ற எனது கருத்துடன், அவ் விழாவுக்குச் சிறப்பு விருந்தினராக வருகை தந்து இந்நிகழ்ச்சிகளையும் பார்த்து ரசித்த பேராசிரியர் கா. சிவத்தம்பி அவர்களும் உடன்பட்டுக் கொண்டார். "வெளிநாட்டுக்காரர்கள் மத்தியில் இப்படியான நிகழ்ச்சிகள் தான் எடுபடும்" என்று எனது நண்பர் ஒருவரும் கூறிக்கொண்டார்.

எம் மத்தியில் எமது தேசியக் கலைவடிவங்களில் ஒன்றான 'பறை மேளக்கூத்து' அருகி வருகின்றது. மாசி 1994 எரிமலையில் வெளிவந்த 'தமிழ் மக்களின் நாட்டார் வழக்காற்றியல்- ஆய்வுசெய்யப்படவேண்டிய கூறுகள்' எனும் கட்டுரையில் பேராசிரியர் அ. சண்முகநாதன் அவர்கள் 'பறைமேளக் கூத்து' தொடர்பாகப் பின்வருமாறு குறிப்பிடுகின்றார். 'பறைமேளக் கூத்து' எம்முடைய கிராமியக் கலைகளில் ஒன்றாக இருந்து வந்தது. இக் கூத்திலே பறையின் நுணுக்கமான ஒலிகளையும், பறை முழக்குவோருடைய துரித ஆட்டங்களையும் காண்பவர் வியப்படையாமல் இருக்கமுடியாது. இக்கலையும் மீட்டெடுக்கவேண்டியதொன்றாய் உள்ளது. கலாநிதி சி. மௌனகுரு அவர்கள் தனது 'மட்டக்களப்பு நாட்டுக்கூத்துக்களின் சமூகத்தனம்-பயில் நிலை, ஓர் ஆய்வு' எனும் கட்டுரையில் (1989 இல் இது எழுதப்பட்டது.) பறைமேளக்கூத்துப் பற்றிப் பின்வருமாறு குறிப்பிடு

www.tamileelamarchive.com

தமிழீழ ஆவணக் காப்பகம்

கின்றார். "பறைமேளம் அடிக்கும் வகுப்பினரால் மாத்திரமே இக்கூத்து ஆடப்படுகின்றது. வேடம் அணிந்த இருவர் தமது பறைகளை அடித்து, பல்வேறு தாளங்களுக்கும் ஏற்ப உடலை அசைத்து ஆடுவதே இக் கூத்தாகும். கோவிலின் வெளிவீதியில் சமதள அரங்கில் மக்கள் சூழ்ந்திருக்க இக்கூத்து நடைபெறும். இராச வரவு, மந்திரி வரவு, கோணங்கி வரவு என அவரவர்க் குரிய வரவுத் தாளங்களை பறையில் எழுப்பி அவ்வோசைக்குத் தக்க ஆடுவர். இதிற் கதையம்சம் இருக் காது. கதையம்சம் இன்மையாலும் ஒரு தனிச் சமூகத்தினருக்கு மாத்திரமேயுரிய கூத்தாக இது இருந்தமையாலும் இது ஏனைய சமூகத்தினரால் ஆடப்படவில்லை. அத்தோடு நாடகமாகவும் முகிழ்க்க வில்லை." பழையதும் புதியதும்-பக்கம் 87)

துரதிஷ்டவசமாக எனக்கு இப் பறைமேளக்கூத்தினைப் பார்க்கும் வாய்ப்புக் கிடைக்கவில்லை. கலாநிதி சி. மௌனகுரு அவர்கள் தனது கட்டுரையில், இப்பறைமேளக் கூத்துப் பற்றிய தகவல்களைத் தந்துதவியவர், வையமூப்பன் ஆனைக்குட்டி தலைமை மூப்பன், களுதாவளை, மட்டக்களப்பு எனக் குறிப்பிட்டுள்ளார். இதனால் அவருக்கும் இக்கூத்தைப் பார்வையிடும் வாய்ப்புக் கிடைக்க வில்லையோ என்று எண்ணத் தோன்றுகின்றது. இது ஒரு வகையில் இக்கூத்தின் அருகி வரும் தன்மையினை வெளிப்படுத்துகின்றது.

இக்கூத்திலே கதையம்சம் இல்லாமை இக்கூத்தின் வீச்சினைப் பாதிக்காது என்றே நான் கருது கிறேன். நான் மேலே குறிப்பிட்ட ஆபிரிக்க இசை நடனத்திலும் கதையம்சம் ஏதும் இல்லை. எமது பறை போன்ற வாத்தியங்களை உபயோகித்து அவர்கள் எழுப்பிய வீச்சான, நுட்பமான இசையும் அவ் இசைக்கேற்ப உடையலங்காரத் துடன் அவர்கள் ஆடிய ஆட்டமும் அற்புதமாக இருந்தது. மேலே நான் குறிப்பிட்ட இரு கட்டுரைகளின் அடிப்படையில் நோக்குகையில் எமது 'பறைக்கூத்து' இந்த ஆபிரிக்க நடனத்துடன் ஒப்பிடக்கூடிய ஒரு கலை வெளிப்பாடாக இருக்கும் என்று எண்ணத்தோன்றுகின்றது. வெளிநாடுகளில் எமது இந்தப் 'பறைமேளக்கூத்து' மேடையேற்றப் படின் வெளிநாட்டவர் மத்தியிலே மிகுந்த வரவேற்பினைப் பெறும் என்றே நான் எண்ணுகின்றேன்.

இத்தகைய ஒரு கூத்து ஏன் எமது சமூகத்தில் தாழ்ந்து போயுள்ளது. இக்கூத்து மட்டுமின்றி எமது தேசிய தாள வாத்தியங்களில் முக்கியமானதான 'பறை' ஏன் உரிய மதிப்பினைப் பெறவில்லை? 'பறை மேளக்கூத்து' கதையம்சம் இன்றி இருந்தமையாலா பரவலாக ஆடப் படவில்லை? 'பறை' எழுப்பும் நாதம் ஏன் சங்கீதமாகவில்லை? இது பறையின் குறைபாடா?

இல்லை. நிச்சயமாக இல்லை. இது எமது சமூகத்தின் குறைபாடு. இவ் இசை ஒரு குறிப்பிட்ட சமூகத் தினருக்குரியதாக இருந்தது மட்டு மல்ல, அச் சமூகம் தாழ்த்தப்பட்ட சமூகமாக மதிக்கப்பட்ட வந்த வரலாற்றுக் கொடுமைதான் இதற் குக் காரணம். இதனை எழுதும் போது 1985இல் நடைபெற்ற சம்பவம் ஒன்று எனது நினைவுக்கு வருகின்றது. அப்போது நாம் யாழ். பல்கலைக்கழக கலாச்சாரக்குழுவின் சார்பில் 'மாயமான்' எனும் வீதி நாடகத்தினை நடாத்தி வந்தோம். வீதிகளிலும், கோவில் திருவிழாக் களின் போது கோவில் வீதிகளிலும் இந்நாடகத்தினை நாம் நடாத்தி னோம். 1985ஆம் ஆண்டு நல்லூர்க் கந்தன் ஆலய உற்சவம் முடிவ டைந்த பின் நல்லூர் வீதிகளிலும் இந்நாடகம் நடாத்தப்பட்டது. இந் நாடகத்தில் நாம் பாத்திரங்களை வேறுபடுத்துவதற்காக சீலைகளில் வரையப்பட்ட முகமூடிகளை அணி வது வழக்கம். இந் நாடகத்தில் எமது தாள வாத்தியங்களாக பறையும், டோல்கியும் பயன்படுத் தப்பட்டன. எமது நாடகத்தில் வாத்தியக் கலைஞராக இருந்தவர் முறைப்படி மிருதங்கத்தினைக் கற்று கர்நாடக சங்கீதக் கச்சேரிகளுக்கு மிருதங்கம் வாசிக்கும் எமது நண்பர். நல்லூரில் எமது நாடகம் மேடை யேற்றப்பட்ட போது எமது வாத்தி யக் கலைஞர் நண்பர் ஒன்றுக்கு இரண்டு முகமூடிகளை அணிந்து கொண்டார். இது எனக்கு ஆச்சரியத்தினைக் கொடுத்தது. நான் அவரிடம் இது பற்றிக் கேட்டபோது "நான் தான் பறை வாசிக்கிறேன் என்று சங்கீதக்காரர்களுக்குத் தெரிந்தால் பிரச்சினை வரும். எனவே வாசிப்பவர் ஆர் எனத் தெரியாமல் இருக்கவே இரண்டு முகமூடிகளை அணிந்திருக்கிறேன்" என்றார் அவர். முறைப்படி மிருதங் கம் கற்றவர் பறை வாசிப்பது இழுக்கு எனக் கருதும் நிலை எமது சமூகத்தில் இருப்பதை இது வெளிப்படுத்துகிறது. ஆனால், 'பறை'க்கு மட்டும் தான் இந்தநிலை இருப்பது வருந்தத்தக்கது. முறைப் படி மிருதங்கம் கற்றவர் உடுக்கு வாசிக்கலாம், தபேலா வாசிக்கலாம், தவில் வாசிக்கலாம், ஏன் ட்றம்ஸ் கூட வாசிக்கலாம். எவருமே பெரி தாக அலட்டிக் கொள்வதில்லை. ஆனால் 'பறை' என்றவுடன் பிரச்சினை வருகின்றது. ஏன்?

பச்சையாகச் சொல்லப் போனால் எமது சமூகத்தில் உள்ள சாதீய ஒடுக்குமுறை நல்லதொரு வாத்தியத்தினை விழுங்கிவிட்டது. இவ்வாத்தியம் அமங்கல நிகழ்வுக் குரிய வாத்தியமாகிவிட்டது. கோவில்களில் மங்கலங்களின் போது வாசித்தால் கூட 'இது இன்னாருடைய கோவில்' என அடையாளம் காட்டுவதாக அமை

## "விடிவின் ராகங்கள்"
### ஒலியிழை நாடா

தமிழீழ இசைக்குழு இவ்வொலி நாடாவை உருவாக்கியிருக்கிறது. திரு. மார்ஷல் அவர்கள் இசைய மைத்திருக்கிறார். இவ் ஒலிப்பதிவு நாடா வெளியீட்டுவிழா யாழ். பல்கலைக்கழக கைலாசபதி அரங் கில் தமிழீழ அரசியல் துணைப் பொறுப்பாளர் திரு. சி. கரிகாலன் அவர்கள் தலைமையில் நடைபெற் றது. விடுதலைப் புலிகள் கலை பண்பாட்டுக் கழகப் பொறுப்பாளர் திரு. புதுவை இரத்தினதுரை அவர் கள் வெளியீட்டுரை நிகழ்த்த மூத்த தளபதி பானு அவர்கள் ஒலிப்பதிவு நாடாவை வெளியிட்டு வைத்தார்.

www.tamileelamarchive.com

தமிழீழ ஆவணக் காப்பகம்

யும் நிலைமை எம் மத்தியில் தோற்றுவிக்கப்பட்டுவிட்டது.

தமிழீழ விடுதலைப் போராட்டம் தேசிய ஒடுக்குமுறையிலிருந்து எம்மை விடுவிப்பதனை மட்டும் நோக்காகக் கொண்டதல்ல. எமது சமூகத்தின் மத்தியில் உள்ள சகல ஏற்றத்தாழ்வுகளையும் நீக்கி புதிய தோர் சமூகத்தினை உருவாக்கும் நோக்கத்தினையும் தன்னகத்தே கொண்டது. இப் போராட்டச் சூழலே 'பறை' போன்ற எமது தேசிய வாத்தியத்தினை, 'பறை மேளக்கூத்து' போன்ற கலைவடிவத்தினை மீட்டெடுக்கப் பொருத்தமான காலமாகும். எமது தேசியக் கலைகள் நலிவுற்றதற்கு அல்லது வளர்ச்சியடைவதற்கு உரிய அரச ஆதரவு இன்மையும் ஒரு காரணம் ஆகும். ஆனால் தற்போதைய தமிழீழ அரசு எமது தேசியக் கலை வடிவங்களை மீட்டெடுக்கும் பணிக்கு முழுமையான ஒத்துழைப்பையும் உதவியினையும் வழங்கும். இதனால் காலம் தாழ்த்தாது இப் பணி ஆரம்பிக்கப்பட வேண்டும். பறைமேளக்கூத்தினையும், பறை வாத்தியத்தினையும் மீட்டெடுத்து வளர்க்க உடனடி நடவடிக்கைகள் அவசியமானவை. அடிப்படையில், இச் செயற்பாடுகள் மூலம் நாம் அடையவேண்டியது, இக்கலைக்கு சமூ அந்தஸ்தை உருவாக்கலே.

இங்கு சமூக அந்தஸ்தை உருவாக்குதல் என்பது அதனை ஒரு குறிப்பிட்ட வகுப்பினருக்கு உரியதாக மட்டும் இல்லாது பரவலாக்கும் செயற்பாட்டைக் குறிக்கும். சதிராட்டம் என்னும் பெயரில் தாசி குலத்தினரால் மட்டும் ஆடப்பட்ட நடனம், ருக்மணி அருண்டேல் போன்றோரால் மீட்டெடுக்கப்பட்டு பரதம் எனும் பெயரில் அனைவருக்குரிய, ஏன் கௌரவத்திற்கும் அந்தஸ்துக்குமுரிய நடனக் கலையாக மிளிரவில்லையா? அது போலத்தான். எமது 'பறைமேளக் கூத்து' பறை ஆகியன எமது சமூகத்தில் உயர்ந்த இடத்தினைப் பெற வேண்டும்.

இது உடனடியாக நடைபெறக் கூடியதல்ல. படிப்படியாகவே இந்நிலை அடையப்பட்ட முடியும்.

## போர்க்காலக் கருத்தரங்கு

**வடமராட்சியில் கிராம ரீதியில் சனசமூக நிலையங்கள் தோறும் 'போர்க்காலக் கருத்தரங்குகள்' தினமும் நிகழ்த்தப்பட்டு வருகின்றன. இக்கருத்தரங்குகளின்போது பூநகரிச் சமர் வீடியோப் படக் காட்சி, வீதி நாடகம், கருத்தரங்குகள் இடம்பெறுகின்றன.**

இதற்காக மேற்கொள்ளக்கூடிய செயற்பாடுகளாவன:

1. பறைமேளக் கூத்து, 'பறை' வாத்தியம் ஆகியவற்றை முன்னிறுத்தி பயிற்சிப் பட்டறைகளை நடாத்தல்.

2. இப் பயிற்சிப் பட்டறைகளூடாக குறிப்பிட்ட வகுப்பினைச் சேர்ந்தவர்கள் மட்டுமில்லாது எமது தேசியக் கலை வடிவங்களில் ஈடுபாடுள்ள அனைவரும் இவற்றில் பயிற்சி பெறும் சூழலை உருவாக்கல்.

3. இப் பயிற்சியினூடாக இக் கலையினை மேலும் வளர்த்தெடுத்தல். ஏற்கனவே ஆடப்பட்டு வரும் பறைமேளக் கூத்தினை மேலும் மெருகூட்டலாம். பறை மூலம் வாசிக்கும் தாளக்கட்டுக் களையும், நடைகளையும் மெருகூட்டலாம். போராளிக் கலைஞரான தினேஷ் மிருதங்க அரங்கேற்றத்தினை நடாத்திய மகிழ்ச்சியான செய்தி அண்மையில் கிடைத்தது. இவர் போன்றவர்கள் முறைப்படி பறையினையும் பயின்று பறை வாத்தியத்தினை மேலும் ஒரு படி வளர்த்தெடுக்கலாம்.

4. இத்தகைய பயிற்சிகள், வளர்த்தெடுப்புக்கள் மூலம் வீச்சுள்ள பறைமேளக்கூத்துக்கள் உருவாக்கப்படலாம். இக்கூத்துக்கள் எமது தேசிய வைபவங்களில் நிகழ்த்தப்படலாம்.

பறைமேளக்கூத்துக்கு சமூக அந்தஸ்து கொடுக்கும் பணியில் எமது பல்கலைக்கழகங்களின் பங்கு முக்கியமானது என நினைக்கிறேன். யாழ். பல்கலைக்கழகத்தின் நுண் கலைப்பீடத் தலைவராக பேராசிரியர் கா. சிவத்தம்பி அவர்கள் இருக்கிறார். மேலும் இத்துறையில் திரு. குழந்தை சண்முகலிங்கம், திரு. நா. சுந்தரலிங்கம், திரு. கா. சிதம்பரநாதன், திரு. காரை. சுந்தரம்பிள்ளை போன்றோரும் உள்ளனர். இவர்கள் எமது தேசியக் கலைவடிவங்களை உருவாக்குவதில் மிகுந்த அக்கறை கொண்டவர்கள். மேலும் கிழக்கிலங்கைப் பல்கலைக் கழகத்தின் கலைப்பீடாதிபதியாக கலாநிதி. சி. மௌனகுரு அவர்கள் இருக்கிறார். இவர் ஈழத் தமிழ்க் கூத்துக்களின் ஆராய்ச்சியாளராக மட்டுமன்றி, கூத்துக்களை தனது நாடகங்களில் அற்புதமாக இணைக்கும் படைப்பாளியாகவும் இருக்கிறார். இவர்களது காலத்தில் பல்கலைக்கழகங்கள் எமது தேசியக் கலை உருவாக்கத்தில் வீச்சுடன் செயற்படவேண்டும்.

புலம் பெயர்ந்த சூழலில் இருந்து இக்கட்டுரையினை எழுதுவதனால் இப்பணி தொடர்பான நடைமுறைப் பிரச்சினைகள் பற்றிய விடயங்களை இக்கட்டுரை கவனத்திற் கொள்ளாமல் போகலாம். மேலும் இக் கட்டுரையில் குறிப்பிடப்படும் பறைமேளக்கூத்து மட்டும்தான் மீட்டெடுத்து வளர்க்கப்பட வேண்டியதொன்றல்ல. நான் ஆரம்பத்தில் குறிப்பிட்டது போன்று எமக்கென தேசிய நாடக, இசை, நடன வடிவங்கள் உருவாக்கப் படுவதற்கு மேற்கொள்ளப்பட வேண்டிய உழைப்பில் இப்பறை மேளக்கூத்து தொடர்பான விடயங்களும் உள்ளடங்கும். எம்மவர் குருதியாலும் தியாகத்தாலும் உருவாகும் தமிழீழ தேசம் என்னும் உடலுக்கு ஆடை அணிகலன் பூட்டி அழகு பார்ப்பதற்கு தேசியக் கலை வடிவங்கள் அவசியம். அதனை உருவாக்கும் பணி இன்று எமது கலைஞர்கள் முன்னே உள்ளது. இதனைச் செய்யாதுவிடின் பறை மேளக்கூத்து போன்ற கலைவடிவங்களை, தேசிய விடுதலைப் போராட்டம் நடந்த காலத்தில் இழந்தவர்கள் என்ற அவதூறு வரலாறு பூராகவும் இருக்கும்.

www.tamileelamarchive.com

தமிழீழ ஆவணக் காப்பகம்

# இலக்குத் தவறாத இலக்கியவாதி தோழர் கே. டானியல்

தேவி பரமலிங்கம்

"டானியல் தமிழ் மக்களின் விடுதலைப் போராட்டத்திற்கு எதிரான கருத்துடையவர்." என்ற பிழையான கருத்து சிலரால் கூறப்பட்டு வருகின்றது.

ஆனால் அவர் மனிதருக்குள் கூறுகளைப் பிரித்துப் பார்த்து சமூகத்தில் ஏற்றத் தாழ்வுகளைப் போதிக்கும் கருத்துக்கும், நடைமுறைக்கும் எதிரானவர் என்பது தான் சரியானது.

டானியலின் இறுதிக் காலத்தில் அவரால் படைக்கப்பட்ட போராட்ட நாவல்கள் எனப் பெயர் பெற்ற 'பஞ்சமர்', 'கோவிந்தன்', 'அடிமைகள்', 'கானல்', போன்ற நாவல்கள் சாதிப் பிரச்சினைகளை முன்வைத்து எழுதப்பட்டனவற்றைக் காரணம் காட்டியே அவ்வாறு அவரது எழுத்துக்கள் கொச்சைப் படுத்தப்பட்டு வந்தன.

அவரது இளமைக்கால அனுபவங்கள் சாதி அடக்கு, ஒடுக்கு முறைகளுக்கு எதிராக அந்த மக்களுடன் ஒருவராகத் தானும் சேர்ந்து போராடியதன் நிமித்தம் நாவல்களாகத் தோற்றம் பெற்றன. அவையும் விடுதலைப் போராட்ட நாவல்கள் என்பது தெளிவு.

அவரது நாவல்களின் வீரத்தையும், வெற்றியையும் எதிர் கொள்ளும் ஒருசிலரால் மட்டும் தட்டுவதற்காக முன்வைக்கப்பட்ட கருத்தே அதுவாகும்.

"தமிழர்களின் நிகழ்காலப் பிரச்சினைகளை ஒதுக்கிவிட்டு சாதிப் பிரச்சினையைத்தான் உங்களால் எழுத முடிகின்றது."

மேற்கண்ட கூற்றில் ஒரு பக்க நியாயம் தெட்டெனத் தெரிவதை அவதானிக்கலாம். அவருடைய அனுபவங்களை வைத்து படைக்கப் பட்ட சிருஷ்டியை உகந்த முறையில் மதிப்பீடு செய்வதை விட்டு அந்த அனுபவங்களுக்கு உட்படாத ஒருவரை நோக்கி இதுபோன்று அதைச் செய்தாலென்ன என்று கேட்பது தமிழில் உள்ள ஒரு பழமொழியை நினைவூட்டவில்லையா?

"மக்களிடமே படிக்கவேண்டும்; அவர்களிடம் படித்ததை அவர்களுக்கே திருப்பிக் கொடுக்க வேண்டும்." என்னும் கோட்பாட்டை இலக்கிய வழியாக வரித்துக் கொண்டிருந்த டானியல் மிக நீண்ட ஆயுள் உள்ள ஒரு மனிதராக எப்படியிருக்க முடியும்?

அப்படி அவர் உயிர் வாழ்ந்திருந்தால் நிச்சயமாக அவரது பேனாவுக்கு உள்ளிருந்தும் நிகழ்கால போராட்ட இலக்கியம் பிறந்திருக்காது விட நியாயமில்லை.

எனினும் டானியல் தம்மீது மேற்குறிப்பிட்ட குற்றச்சாட்டை சுமத்தும் போதெல்லாம் மிகத் தெளிவாக அவர்களுக்கு பதில் தெரிவித்து வந்திருப்பதும் அவரது இலக்கியக் கோட்பாட்டில் இம்மியும் பிசகாத தன்மையைக் காட்டுவதாக அமைந்துள்ளதை அவதானிக் கலாம்.

"சாதிப்பிரச்சினை தமிழர்களின் நிகழ்காலப் பிரச்சினை இல்லையா? சாதிப்பிரச்சினை தமிழனின் அன்றாடப் பிரச்சினை. முற்றிலும் முற்றத்தில் நடக்கும் பிரச்சினை. தமிழர்களாக இருக்கும் ஒரு பகுதித் தமிழர்களைத் தமிழர்களாக அங்கீகரிக்கும் பிரச்சினை. இதை ஒப்புக் கொள்ளப் பிடிவாதமாக மறுக்கும் மனிதநேயமற்ற நோயாளர்களின் மனதை எனது பேனா புண்படுத்துமானால் நான் சரியானதையே செய்கின்றேன் என்பதுதான் அர்த்தம்." (தாரகை இதழ் 12 ஜூலை, செப்ரம்பர் 1984, பொன். பொன்ராசாவுடன் செவ்வியில்)

அமரர் கே. டானியல் இவ்விதம், ஒரு பக்க சார்பாக மூர்க்கத் தனமாக கொச்சைப் படுத்திக் கூறப்பட்ட சமயங்களில் மேற் சொன்ன விதத்தில் மட்டும் அல்லாமல் அவர்களது சிந்தனையை சரியான முறையில் சிந்திக்க வைத்துக் கொள்வதற்காக தெளிவு படுத்தி வெளியிட்ட கருத்துக்களில் கீழ்வருவனவும் ஒன்று.

"நான் எழுதுவது, எழுதாதது பற்றிய விடயத்தை விடுங்கள். அவர்கள் அதை எழுதட்டுமே; அப்படி எழுதுவதற்கு நான் தடையாக நின்றதோ, தடைபோட்டதோ இல்லையே! சாதியைத் தொடாமல் என்னால் சிருஷ்டிக்கப்பட்டவைகளை சரியாக அவர்கள் படிக்கவில்லை என்று தான் அர்த்தம்." ('தாரகை' இதழ் 12.பூமணிமைந்தன் தொகுப்பில்)

இருப்பினும் அவர் இறுதிக் காலங்களில் எழுதிய நாவல்களில் அளவில் பெரியதான 'பஞ்ச கோணம்', என்னும் நாவல் தமிழகத்தில் பிரசுரிப்பதற்கான ஆயத்த வேலைகள் நடைபெற்று வருகின்றன. அந்நாவல் வெளிவந்ததும் அமரர் கே. டானியல் சமகாலப் பிரச்சினையைத் தொடவில்லை என்னும் குறைபாட்டையும் விட்டு வைக்காமல் அந்தப் பிரச்சினைகளை உள்வாங்கிய படைப்பாக "பஞ்சகோணத்" தைத் தந்து ஒய்ந்ததை வாசகப் பெருமக்கள் தரிசிக்கலாம்.

டானியலால் எதிர்பார்க்கப் பட்ட, நோக்கப்பட்ட மனித சமூகத்தின் விடிவிற்கான அந்த புதிய யுகத்தை; பொதுவுடமைச் சமூகத்தைக் காண்பதில் அவரது இறுதி மூச்சுவரை ஓய்ந்து விடாமல் ஈடுபட்டிருந்ததும், அல்லாமல் வயோதிப காலத்தில் நோய் வாய்ப்பட்டு சித்தம் பிசகிய நிலையில் மேற்சொன்ன கருத்துக்கு

www.tamileelamarchive.com

தமிழீழ ஆவணக் காப்பகம்

# புலிகளின் போராட்டம்

உருண்டை உலகமே
உள்ளம் கொண்ட மானிடரே!
புலிகளின் போராட்டம்
நீதியின் மேல்
நிமிர்த்தி வைக்கப்பட்ட
கூர்முனை கத்திகள்!

போராட்டக் கற்களால்
கத்திமுனை தீட்டப்படும்
மழுங்காது!!!

எச்சரிக்கை!
விழித்திருக்கும் புலியுடன்
வீறாப்பு வேண்டாம்!
பதுங்கும் புலிகள்
பாய்வது நிச்சயம்!

மடிந்தால் என்ன?
புலிகளின் மடிதல்
காகித மடிப்பல்ல!
அது பீனிக்ஸ் பறவையின்
சூரியப் போராட்டம்!

ஒவ்வொரு புலியும்
சூரியனை எரித்தல்லவா
தனது கண்களுக்கு
ஒளியேற்றுகின்றான்!

என்னருமைத் தோழர்களே!
உங்களது
மரணப் பட்டியல் நீளலாம்!
ஆனால்
சோர்வுகளின் பட்டியல்
உங்களுக்கு சொந்தமல்ல!!!

உங்களின் மரணப் பட்டியலில்
என் உள்ளம் நனைகிறது!
சோர்வுப் பட்டியலில்
என் உயிர் மடியும்!

தோழர்களே!
புன்னகையோடு
புதியதோர் புறநானூறு
படையுங்கள்!

எழுங்கள்!
சூரியனின் வெற்றியை
யாரும் மூடிட முடியாது!!!

*சீ. அருணாசலம்,*
*மலேசியா.*

எதிரான கருத்தை தன்னூடாகப் பெறப்பட்டால் அது புத்தி சுவாதீனம் அடைந்த நிலையில் தெரிவித்த கருத்தாகத் தான் இருக்கும் என்பதை 'தாரகை' இதழுக்கு எடுக்கப்பட்ட செவ்வியில் ஆணித்தரமாக வலியுறுத்தி இருப்பதைக் கீழே காணலாம்.

கேள்வி: உங்களுடைய நோக்கங்கள் என்றாவது நிறைவேறும் என்று நம்புகிறீர்களா?

பதில்: அந்த நம்பிக்கையை இழந்துவிடும் அளவுக்கு என் சிந்தனைகள் இன்னும் வக்கரித்து விடவில்லை. இது நிறைவேற முடியாதது என்று நானே சொல்வேனாகில் எனது மூளையில் பழுது ஏற்பட்டு விட்டதாக நீங்கள் நம்பலாம். மனித வரலாறு ஒரு தொடர்ச்சியான போர். அதற்கு இலக்கியமும் விதிவிலக்கானதல்ல. நான் இல்லாவிட்டால் எனக்குப் பின் இன்னொருவன்; அவனுக்குப் பின் வேறோருவன்; இப்படியே உலகின் சுகபோகங்களை தனித் தனியே தன்னது, தன்னது ஆக்கிக் கொண்டிருக்கும் வர்க்கத்தை அழித் தொழித்து எல்லாம் எல்லாருக்கும் என்ற எல்லைவரை இந்தப் போரை நடத்தி வெற்றி பெறுவர் என்பதில் எனக்குச் சந்தேகமில்லை. *(தாரகை இதழ் 12 ஜூலை, செப்ரம்பர் 1984)*

1927 ஆம் ஆண்டு மார்ச் மாதம் 25ம் நாள் ஆனைக் கோட்டையில் கிறகரி மரியாள் தம்பதிகளுக்கு மூன்றாவது மகனாகப் பிறந்த டானியல் 1951ம் ஆண்டில் நல்லூரில் பிலோமினம்மாவை திருமணம் செய்து இரண்டு ஆண்களையும், நான்கு பெண்களையும் பிள்ளைகளாகக் கொண்டு வாழ்ந்தவர்.

அக்காலத்தில் யாழ்ப்பாணக் கிராமப் புறங்களில் நடைமுறையில் இருந்து வந்த 'திண்ணை'க் கல்வி முறையில் ஐந்தாம் வகுப்புவரை கல்வி பெற்ற டானியல் பிற்பாடு தகப்பனார் செய்து வந்த சலவைத் தொழிலில் ஈடுபட்டு உழைத்தார்.

ஆரம்பகாலத்தில் காந்திய இயக்கம், திராவிட முன்னேற்ற இயக்கங்கள் மூலம் அரசியலில் காலடி வைத்த டானியல் காலப் போக்கில் அனுபவ முதிர்ச்சி, அறிவுத் தெளிவு பெற்று மாக்ஸிஸ சித்தாந்தக் கோட்பாட்டைக் கொண்ட கம்யூனிச இயக்கத்துடன் தன்னை இணைத்து, சுமார் முப்பத் தைந்து ஆண்டுகள் கம்யூனிச இயக் கம் இலங்கையில் வளர்ச்சிபெற அயராது பாடுபட்டவர்.

சகல அடக்கு, ஒடுக்குமுறைகளுக்கும் எதிரான மார்க்ஸிச வழியில் ஈடுபட்ட டானியல் எழுத்திலும், செயலிலும், பேச்சிலும் மட்டுமன்றி முழுமூச்சாகவும், இறுதிவரை செயற்பட்டு வந்ததால் அவரால் படைக்கப்பட்ட இலக்கியங்களும், பேச்சுக்களும், செயற்பாடுகளும் மக்கள் மத்தியில் மிகுந்த செல்வாக்கை பெற்று ஈழத்து, இந்திய இலக்கியக்காரர்கள் மத்தியிலும் கவனத்தைப் பெற்றுக் கொள்ள முடிந்தன.

கிராமப் புறங்களில் அவ்வப் போது எழுந்த சாதிப் பூசல்களில் தன்னை இணைத்துச் செயல்பட்டது போன்றே ஈழத்துத் தமிழ் இலக்கிய உலகில் காலத்துக்குக் காலம் பலரால் ஏற்படுத்தப்பட்ட புரளிகளையும் முன்னின்று உடைத்தெறிந்து அம்பலப்படுத்தியும், சரியான இலக் கியப் பாதையை முன்னெடுத்து வளர்க்கவும் பாடுபட்டவர் டானியல்.

டானியல் சார்ந்த இலக்கியப் பார்வையும், அரசியல் நிலைப்

www.tamileelamarchive.com

தமிழீழ ஆவணக் காப்பகம்

பாடும் அவற்றில் ஏற்பட்ட; ஏனையவர்களால் ஏற்படுத்தப்பட்ட மாறுதல்களின் போதெல்லாம் சரியான பக்கத்தைத் தேர்ந்தெடுத்து உறுதி குன்றாமல் நின்று சேவை ஆற்றியமைக்கு கீழ்வரும் உதாரணங்கள் போதிய சான்று பகர்கின்றன.

"அறுபதாம் ஆண்டுகளின் ஆரம்பத்தில் கம்யூனிச இயக்கத்தின் தேசிய, சர்வதேசிய மார்க்கம் பற்றிய முக்கியமானதும் உக்கிரமானதுமான தத்துவார்த்தப் போராட்டம் நடைபெற்று கட்சி பிரிவடைந்தபோது தோழர் டானியல் சற்றும் தயக்கமின்றிச் சரியான பாதையைத் தேர்ந்தெடுத்து தோழர் சண்முகதாசன் தலைமையிலான இலங்கைக் கம்யூனிஸ்ட் கட்சியின் ஆதரவாளனாகச் செயற்பட்டார்." ('தொழிலாளி'- டிசம்பர் 1986)

"பிரேம்ஜி ஞானசுந்தரம், டொமினிக் ஜீவா, பேராசிரிய இலக்கியவாதிகள் தவறான வழிகாட்டலில் இலங்கை முற்போக்கு எழுத்தாளர் சங்கம் ஆரம்பக் கொள்கைகளைக் கைவிட்டு பிற்போக்குடன் கைகோர்த்து சாத்வீக, சமரச மார்க்கத்தையும், எல்லா மக்களுக்கும் பொதுவான இலக்கியம் என்ற வர்க்கப் பார்வையற்ற கோட்பாட்டையும், இலக்கியவாதிகள் வர்க்கத்துக்கு அப்பாற்பட்டவர்கள், மேலானவர்கள் என்னும் மாயைக் கருத்தையும் மேற்கொண்ட போது தோழர் டானியல் அவற்றை நிராகரித்து இலங்கை முற்போக்கு எழுத்தாளர் சங்கத்துக்கு எதிராகப் போர்க்கொடி உயர்த்தினார்." ('தொழிலாளி'- டிசம்பர் 1986)

இவ்விதம் அரசியலிலும், இலக்கியத்திலும் டானியல் தேர்ந்தெடுத்த பாதை உலகப் புதிய நாகரீக வளர்ச்சிக்கு வித்திடக்கூடியதாலேயே என்றைக்கும் மறக்கவோ மறைக்கவோ கூடியவராக அல்லாமல் அவரது நாமம் ஆழப்பதிக்கப்பட்ட ஒன்றாகிவிட்டது.

1986ஆம் ஆண்டு மார்ச் மாதம் 23ம் திகதி தமிழ்நாடு தஞ்சை மாவட்டத்தில் காலமான அவர் வைத்திய சிகிச்சைக்காகச் சென்றிருந்த சமயம் ஏற்பட்ட மாரடைப்புக் காரணமாக இறக்க நேரிட்டது. நோய்வாய்ப்பட்டு உடல்நிலை பாதிக்கப்பட்ட நிலையிலும் தமிழகத்தில் பல்வேறு இலக்கியக் கூட்டங்களில் பங்குபற்றியும், தமிழ் இலக்கியக்காரர்களைச் சந்தித்தும் பரிமாறிக்கொண்ட கருத்துக்கள் அனந்தம். இறுதிமூச்சுவரை இலக்கியத்தை நேசித்தது போலவே நசுக்கப்பட்ட மக்களையும் நேசித்தவர்.

சாதிக்கொடுமையால் கிராமங்களில் குடிநீருக்காக பாதிக்கப்பட்ட சம்பவங்கள் வடபகுதிச் சிறுபான்மை மக்களின் வாழ்க்கையில் ஏராளம். கரவெட்டிக் கிழக்குப் பகுதியில் நடைபெற்ற வரலாற்றுச் சம்பவம்தான் இறுதிநாட்களில் எழுதிமுடித்த "தண்ணீர்" நாவலது கருவூலம். "அடிமைகள்", "பஞ்சமர்", "கோவிந்தன்", "கானல்", "பஞ்சகோணம்" போன்ற இவரது ஏனைய நாவல்களும் நசுக்கப்பட்ட மக்கள் சார்பாக அவர்களின் விடுதலைப் போராட்டத்தை சித்தரிப்பனவாக எழுதப்பட்டுள்ளன.

நன்றி: ஈழநாதம்

# இலக்கியம் படைப்பதற்கு இங்கு எவரும் தடையாகவில்லை
## 'காலங்கள்' வெளியீட்டில் புதுவை இரத்தினதுரை

இந்த மண்ணில் வாழும் எழுத்தாளர்கள் இலக்கியங்கள் படைக்க வேண்டும். அவர்கள் இலக்கியப் படைப்பில் ஈடுபடுவதற்கு யாரும் தடைவிதிக்கவில்லை.

இவ்வாறு கலை, பண்பாட்டுக் கழகப் பொறுப்பாளர் திரு. புதுவை இரத்தினதுரை அவர்கள் தெரிவித்தார்.

யாழ். பல்கலைக்கழக கைலாசபதி மண்டபத்தில் இடம் பெற்ற எழுத்தாளர் சாந்தனின் 'காலங்கள்' சிறுகதைத் தொகுதி வெளியீட்டு விழாவிற்குத் தலைமை வகித்துப் பேசும் போதே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அங்கு அவர் தொடர்ந்து பேசும் போது, இந்த மண்ணிலிருந்து புலம்பெயர்ந்து வெளிநாடுகளில் தங்கியுள்ள சில எழுத்தாளர்கள் தாம் புலம்பெயர்ந்து சென்றதை தமது எழுத்துக்களில் நியாயப் படுத்த முனைகின்றனர்.

வெளிநாடுகளிலும் கொழும்பிலும் உள்ள எழுத்தாளர்கள் இந்த மண்ணிலிருந்து எழுதும் எழுத்தாளர்களின் படைப்புக்களையும், எமது மக்களையும் கொச்சைப் படுத்தும் செயலில் ஈடுபட்டுள்ளனர்.

வெளிநாடுகளில் வாழ்ந்து வரும் எழுத்தாளர்கள், தாம் அங்கு வாழ்வதற்குக் காரணம் தேடிக் கொண்டிருக்கின்றார்கள்.

மூச்சு விடுவதற்கு நாம் யாரிடமும் அனுமதி கேட்பதில்லை. இதே மாதிரி எழுதுவதற்கும் அனுமதி தேவையில்லை.

இங்கிருக்கும் எழுத்தாளர்கள், ஆக்க இலக்கியப் படைப்புக்களில் ஈடுபட வேண்டும். அவர்கள் எழுதாமலிருந்தால் அதற்கு எவரும் பொறுப்பாளிகள் அல்ல என்றும் குறிப்பிட்டார்.

இந் நிகழ்வில் செல்வி. இ. ஜெயரஞ்சனி வரவேற்புரையாற்றினார். டானியல் அன்ரனி வெளியீட்டுரை நிகழ்த்தினார்.

மூத்த எழுத்தாளர் வரதர் முதற்பிரதியைப் பெற்றுக்கொண்டார். சோ. பத்மநாதன், செல்வி. ப. நாமகள், கலாநிதி நா. சுப்ரமணியம் ஆகியோர் மதிப்புரை நிகழ்த்தினர். நூலாசிரியர் பதிலுரையாற்றினார்.

www.tamileelamarchive.com

தமிழீழ ஆவணக் காப்பகம்

# இருண்ட உலகுக்குள் பயணிக்கும் சிறார்கள்

ஒரு தேசத்தின் எதிர்காலச் சிற்பிகள் சிறார்கள். எமது தமிழீழ தேசியப் போர் உக்கிர மடைந்து செல்லும் நிலையாலும் போராட்ட சூழ்நிலையாலும் நிர்க்கதியான தமிழீழச் சிறார்கள்-தமிழீழ நிழல் அரசினாலே அரவணைக்கப்பட்டு 'செஞ்சோலை'. 'காந்தரூபன் அறிவுச் சோலை' போன்ற பராமரிப்பு மையங்களினூடாக எதிர்காலச் சமூகத்தின் சிருஷ்டிகளாக உருவாக்கப்பட்டு வருவதை நாம் அறிகிறோம். சுபீட்சமான புதிய தேசத்தின் உருவாக்கத்திற்கு இது அவசியமாகின்றது.

சிறீலங்காவில் ஆயிரக்கணக்கான இளைய சந்ததியினர் வீதிகளில் போக்கற்று அலைந்து, ஓர் இருண்ட உலகத்தை நோக்கிப் பயணித்துக்கொண்டிருப்பதை நாம் எண்ணிப் பார்க்காமல் இருக்க முடியாது. இனவாத சேற்றுக்குள் மூழ்கிப்போய் உள்ள சிறீலங்கா அரசானது தனது தேசத்தின் எதிர்கால சந்ததியினரைப் பற்றிக் கவலைப்படப்போவதில்லை. ஆனாலும் ஒரு நல்ல சமூக ஈடுபாடுகொண்ட சக்திகள் உருவாகி அந்த இளைய குருத்துக்களின் வாழ்விற்கு வித்திட வேண்டும் என்ற அவாவால் எழுந்ததே இச்சிறு குறிப்பாகும்.

அண்மையில் மேற்கொள்ளப்பட்ட ஆய்வின்படி ஐம்பதினாயிரம் பேரைக்கொண்ட பிச்சைக்காரச் சமூகத்துடன் பதினையாயிரம் சிறார்கள் சிங்கள தேசத்தின் தெருவோரங்களில் தமது வாழ்க்கையை நகர்த்துகிறார்கள். கொழும்பு நகரத்தை மையப்படுத்தியே இத்தகைய பெரும்பாலான சிறுவர்களின் காலம் மோசமான நிலையில் கழிந்து கொண்டு இருக்கின்றது.

அனேகமான தெருச்சிறார்கள் தங்களுடைய அன்றாட நாட்களை காலை ஆறு மணிக்கு வேலை தேடுவதோடு ஆரம்பிக்கின்றனர். அவர்களின் செயல்கள் கொள்ளையடிப்பது, பிச்சையெடுப்பது போதைவஸ்து விற்பது என விரிந்துகொண்டே செல்கின்றன. நடைபாதையையே உறங்கிடமாகக் கொண்ட இந்தச் சிறுவர்களில் கணிசமானவர்கள் மாலையானதும் காலிமுகத் திடலெங்கும் அலைந்து திரிவதை நாம் காணலாம்.

இத்தகைய சிறுவர்களில் பெரும்பாலானவர்கள் குடும்ப வறுமை காரணமாயும், சுமார் ஐயாயிரத்துக்கும் மேற்பட்டவர்கள் தாய் இறந்த பின் தந்தை மறுமணம் செய்துகொள்வதனாலுமே தெருவுக்கு வர உந்தப்படுகின்றார்கள்.

நகரப் பகுதிகளை அண்டிய பகுதிகளில் கொடிய சமூகவிரோத கும்பல்களினால் தவறான முறையில் அவர்களது பிழைப்பிற்காகப் பயன்படுத்தப்படுகின்ற கொடுமையும் கூர்ந்து கவனிக்கப்பட வேண்டியதாகும். குறிப்பாக கொழும்பு நகரத்துக்குள் மட்டும் இவ்வாறான ஏழு சமூகவிரோதக் கும்பல்கள் செயற்படுவதாக அறியமுடிகின்றது. இதில் மிக அபாயகரமானதாக அமைவது என்னவென்றால் இந்த சமூகத் துரோகிகள் தமது கட்டுப்பாட்டுக்குள் வைத்திருக்கும் சிறுவர்களை தன்னினச் சேர்க்கையில் ஈடுபடவைத்து அதன் மூலம் ஏராளமான பணம் சம்பாதிப்பதாகும். மேலும் பால் இனக்கவர்ச்சி தொடர்பான புகைப்படங்கள், நூல்கள், ஒளி இழைப் படங்கள் என்பனவும் புற்றீசல் போல் கிளம்பியுள்ளன.

சிறீலங்காவை நோக்கிச் செல்லும் உல்லாசப் பிரயாணிகளில் கணிசமானவர்களை மேற்படி கும்பல்கள் தமது வலைக்குள் சிக்கவைத்து வருகின்றன. தன்னினச் சேர்க்கை என்ற கேவலத்துள் தள்ளப்பட்ட சிறுவர்கள் இப்படியே கவனிப்பாரற்று விடப்படுவார்களேயானால் ஒட்டுமொத்த சிங்கள மக்களின் வாழ்வு சூனியமாகி ஒரு சீரழிந்த சமூகம் உருவாகும் என்பதை எதிர்பார்க்கலாம்.

இனவெறி பிடித்த சிங்கள அரச இயந்திரமானது தமிழ்மக்கள் மீது குண்டுகளை வீசியும் அப்பாவித் தமிழ் மக்களைக் கொன்றொழிப்பதன் மூலமும் தனது இராணுவத் தோல்விகளை மறைத்துக்கொள்ள முயல்கிறது. தமிழீழ மக்களுக்கெதிரான அரசாங்க நடவடிக்கைகளை சிங்கள மக்கள் கண்டிக்கத் தவறுகின்ற வரலாற்றுத் தவறினைப் புரிந்தாலும் கூட சிங்கள மக்களின் சுபீட்சமான வாழ்வு குறித்து தமிழீழ தேசம் அக்கறையுடன் உள்ளது என்பதை அவர்கள் உணர்ந்துகொள்ளல் வேண்டும். இனவாதச் சேற்றுக்குள் மூழ்கியிருக்கும் சிறீலங்கா அரசு ஒருபோதும் இவற்றைக் கண்டுகொள்ளப் போவதில்லை. ஆனால் சிங்களரும் தங்கள் தலையில் சேற்றை வாரி வீசப் போகிறார்களா?

www.tamileelamarchive.com

தமிழீழ ஆவணக் காப்பகம்

# மண்ணின் குஞ்சுகள்



ஓயாது அலை எழும் கடற்கரையில், தென்னை மரங்களும் காற்றுக்கு ஆடுகின்றன. ஜீவ உயிர்ப்பு எங்கும் நிறைகிறது. இந்தச் செல்வங்களை எவரும் சிறைப்பிடிக்க முடியாது.

உப்பு நீரில் குளித்து உயிர் கலந்து சிரித்து மகிழ்ந்தாடும் மண்ணின் குஞ்சுகள்.

புக்காராவும், சியாமசெட்டியும் இவர்களின் வீட்டைச் சிதைத்தது. இருந்தும் இந்தக் குஞ்சுகள் ஓடிச் சிறகசைக்கின்றனர். போருக்குள் வாழ்ந்து புயலாய் நிமிருகின்ற குணம் இயல்பாய் இவர்களுக் குள்ளும் எழுந்தது. எந்தப் பெரிய துயரையும் இவர்கள் கூட்டாய்த் திரண்டு வெல்லுவர். இவர்களில் அந்தோ ஒருவன் பாறையைத் தகர்த்தான்.

எழுகின்ற இளைய ஞாயிற்றுச் சுடர்களைக் கண்டு கடல் நீர் சிந்துகின்றது.

-நிதர்சன்-

www.tamileelamarchive.com

தமிழீழ ஆவணக் காப்பகம்





www.tamileelamarchive.com

தமிழீழ ஆவணக் காப்பகம்

# மண்ணில் எல்லாம் உயிர்த்திருக்கு

## சிறுகதை

-சுபா-

ஊரில் நான் இவனைக் கண்டிருக்கிறேன். ஆனால் இப்படிக் காணவில்லை.

ஜீவகளை அற்றுப் போய் இருந்தான். மண் ஒட்டின பேச்சும் பூமலர்வும் புன்னகையும் தொலைந்துபோய் வருத்தப்படுபவன் போல...

ஓடிக்களைத்துப் போய் அடிதடி பட்டு முறிந்தவனைப் போல... தொடர்ந்து என்னால் அவனைப் பார்க்க முடியவில்லை. அவனில் நிலைத்த எனது பார்வையை, திசை திருப்பமுயன்றேன். எனினும் முடிய வில்லை.

அவனிருக்கின்ற ஸ்ருடியோவின் தெருவோரமாயிருந்த சுவர் பாசி படர்ந்து போயிருந்தது, எந்நேரமும் ஈரலிப்பாக இருக்கிற தரைகளில், பாசிபடர்வது போல. சுவரில் ஒட்டியிருந்த பேப்பர் கிழிந்துபோய்க் கிடந்தது. அது ஒரு இளைஞன் தன் தலையைப் பிய்த்துக் கொண்டி ருக்கும் விதத்திலும்- இன்னும் பல விதமான கற்பனைகளை பார்ப்பவர் கண்களுக்கேற்ற விதத்திலும் சொல்லிக்கொண்டிருந்தது.

மாலை மூன்று மணிக்கு மேலாகியிருந்தது. பொழுது ஒரே மூட்டமாக இருந்தது. காற்று வீசவில்லை. திடுத்- திடும்; திடுத்- திடும்; திடுத்- திடும்; மாடிப்படிகள் அதிர்கின்ற சத்தம். சிவம் இருந்த ஸ்ருடியோவை நோக்கி வரவரச் சத்தம் அதிகரித்துக்கொண்டு வந்தது.

கதவைத் திறந்துகொண்டு மூச்சிரைத்தபடி குமார், மதி, நடா மூவரும் நுழைந்தனர். இன்னும் இரண்டுபேர் வர இருக்கிறார்கள். அவர்களும் றெஸ்ரோறன்ற் ஒன்றில் தான் வேலை பார்க்கிறார்கள். அவர்கள் ஒவ்வொருவருக்கும் ஒவ் வொரு பிரச்சினைகள். மீளமுடியாக் கடன் பளு வேறு. வீடு, தாய், தகப்பன், இனம், சனம் என்று விரிகிற உறவும் இருக்கிறது. அவர் கள் தனித்தவர்களல்ல.

சிவம் படபடத்துக்கொண்டு அமைதியின்றித் தவித்தான். ரெலி போன் அடித்து ஓய்ந்துவிட்டிருந்த போதும் அவனுக்கு அந்தச் சத்தம் எரிச்சலைக் கொடுத்தது.

"இந்த ரெலிபோனைக் கழட்டி விடுங்கப்பா" குமார் சத்தம் வைத் தான்.

"அவன்தான் அடிக்கிறான்- ஒருநாள் பொறுக்கமாட்டான்ரா- றூமைப்பார்.. கிடக்கிற கேவலத்தை... அதைப்பற்றி அவனுக்கு கவலையே கிடையாது. இன்சூரன்ஸ் கட்டுறம்... சேர்விஸ் சார்ஜ் கட்டுறம்... அது, இது எண்டு அறுத்துத் தொலைக் கிறான்."

"நல்லாப்படிச்சிற்றாங்களடா" சிவத்தைக் குறுக்கிட்ட மதி "யாரை.. எங்களையல்லோ!"

ரெலிபோனைக் கழட்டி வைத்துவிட்டு கூண்டுக்குள் அடை பட்ட சிங்கம் மாதிரி நின்ற சிவம், திரும்பவும் "நல்லாப்படிச்சிற்றாங் களடா" எரிச்சலும் சினமுமாகக் கத்தினான்.

"இப்ப ஏன் கத்துற- இஞ்ச நிண்டு புலம்பினா அவனுக்கு தெரியுமே, விடன்" எனச் சொல்லிக் கொண்டே குமார் சலிப்போடு முகத்தை செற்றிக்குள் புதைத்துப் புரண்டு படுத்தான்.

சிவத்துக்கு உள்ளுக்குள் கொதிப்படங்கவில்லை.

''றெஸ்ரோறன்றில பத்திறோனோட பிரச்சினைப்பட்டு வேலையை விட்டுட்டு வந்திட்டன். மனுஷரா நினைக்கிறாங்களில்ல."

வேதனையின் சுரத்தோடு பிறந்த அந்த வார்த்தைகள் ஸ்ருடி யோவுக்குளிருந்த நடா, மதி, குமார் எல்லோரையும் அவனை நோக்கித் திருப்பின.

"என்ன சிவம் நடந்தது" மதி எழுந்துகொண்டே கேட்டான். "என்ன நடந்தது" குமார் புருவத்தை உயர்த்தி நடாவைப் பார்த்தான். நடாவும் தனக்குத் தெரியாது என் பது போல தோளைத் தூக்கினான்.

"ஒண்டுமில்லை"

மூசி எழுந்த ஆத்திரத்தை அடக்கியபடி யன்னலைத் திறந்தான் சிவம். குளிர்ந்த காற்று முகத்தில் அடித்தது. காற்று வெளியோடு முகத்தை நிமிர்த்தியபடி நிமிர்ந்து

www.tamileelamarchive.com

தமிழீழ ஆவணக் காப்பகம்



நின்றான். குமார் ரி.வி.யை மட்டும் நிறுத்திவிட்டு சினிமாப்பாடலை மெல்லிதாக ஒலித்தபடி இருக்க விட்டான். ஒவ்வொருவரும் தங்களுக்குத் தெரிந்து தாங்கள் அனுபவிக்கின்ற துன்பத்திலும் பார்க்க அவன் ஒன்றும் புதிதாய் சந்தித்திருக்கமாட்டான் என்ற நம்பிக்கையில் சற்று ஆறுதலாய்த்தான் இருந்தார்கள்.

சிவத்தின் தாய்தகப்பனுக்கு ஊரில் பெரியதோட்டம் இருந்தது. இரண்டோ மூன்றுதரம் இந்திய இராணுவம் தக்காளிப்பழங்களையும் வாழைக்குலைகளையும் திருடிக் கொண்டு போயிருந்தார்கள். சப்பாத்துக் காலடிகளால், பன்றி உழக்கினது மாதிரி மிளக்காய்ப் பதியங்கள் அழிந்துபோய் கிடந்தன.

பக்கத்து வீட்டுக்குள் அத்துமீறிப் புகுந்து ஒரு இளைஞனை பிடித்துக்கொண்டும் போயிருந்தார்கள்.

"நீ ஓடய்யா! நீ ஓடு. நாங்கதான் வாழ்ந்துமுடிஞ்சுது, நீ வாழுறபிள்ளை" என்று ஒரே பிடியாக நின்று சிவத்தை அவன் தாய் இங்கு அனுப்பிவைத்திருந்தாளாம். அது அவனுக்கு வேதனைதான்.

"அப்பு ஆச்சியோடு இல்லாம எனக்கொரு வாழ்க்கை" வெப்ப மூச்செறிய அடிக்கடி சொல்லுவான்.

அதென்ன, தோட்டமே?

பைபிளில் வருகிற சொர்க்கம் மாதிரித்தான்.

நிமிர்ந்து ஓங்கி உச்சிவானில் சதிராடுகிற தென்னை, அதன் அருகே வாழை, வாழைக்கு கீழே இஞ்சி, தோடை, எலுமிச்சை, பூச்சொரியும் செவ்வந்தி, தலை வாய்க்காலால் புல்லுக்கும் பொசிந்தபடி ஓடிவருகிற தண்ணீர் சிறுகற்களையும் உருட்டி வருகிற சத்தம்; நெஞ்சைத் தொடுகிற மைனாவின் கீதம், கிளிகளின் காற்றில் மிதக்கிற காதல் மொழி.

அவன் அன்பு செலுத்துகிற யாவும் அங்கே இருந்தது.

"டேய் தம்பி சிவம்! பாத்தி



# விறகு!

விறகுகட்டி விரைகிறாய்
விநாசித்தம்பி
விறகாகிப் போனது நீயும்தானோ?
இது என்ன...
செறிவாழை போலிருந்த
சிகப்பு மேனி
உரமேறிப் போச்சா இல்லை
உருக்குலைந்து போச்சா?
நரம்பெல்லாம் முறுக்கேறி
நாட்டுத் தெருக்கள் போல்
வரம்பெல்லாம் விழுகிறது!
வந்தது என்ன?
ஒருவேளை கஞ்சிக்கும் ஆச்சி
உணவில்லை என்றாளா..?
ஒருநாளும் இருக்காது!..
கறிவாழை உண்டு..
கல்லுப் புளித்து சட்டிக்
கரணை விளைகிறது!
அல்லும் பகலும் வயல்வாய்க்கால்
இன்னும் நீர் பாய்கிறது!
பீற்றூட்டு தக்காளி வெண்காயம்
ஏற்றுமதி இல்லாமல் மிதக்கிறது...
ஆம் தம்பி...
புலித்தமிழன் ஆனபினபு
எலிப்பொறிகள் என்ன செய்யும்?
விறகில்லை வெளிச்சமில்லை
விரைவு வண்டிக்கு
எரிபொருள் இல்லை...
இந்தத் தடைகள் எந்த
மூலைக்கு...?
உன் சொந்த
மிதிவண்டிக்கும் மிதித்தோடும்
கால்களுக்கும் தேச
விதி செய்யும் வலிமை உண்டப்பா!
தோற்றது தேசமல்ல...
போர்ப் புத்தன் தானப்பா!
வேர்த்தோடிப் போன தமிழர் பலர்
வெளிநாட்டில்
வார்த்த கணக்கிற்கு
வசை பாடக் கண்டேன்...
நீயோ உன் தேசக்
காற்றைக் குடிப்பவன்
கட்டிரும்பாய் இன்னும்
கட்டுக்குலையாமல் காவல்
நடக்கிறது
ஓடு... ஓடு... ஓடிமிதி வினாசித்தம்பி
உன் ஓயாத கால்கள்
ஓய ஒருபொழுது உண்டு!
அன்று உன் தேசச்
சுதந்திரத்துள் நீயே
மிதந்து நிற்பாய்!

- புதிய பாரதி -

www.tamileelamarchive.com

தமிழீழ ஆவணக் காப்பகம்

முட்ட தண்ணிவிட்டுக் கட்டு"

தோட்டத்தில் இடையிடையே உரத்துக் கேட்கிற அப்புவின் குரல்.

"வந்திட்டுப் போங்கோவன். காத்துக்கு ஆறவெல்லே போகுது."

"இந்தா மோனே, சக்கரை யோடதான்... குடி! சங்கத்துக்கு இன்னும் சீனி வரேல்லையாம்."

சிவத்தின் தலையைக் கோதி விட்டபடியே

"ஐயா! களைப்பாயிருக்கே? அப்புவிட்ட சொல்லிப்போட்டுப் போவன், போறதெண்டா... பெடிய ளோட விளையாடப்போறதெண் டெல்லே கேட்டனி. போயிற்று வாவன்."

தாய் வந்து ஒத்தடம் இட்டுப் போனது மாதிரி நினைவில். நினைவில் தான் எங்கேயும் போய்வரலாம்.

ஜெட் வேகம்! என்ன ஜெட் வேகம்.

மெல்லிதாய் ஊதுகிற காற்றில் தாயின் குரல் மிதக்கிறதாய் அவன் நெஞ்சுக்குள் ஒலித்தது. அதற்குள் தான் வலியும் இருந்தது.

"முப்பது வயதும் தாண்டிப் போயிற்று. வேளைக்குப் பிள்ளைக்கு முடிச்சுப் போடவேணும். அவன்ரை வாழ்க்கைக்கு துணையாய் ஒருத்தி வேணாமோ?"- தான் அப்புவோட சண்டையிட்டபடி இருப்பதாக ஆச்சி அவனுக்கு கடிதம் எழுதியிருந்தாள்.

"அப்புவோட நீ சத்தம் போடாத- எனக்கு இப்ப அப்படி ஒரு அவசரமும் இல்லை" பதிலுக்கு சிவம் இப்படி எழுதினான்.

"இந்த அடிமைக்கு ஒருத்தி. இந்த வாழ்க்கையை நினைச்சுத்தான் 'வேணாம், வேணாம், இப்ப ஒரு அவசரமும் இல்லை' எண்டு எழுதிறனான்." என்று சிவம் என்னிடம் கூறுவான்.

"நாட்டுக்குப் போய்த்தான் எல்லாம்" அடித்துச் சொன்னான். அவனுடைய ஆச்சிக்கும் இப்படி எழுதியிருக்கிறான்.

"இப்படி நீ எழுதி எழுதியே எத்தனை வருசமாச்சையா? இது இப்போதைக்கு நடக்கிற காரியமாப் படேல்ல. இந்தக் கட்டையள் கண்குளிரப் பாத்திட்டுப் போகோணும், நீ சீரும் சிறப்புமாய் இருக்கிறதை."

ஆசை பொங்க வேதனை மூச்சு வாங்க எழுதிய கடிதத்தை மடித்து 'பொக்கெட்க்குள்' வைத்துக்கொண்டு திரிந்தான்.

"ஆச்சி! இஞ்சயணை... வருஷம் போகுதே? தொலையுது! நீ ஏனெணை தோட்டத்துக் காணியை வித்தனீ? நான் அங்க வந்து என்ன செய்யிறது? தோட்டத்துக் காணியை, வித்த காசிலும் கொஞ் சக்காசு கூடக்குடுத்து, திருப்பிக் கேட்டுப் பாரணை- எனக்கு சரியான கவலையாய்கிடக்கு."

"இஞ்ச ஆரு மோனை பவுத்திரப்படுத்த? அப்பு பாரிச வாதம் வந்து படுத்தபடுக்கையாய் போயிற்றார். நானும் கிழவி. நீ எழுதினதை அப்புவிட்டச் சொன்ன னான். அப்பு இனி நீ வந்து துலா மிதிப்பியே எண்டு கவலைப் படுறார்- நீ போய் ஆறு வருஷத் துக்கு மேலாச்சு. மாறிப்போயிருப்ப. அதுதான் அப்புவுக்கு பயமாக் கிடக்கு. இருக்கிறதை செப்பனிடுவம் எண்டு நிக்கிறார்."

இந்தக் கடிதத்தோடு தான்

## பூங்கரம் நீட்டிய பிள்ளை

கடல்மண்டு தோணியின் படைமுகந் தொலைத்து
அடல் வென்ற எங்கட அண்ணை
பூநகரிப் போரில் வாங்கிவந் ததென்னெனப்
பூங்கரம் நீட்டிய பிள்ளைக்(கு)
ஆயிரம் காடையர் தலைகள் பறித்தும்
ஆயுதங் கோடி யெடுத்தும் விலையிலா
மானம் வாங்கிவந்தேன் என்றனன்
ஆனதோர் புலிபடையில் எங்கட அப்பனைக்
கண்டியோ என்றனன் பிள்ளைதான்
உறைதயிர் கலக்கும் ஆய்ச்சிகை மத்தென
பறையொலி கேட்டுப் பாய்ந்திடுங் காளையாய்
படைமுகங் கலக்கியங்கு வெற்றி
நடைபயின்றான் நுந்தை அவன்தன் கைப்படை
தீர்ந்த தாலே தானே யோர்படைக்
கருவி யாகிச் சரித்திரம் படைத்தான்
தமிழீழப் பொன்னேட் டிலென்றான்

கண்ணிமை சிமிட்டும் வேளையில் பிள்ளை
உமிக்குள் அரிசியாய் உறைக்குள் வாளாய்
சிமிழ்க்குள் சாந்தாய் நானிருந் தாவதென்ன
நமக்குள உரிமைப் போரில் குதித்து
நானோர் படைவீர னாவேன் இன்றே
"துவக்கு வேண்டும் அண்ணை" என்றான்
துவக்கெனத் தந்தா னவனும்
தூய்தமி ழீழம் தோன்றிய தங்கே.

-காவிரிநாடன்-

**அச்சுப்பிழை காரணமாக ஏற்பட்ட தவறால், பங்குனி-1994 இதழில் வெளியாகியிருந்த இக்கவிதையின் பிற்பகுதி விடுபட்டிருந்தது. வாசகர்களின் வசதி கருதி அவற்றை முழுமையாகப் பிரசுரிக்கின்றோம்.**

www.tamileelamarchive.com

தமிழீழ ஆவணக் காப்பகம்



சிவத்துக்கு விசர் வந்தது.

"இனி கிறிக்காரனோடதான். அவனோட நிண்டு பண்டியைக் கழுவேத்த வேண்டிதுதான். மனுஷன் செய்வானே?"

சினந்துகொண்டு வேலையில் நின்றுகொண்டிருந்தான் சிவம்.

சுற்றுலாப் பயணிகள் அற்று வீதி வெறிச்சோடிக் கிடந்தது. றெஸ்ரோரன்ரில் கிறீக் பாடல் ஒலித்தபடி இருந்தது. கரியை அள்ளிப்போட்டு நெருப்பை மூட்டிக்கொண்டே 'சுடலை காக்கலாம்' எனச் சினந்தான்.

"வந்து துலா மிதிப்பியே" இளக்காரமாய்ப் போச்சுது அப்புவுக்கு.

சிரிப்பில்லை. சிவம் வாடிப் போயிருந்தான்.

பத்திறோன் வாசலில் கால் வைத்ததும் வைக்காததுமாக சிவத்துடன் ஏறிவிழுந்தான்.

"விருப்பமில்லையெண்டால் விட்டிட்டுப் போ! கதவு திறந்து கிடக்கு"

"கதைக்கு கதை சொல்லி என்ன? பேசாமலிரு!" சிவம் சிவத்துக்குச் சொன்னான்.

பன்றியைச் சுற்றி நெருப்புக் கிளைகள் சுற்றிப்பிடித்தன.

சிவன் செத்தவன் போலிருக்க முயற்சித்தான்.

அவனுக்கு 'வயிரவர்' வருவது வழக்கமாம்.

ஆச்சி சிறுவயதிலேயே அவனுக்கு நேர்த்தி வைத்து வைரவருக்குப் பொங்கலிட்டு, வடைமாலை சாத்தி "வயிரவரே நீ வராமல் விடு" என்று வேண்டி வருடா வருடம் நூல்கட்டி விடுவாள். இப்போது வருவது அருமையாம்.

வந்தால்..

பிறகென்ன?

பிரளயம்தான்.

"கதவு திறந்துதான் கிடக்கு" சிவத்தின் பத்திறோன் கத்தினான்.

## தோல் பதனிடல் முயற்சி வெற்றி

**உள்ளூரில் கிடைக்கின்ற தோல்களைப் பதனிடும் முயற்சி குறிப்பிடத்தக்க வெற்றியடைந்துள்ளது. மேலும் பதனிடப்பட்ட தோலில் இருந்து தற்போது பல்வேறு பொருட்களும் உற்பத்தியாக்கப்படுகின்றன. இவ்வாறு பொருண்மிய மேம்பாட்டு நிறுவனத்தின் கைத்தொழில் பகுதியினர் தெரிவித்துள்ளனர்**

அங்கு வேலைசெய்பவர்கள் எல்லோரும் நிலை எடுத்தபடி பார்ப்பதற்கு வசதியாக நின்றுகொண்டிருந்தார்கள்.

"யார் சொன்னது பூட்டிக் கிடக்கெண்டு?"

"நீ வெளியே போ" திரும்பவும் கத்தினான்.

"வாயால கத்திச் சரிவராது எழுதித் தா" சிவம் கேட்டான்.

'புதுசா நானும் இனி முப்பது இலட்சத்தில ஒண்டாச் சேரவேண்டியதுதான். ஒருநாள் வேலைக்கு வராமல் விட்டதுக்காகவா இவன் இப்படிக் கத்துறான்' சிவம் யோசித்தபடி நிற்க,

புதிதாக வேலைக்கு வந்திருந்த போத்துக்கல்காரன் மிகைல் பம்பரமாய் சுழன்றுகொண்டிருந்தான். கழுவேற்றுகிற கம்பிகளை மினுங்க மினுங்க தேய்த்துக்கொண்டு. சிவம் ஒரு புன்சிரிப்பை உதிர்த்து அவனைக் கேள்வியோடு பார்த்தான்.

பத்திறோனைப் பார்த்து தனக்குள் 'என்னடா?', இவன் தண்ணியடிக்காமலே உசாரா நிண்டு கத்துறான் எண்டு நினைச்சன். இப்பத்தான் விளங்குது ஏன் உசாரா நிற்கிறானெண்டு. அட்டைப் பேர்வளியள். மாற்றான் கிடைச்சிட்டுதல்லோ!'

"நீ வா வெளியே"... கேட்க நினைத்தவன் சட்டப்படியே போவோம் என அடங்கினான். அவன் அங்கு நின்றுகொண்டிருக்க, பத்திறோன் அவனை "வெளியே போ" என கழுத்தைப் பிடித்துத் தள்ள வந்தபோது

"முதலில் நீ என் கணக்கை முடியடா" மிகக் கடுமையான உரத்த, உக்கிரமான, இதுவரை அவன் கேட்டிராத ஒரு புதிய தொனி, புதிய வேகத்துடன் அவன் செவிப்பறைகளில் மோதியது.

சட்டப்படி நடவடிக்கை எடுப்பது தொடர்பாக, வேலைகள் சம்பந்தமாக முறையிடும் இடத்திற்கு போய் வாசலில் நின்றவன்- வேண்டாம் என்று திரும்பி வந்திருந்தான்.

திறந்திருந்த யன்னலினூடாக குளிர்காற்று மோதியபடி... அதன் விசைக்கெதிராக முகத்தை நிமிர்த்தி நின்றிருந்தான் சிவம். இன்னும் அவன் நெஞ்சை அழுத்தமாக நெருடியபடி அப்பு, ஆச்சியைப் பிரிந்த துயர்தான் இருந்தது.

"தம்பி, களைப்பாயிருக்கோடா, அப்புவுக்கு சொல்லிப்போட்டு பொடியளோட விளையாடப்போற தெண்டெல்லே கேட்டனீ. போய்வா. போ. போய் விளையாடிற்று வா."

ஆச்சியின் அந்த ஜீவ வார்த்தை இப்போது அவனைப் புதிதாக, புதிய உணர்வுக்குள் அழைத்துச் சென்றது.

சிவத்தின் முகத்தில் ஜீவகளை தொற்றியது.

"எது நடந்த போதும்

அந்தத் தோட்டமும், துரவும்

வயலும், வரப்பும்

அந்த மண்ணும் எல்லாம் உயிர்த்திருக்கு.

எது நடந்தபோதும் மண்ணில் எல்லாம் உயிர்த்திருக்கு"

சிவம் சொல்லிக்கொண்டெழுந்தான் துயரை வெல்ல.

www.tamileelamarchive.com

தமிழீழ ஆவணக் காப்பகம்

# சமூகத்தின் உள ஆரோக்கியத்தைப் பேணுவதில் கலைகளின் முக்கியத்துவம்

ஒரு மனிதன் உடல், உள, சமூக, ஆத்மிக நிலைகளில் தான் அடையக்கூடிய அதி உன்னத நிலையில் இருக்கும் போது, அவன் ஆரோக்கியமான மனிதன் என்று கருதப்படுகிறான். மேலே கூறப்பட்ட நான்கு நிலைகளும் ஒன்று மற்றொன்றில் தங்கிநிற்கும் தன்மை வாய்ந்தன. ஆகவே ஒரு மனிதனுடைய உள ஆரோக்கியம் பாதிக்கப்படும்போது அவனது உடல்நிலை, சமூக நிலை போன்றனவும் தாக்கமுறுகின்றன. இதற்கு மறுதலையாக ஒருவனது உடல்நிலை, சமூகநிலை அல்லது ஆத்மிக நிலை ஆட்டம் காணும் போது, அவனது உள்ளம் பாதிக்கப் படுவதும் தவிர்க்கமுடியாததாகிறது.

மனித மனத்தின் செயற்பாடு களையும், மனித நடத்தையையும் பற்றி ஆராயும் அறிவியல், உளவியல் என்று கூறப்படும். (கிரேக்க மொழி யில் Psyche- என்றால் மனம், Logus- என்றால் விஞ்ஞானம்) விஞ்ஞானம் என்பது வெற்றிகரமாகச் செய்து முடிக்கப்பட்ட செய்முறைகளின் தொகுப்புத்தான் என்று பிரெஞ்சு தத்துவஞானி வலேரி கூறுவார். ஆகவே உளவியலும் பரிசோதனை ரீதியாக நிரூபிக்கப்பட்ட கருத்துக் களையே முன்வைக்கும்.

எமது உடல் ஆரோக்கியமாக இருப்பதற்கு எப்படி அதனுடைய முக்கியமான சில தேவைகள் நிறை வேற்றப்பட வேண்டுமோ அது போலவே எமது உள்ளமும் அதனு டைய தேவைகள் பல நிறைவேற்றப் படும்போதுதான் ஆரோக்கியமாக இருக்கும். உள்ளத்தின் தேவைகள் பலவாக இருப்பினும் உணவு, உடை, உறையுள், பாதுகாப்பு, அன்பு போன்றவை மிக அடிப்படையான சில தேவைகளாகும். இத்தேவைக ளைத் திருப்திகரமாக நிறைவேற்று வதில் பல சிக்கல்கள் ஏற்படும் போது, உளம் தனது ஆரோக் கியத்தை இழந்துவிடக்கூடிய அபாயம் தோன்றுகிறது.

எமது மனம் கடலில் மிதக்கும் பெரிய பனிக்கட்டி போன்றது என்று உளவியல் அறிஞர்கள் கூறுவர். கடலின் மேற்பரப்பில் தெரியும் நனவு மனம் மொத்த அளவில் பத்திலொரு பகுதி மாத்திரமே. மிகுதியான பத்திலொரு

**கோகிலா மகேந்திரன்**

பகுதியும் நனவிலி மனம் என்ற பெயரில் வெளியே தெரியாது கட லின் உள்ளே அமிழ்ந்து கிடக்கும். ஆகவே சில சமயம் நனவு மனம் ஆரோக்கியமாய் இருப்பதாகப் பாவனை காட்டிகொண்டிருக்கும் போது நனவிலி மனம் பாதிக்கப் பட்டு மூழ்கிக் கிடக்கும்.

உள்ளத்தின் பாதிப்பானது நரம்புத்தொகுதி மூலமும் அகஞ் சுரக்கும் சுரப்பிகளின் தொகுதி மூலமும் உடல் பாதிப்புக்களைத் தோற்றுவிக்கும். அவை தலையிடி, தலையம்மல், கபாலக்குத்து, பார்வை மங்கல், கண்குத்து, காதுகேளாமை, வாய் உலர்தல், விழுங்க முடியாமை, மூச்சுத்திணறல், மூச்சு வாங்கல், படபடப்பு, நெஞ்சுநோ, வயிற்றுநோ, நாரிநோ, கைகால் விறைப்பு, மலச் சிக்கல், குளிர், அடிக்கடி சிறுநீர் கழிக்கும் உணர்வு, சல எரிவு போன்ற பல்வேறு குணங்குறிகளாக வெளித்தோற்றலாம். தொய்வு, எக்சிமா, அல்சர், உயர் குருதி அமுக்கம், இதயநோய் போன்ற வருத்தங்களுக்கும் உள ஆரோக்கியப் பாதிப்புக்கும் தொடர்பு இருக்க லாம்.

ஆரோக்கியமாக இருந்த உள்ளம் திடீரெனத் தனது சமநிலையை இழந்து போவதற்குப் பெரும்பாலும் நெருக்கீடுகளே காரணமாகும். இந்த நெருக்கீடுகள் இழப்புக்களாக அல் லது மாற்றங்களாக இருக்கும். கண வன் அல்லது மனைவியின் இறப்புப் போன்ற வலிமையான நெருக்கீடு நூறு புள்ளியைப் பெறுமாயின், நெருங்கிய ஒரு குடும்ப அங்கத்த வரின் பிரிவு எழுபத்தைந்து புள்ளி யையும், வருத்தம் அல்லது காயம் ஐம்பத்திமூன்று புள்ளியையும், வேலை இழப்பு நாற்பத்தேழு புள்ளியையும் பொருளாதார மாற்றம் முப்பத்தெட்டுப் புள்ளியை யும் வேலைத்தல நெருக்கடி இருபத்திமூன்று புள்ளியையும், வீடு மாற்றம் இருபது புள்ளியையும், நித்திரை நேர மாற்றம் பதினாறு புள்ளியையும் பெறும் என்று உளவியல் அறிஞர் கணித்துள்ளனர். ஆகவே ஒரு மனிதனுக்கு ஒன்றுக்கு மேற்பட்ட நெருக்கீடுகள் ஒரே சமயத்தில் தோன்றும்போது நெருக் கீட்டுப் புள்ளியின் பெறுமானம் திடீரென்று உயர்ந்துபோக அவனது உள ஆரோக்கியம் பாதிக்கப்படும் நிலை தோன்றுகிறது. போர்ச்சூழ் நிலை ஒன்றில் இவ்வாறான நெருக்கீடுகள் பல ஒரே சமயத்தில் நடைபெறுவதற்கான நிகழ்தகவு பெருமளவுக்கு அதிகரிக்க, உள ஆரோக்கியத்தை இழப்போர் எண்ணிக்கையும் அதிகரிக்கும் நிலை

www.tamileelamarchive.com

தமிழீழ ஆவணக் காப்பகம்



தோன்றுகிறது.

உள ஆரோக்கியப் பாதிப்பு வீச்சு, மனதை ஒரு நிலைப்படுத்தும் தன்மைக் குறைவு அல்லது மறதி என்ற தாழ் எல்லையிலிருந்து, உளமாய நோய் (Psychosis) என்ற உயர் எல்லை வரை பல படிகளில் காணப்படலாம். இவற்றில் உளமாய நோய்ப்படிக்குப் போய்விட்டவர்களுக்கு மட்டுமே கட்டாயமான உள மருத்துவச் சிகிச்சை தேவைப்படும். ஏனைய படிகளில் நிற்பவர்கள்தான் எண்ணிக்கையில் ஏராளமானோர். இவர்களைப் பழைய நிலைக்கு மீளக்கொணர்வதற்கும், இதுவரை உள ஆரோக்கியத்தைப் பேணி வைத்திருப்பவர்கள் எதிர்காலத்தில் அதை இழந்துபோகாதிருப்பதில் உதவி செய்வதற்கும் கலைகள் மிகவும் உதவும்.

ஒருவருக்கு ஒரு இழப்பு அல்லது மாற்றம் ஏற்படும்போது அவர் அதைப்பற்றி பலமுறை நினைத்துக் கொள்கிறார். அந்த நினைவுகளின் எண்ணிக்கையைக் குறைக்க முடியுமாயின் உளப் பாதிப்பைக் குறைக்கலாம். இந்த இடத்தில் எமக்கு மிகவும் உதவக்கூடிய ஒரு விதி உண்டு. "மனித மனம் குறித்த ஒரு கணத்தில் இரண்டு விஷயங்களைப் பற்றி நினைக்க முடியாது." என்பதே அந்த விதி. ஆகவே வேறொரு விஷயத்தில் மனித மனத்தை ஆழமாகச் செலுத்திவிடுதலே இழப்பைப் பற்றி அது அடிக்கடி நினைக்காதிருக்கச் செய்யக்கூடிய மிக இலகுவான வழிமுறையாகும் (Keep Occupied).

"வேதனைப்படுவதன் இரகசியம் என்னவென்றால், நீங்கள் சந்தோசமாக இருக்கிறீர்களா இல்லையா என்று ஆராய்வதற்கான ஓய்வுநேரம் உங்களுக்குக் கிடைப்பதுதான்." என்று பேர்னாட்ஷா கூறுவார்.

ஆராய்ச்சியாளர்களுக்கு உளப் பாதிப்பு நோய்கள் வருவது மிக அருமை என்று சொல்கிறார்கள். ஏனென்றால், அவர்களுக்கு வேறு விடயங்களைப் பற்றி யோசிக்க நேரம் இருப்பதில்லை.

உலக யுத்தகாலத்தில் சேர்ச்சில் ஒரு நாளுக்குப் பதினெட்டு மணி நேரம் வேலை செய்தார். "உலக யுத்தம் சம்பந்தப்பட்ட பொறுப்புக்கள் மீது நீங்கள் கவலைப்படுவதில்லையா?" என்று நிருபர் ஒருவர் கேட்டதற்கு, "அவ்வாறு கவலைப்பட எனக்கு நேரமில்லை" என்றார் அவர். உண்மைதான்! கவலைப்படுவதற்கு நேரம் தேவை என்பது மிக முக்கியம்!

மரியன். ஜே. டக்ளஸ் என்ற அமெரிக்கருக்கு ஐந்து வயது நிரம்பிய அழகு மகள் இறந்து போனாள். இந்த இழப்பைத் தாங்கிக் கொள்ள முடியாது அவர் மிகவும் தத்தளித்தபோது அடுத்த நெருக்கீடு வந்தது. ஏறத்தாழப் பத்து மாதத்தின் பின் அவர்களின் கடைசி மகளும் இறந்துபோனாள். உள்ளம் மிகவும் பாதிக்கப்பட்ட நிலைக்குத் தள்ளப்பட்டார் டக்ளஸ். ஆறுமாதங்கள் ஓடிவிட்டன. ஒரு விநாடி கூட டக்ளஸின் மனம் நிம்மதிப்படவில்லை. அதிஷ்டவசமாக, இறந்துபோன இரு பிள்ளைகளுக்குமிடையில் ஒரு மகன் இருந்தான். நாலுவயதான சுட்டிப்பையன். அவன் ஒருநாள் தந்தையாரைச் சிக்கெனப் பிடித்துக்கொண்டான். "நீங்கள் எனக்கு ஒரு வள்ளம் கட்டித்தர வேண்டும்" என்பது அவன் கோரிக்கை. டக்ளஸ் மறுத்துப் பார்த்தார். பையனோ விடாக்கண்டன். அரைகுறை மனதோடு வள்ளம் கட்டத் தொடங்கினார். வேலை முடிவதற்கு மூன்று

---

**பெங்களூர் சட்டக்கல்லூரி மாணவரின் 'தமிழின மாணவர் முழக்கம்' என்னும் சஞ்சிகையில் பிரசுரிக்கப்பட்ட 'எனது உயிரினும் மேலான தமிழ் மக்களே' என்ற கவிதையிலிருந்து....**

# போர்ப்படையே புலிப்படை

................ எழுந்தது போர்ப்படை
கதையும் கனவும் உண்மைகள் ஆயின
உள்ள களத்தில் ஒடுங்கிய தமிழீழம்
எல்லாத் திசையும் எழுந்து ஒலித்தது
களச்சாவிற் கூட முத்திரை பதித்தனர்
உலகமே தமிழனை உற்றுப் பார்த்தது
நாட்டின இலக்கணம் நாட்டப் பெற்றது
ஆயிரம் கைகள் அள்ளிச் சென்றது
பசிலன் உதைத்த உதையில் எதிரிகள்
குடல் அறுந்து குப்புற விழுந்தனர்
எப்படி நிகழ்ந்தது இத்தகு மாற்றம்
செப்படி வித்தையா? தெய்வத்தின் செயலா?
இல்லை,
முல்லை அரும்புகள் முரசு ஆர்த்தனர்
கொள்ளைபோம் எங்கள் தாயகம் என்றனர்.

## ஒன்றுபடுவோம்! ஓங்கிவிடுவோம்!!

உள்ளம் உயர்ந்து வர ஊக்கம் பெருகி வர
வெள்ளப் பெருக்குப் போல்
வெற்றி மிளிர்ந்து வர, காட்டும் வழி செய்து
கண்ணியத்தின் முன் நின்று
தமிழ்நாட்டுக்குப் பாடுபடும் நல்லோரே....
கதிரவன் வரவு கண்டு
கமலம் மலர்வது போல் உங்கள் வரவு கண்டு
இந்த மாணவர் உறவு கொண்டு வெற்றிபெற வாழ்த்துகிறேன்.

www.tamileelamarchive.com

தமிழீழ ஆவணக் காப்பகம்

மணித்தியாலங்கள் எடுத்தன. முடிந்தவுடன் அவர் ஒளிவெள்ளம் பாய்ச்சப்பட்டது போல் ஒன்றைப் புரிந்துகொண்டார். கடந்த ஆறுமாத காலத்தில் அவர் மனம் சற்று அமைதியாக இருந்தது, இந்த மூன்று மணி நேரத்திலும்தான்! உடனே அவர் தான் செய்யக்கூடிய வேலைகளை அட்டவணைப்படுத்திக் கொண்டார். காலைமுதல் நள்ளிரவு வரை வேலை செய்தார். மிக இலகுவாகத் தனது உளப் பாதிப்பிலிருந்து விடுதலை பெற்றார்.

இந்த வேலை ஒரு கலையாக இருக்கும்போது இரட்டிப்பு நன்மை ஏற்படுகிறது. "கலை என்பது வாழ்வை அழகுபடுத்துவது" என்று சொல்லுவார்கள். கவிதை எழுதுவது, கதை எழுதுவது, ஓவியம் வரைவது, நாடகம் நடிப்பது போன்ற செயற்பாடுகளில் ஒருவர் ஈடுபடும்போது, தேவையற்ற துன்பமான ஒரு நினைவிலிருந்து மனம் விடுபடுகிறது மட்டுமல்லாமல், இந்தக் கலை ஒரு மகிழ்வான சிந்தனையையும் எழுப்புகிறது. அதற்கு அந்தக் கலையின் அழகுணர்வு காரணமாகிறது. கலைகளைச் செய்வோரில் மட்டுமன்றிக் கலைகளைப் பார்ப்போரிலும், கேட்போரிலும் இந்த உணர்வு தொற்றிக் கொள்கிறது.

நத்தைகள் தமது உடலுக்கு ஊறு வருவதைத் தடுப்பதற்கு ஒரு பாதுகாப்புக் கவசம் வைத்திருக்கும். அதனை 'ஓடு' என்போம். எமது உடலுக்கு வெளியே அவ்வாறான உடற்கவசங்கள் இல்லை. ஆனால் உள்ளம் தனது பாதுகாப்பிற்குப் பல கவசங்களை வைத்திருக்கின்றது. இவை தற்காப்புக் கவசங்கள் எனப்படும்.

நெருக்கீட்டு நிலைமைகளை நாம் நேரடியாக எதிர்கொள்ளும் சூழல் தோன்றும் வரை இந்தப் பாதுகாப்புக் கவசங்களைக் கையாளலாம். இவற்றில் ஒன்று இடப்பெயர்ச்சி (Displacement) எனப்படும். ஒரு வழியில் செலுத்தப்படமுடியாத அல்லது திருப்திப்படாத உணர்வுகள் இன்னொரு வழியில் திசை திருப்பப்படுதலே இந்த

## அட்டைப்படம் சொல்லும் கதை

மண் குழைத்து,
வீடுகட்டி
விளையாடிக் குழந்தைகள்
ஓடிக்களைத்து
தாகமாயும் இருக்கிறார்கள்.
தளிர்மேனியை
வெய்யில் சுட்டிருக்கிறது
பனைமட்டை வேலி
என்றாலும் அதுதான்
பாதுகாப்பு.
எங்களின் வீரர்கள்
எங்காவது அருகே
போர்உலா வருவார்கள்
எனவேதான் குழந்தைகளால்
சிரிக்கமுடிகிறது.

இடப்பெயர்ச்சி ஆகும். இவ்வாறு திசைதிரும்பும் வழி ஒரு கலையாக இருக்குமாயின் அது மிகச் சிறப்பாகும். ஒரு இறப்பு மூலம் ஏற்படும் துன்பத்தை ஒரு ஓவியத்திலோ, இசையிலோ அல்லது நாடகத்திலோ வெளிப்படுத்தும் போது மனம் பெருமளவு அமைதிப்படுவதுடன் அப்போது தோன்றும் கலையும் மிகச் சிறப்பானதாக உருவாகிறது. கலையின் வெற்றி மனதுக்கு ஒரு புதிய உற்சாகத்தை ஏற்படுத்துகிறது. சிறந்த ஆங்கிலக் கவிஞனான மில்ரன் குருடராய் இருந்ததும், நல்ல இசை இணைப்பாளர் பித்தோவன் ஒரு செவிடராய் அமைந்ததும், ஹெலன் ஹெலர் பார்வையும் கேள்தகமையும் ஒருங்கே இழந்திருந்ததும், மிகச் சிறந்த நாவலாசிரியர் டோல்ஸ்டோய் பெருந்துன்ப வாழ்வு வாழ்ந்ததும், கூர்ப்புக் கொள்கையின் தந்தை டார்வின் குறைபாடுள்ளவராய் இருந்ததும் இந்த இடத்தில் நினைவு கொள்ளத்தக்கன. துன்பம் பல சமயங்களில் அருமையான விடயங்களை உருவாக்குகிறது. கலைகள் பல சமயங்களில் துன்பத்தைத் துடைத்து எறிந்து விடுகின்றன.

உளநலம் பாதிக்கப்பட்டோருக்கான சிகிச்சை முறைகளில் வெளிப்பாட்டுச் சிகிச்சை முறை என்பது ஒன்று (Expressive Therapy). இங்கே உளநலம் பாதிக்கப்பட்டவர்கள் தமது உணர்வுகளை நாடகம், கதை சொல்லல், எழுதுதல், சித்திரம் தீட்டுதல் போன்ற கலைகளின் மூலம் வெளிப்படுத்தத் தூண்டப்படுகிறார்கள். இந்த வெளிப்பாடு மட்டுமே அவர்களுக்கு ஒரு சிகிச்சையாய் அமைந்துவிடுகிறது.

நெருக்கீட்டு நிலைகளில் இருப்போரும் தமது உணர்வுகளை வெளிக்கொணர வழி இருக்க வேண்டும். கூட்டுக் குடும்ப அமைப்பு, கிராம அமைப்புப் போன்றவை குலையாமல் இருந்த போது நெருங்கிய உறவினர்களும் அயலவர்களும் ஒருவரில் ஒருவர் ஆழ்ந்த நம்பிக்கை கொண்டிருந்தனர். ஒருவர் பாதிக்கப்பட்டால் உடனிருத்தல், பக்கத்தில் நிற்றல், தொடுதல், தட்டிக்கொடுத்தல், தாங்குதல், அரவணைத்தல் போன்ற ஆறுதல் செயற்பாடுகளை உறவினரும் நண்பரும் செய்தனர். இன்றைய போர்ச்சூழலில் கூட்டுக்குடும்ப அமைப்புகள், கிராம அமைப்புகள் சிதறியுள்ளன. மனிதர்களின் 'தனிமை' அதிகரித்திருக்கிறது. நம்பிக்கைக்குரியவர்கள் அருகில் இல்லை. இந்த நிலையில் தனிமையிலும் ஆறுதல் அளிப்பவை கலைகளே யாகும்.

ஒரு மனிதனின் ஆளுமை அவனது பிள்ளைப் பராயத்திலேயே (ஐந்து வயதுக் கிடையில்) தீர்மானிக்கப்பட்டு விடுவதாய்க் கூறப்படுகிறது. ஒருவன் ஸ்திரமான ஆளுமை உள்ளவனாய் இருக்கலாம் அல்லது ஸ்திரமற்ற ஆளுமை உள்ளவனாகலாம். எப்படியிருப்பினும் அவனது உள ஆரோக்கியத்திற்குச் சாந்த வழிமறைகள் (relation techniques) மிகவும் பயனுள்ளவை என்று கூறப்படுகிறது. இந்த நோக்குடனேயே யோகாசனப் பயிற்சிகளும் செய்விக்கப்படுகின்றன.

www.tamileelamarchive.com

தமிழீழ ஆவணக் காப்பகம்


மனதில் இறுக்கம் வரும்போது உடல் தசைகள் யாவும் இறுக்க மடைகின்றன. ஆகவே உடற் தசைகளை எம்மால் தளர்வாக வைத்திருக்க முடிந்தால், மனமும் அமைதி அடைகிறது. நாடகப் பயிற்சிப் பட்டறைகளில் நடிப்புப் பயிற்சியின் ஒரு கூறாக இத்தகைய தசைத் தளர் நிலைப் பயிற்சிகள் செய்யப்படுவதுண்டு. மனதை ஒருமுகப் படுத்தும் பயிற்சிகளும் அங்கு செய்யப்படும். ஆகவே நாடகக் கலைஞர்கள் இயல்பாகவே உளஆரோக்கியத்துக்கான பயிற்சிக ளைப் பெறும் வாய்ப்புண்டு.

உளவியல் சிகிச்சை முறைகளில் மிக முக்கியமான இன்னொருமுறை குழுச் சிகிச்சை முறையாகும். இம் முறையில் ஒரே மாதிரிப் பாதிக்கப் பட்டவர்கள் ஒன்றாக வைத்துச் சிகிச்சை அளிக்கப்படுவார்கள். சித்திரவதைக்குட்பட்டோர், விதவை கள் போன்றோருக்கு இத்தகு குழுச் சிகிச்சைகள் அளிக்கப்படும். இவர் கள் ஒன்றுகூடி இருக்கும் போது, ஒருவரின் துயரத்தை ஒத்த நிலையில் இருக்கும் மற்றொரு வரோடு பகிர்ந்துகொள்கிறார்கள். இதன் மூலம் ஒரு மன ஆறுதல் ஏற்படுகிறது. இதனை ஒத்த ஒரு உளஆரோக்கியத்தன்மை, பலர் ஒன்று சேர்ந்து கூட்டுக் கலைகளில் ஈடுபடும் போதும் ஏற்படுகிறது. இதற்கு உதவுகின்ற ஒரு அருமை யான கலை நாடகமாகும். பல கலைஞர்கள் ஒன்று சேர்ந்து ஒரு கலைப்படைப்பில் ஈடுபடும் போது கூட்டுணர்வு, பாதுகாப்பு, அன்பு போன்ற ஆரோக்கியமான உணர்வு கள் விருத்தி பெறுகின்றன.

'வெறும் கதிரைச் சிகிச்சை முறை' என்பது உளவியல் சிகிச்சை முறைகளில் பிரசித்தமான ஒன்று. உளநலம் பாதிக்கப்பட்டவர் குறிப்பிட்ட ஒரு நபரோடு கோபம் கொண்டிருக்கின்றார் என்றால், அந்நபர் அந்த வெறும் கதிரையில் இருப்பதாகப் பாவனை செய்து, இவர் தமது உள்ளக் குமுறலைக் கொட்டித்தீர்ப்பார். வெறுங் கதிரை யுடனான இந்த உரையாடல் மூலம் ஒருவேளை அவரது பிரச்சினை கூடத் தீர்க்கப்படலாம். நாடகப் பட்டறைகளிலும், நாடகங்களிலும் இவ்வாறான சந்தர்ப்பங்கள் நிறைய வாய்க்கும். அது நடிகருக்கும் பார்ப் போருக்கும் மருத்துவப்பணி புரியும்.

எமது சடங்காசாரங்கள் எல்லாம் சிகிச்சைப் பண்பு கொண் டவை என்று கூறப்படுகிறது. நாடகம் உலகெங்கிலும் சமயச் சடங்குகளிலிருந்தே தோன்றியது என்பதும் கவனத்தில் கொள்ளத் தக்கது.

திடீரென்று ஓர் இழப்பைப் பெற்றவர் அந்த இழப்பை ஏற்றுக் கொள்ள மாட்டார். அதிர்ச்சியுற்ற நிலையில் அதனை மறுப்பார். (Denial & Shock) அதிர்ச்சியில் இருந்து விடுபட்டவுடன் ஆத்திரப் படுவார். அந்த ஆத்திரம் தனக் குள்ளேயே திருப்பப்பட்டு மனச் சோர்வு அடைவார். தனக்குள்ளும் சமூகத்தோடும் இறைவனோடும் பேசிக்கொள்வார். இறுதியாக மெது வாக அந்த இழப்பை ஏற்றுக் கொள்வார். இழப்பை மறுதலிப் பதில் இருந்து இழப்பை ஏற்றுக் கொள்வதான இந்த நீண்ட நடை பாதையில் கலைகள் அவருக்குப் பெருமளவு உதவும்.

ஒல்லாந்தில் உள்ள 15ம் நூற்றாண்டுக் கல்வெட்டு ஒன்றில் "அது அப்படித்தான்; வேறுமாதிரி இருக்க முடியாது" (It is so, It cannot be otherwise) என்று எழுதப் பட்டுள்ளது. ஐந்தாம் ஜோர்ஜ் மன்னர் தனது பக்கிங்ஹாம் அரண் மனையின் நூலகச் சுவரில், "புளித் துப் போன பாலுக்கும், அகப்படாத சந்திரனுக்கும் அழாதிருக்க எனக்குக் கற்பிப்பாய்" என எழுதியிருந்தார். இழப்பை ஏற்றுக்கொள்வது உள ஆரோக்கியத்துக்கு மிக முக்கிய மானது. கலை இதனைச் சிறுகச் சிறுகச் செய்துவிடும்.

ஆகவே போர்ச்சூழலில் கலை கள் பல எழவேண்டும். ஆனால் அவை போதனைக் கலைகளாய் அமையாது நடப்பியல் கலைகளா யும் சாதனைக் கலைகளாயும் இருக்கவேண்டும்.

நன்றி: வெளிச்சம்

## 'விடிவெள்ளி'
### தொழில்நுட்பப் பயிற்சி நிலையம் திறப்பு.

விடுதலைப் புலிகள் மகளிர் அமைப்பினரால் நல்லூர் வட் டத்தில் 'விடிவெள்ளி' தொழில் நுட்பப் பயிற்சி நிலையம் ஒன்று திறந்துவைக்கப்பட்டுள்ளது. இத் தொழில்நுட்பப் பயிற்சி நிலை யத்தினை யாழ். மாவட்ட மகளிர் அமைப்புப் பொறுப்பா ளர் செல்வி தணிகைச்செல்வி திறந்து வைத்தார்.

## தெருக்கூத்து

தமிழீழ பொருண்மிய மேம் பாட்டு நிறுவனம் வதிவிட வேளாண்மைப் போட்டியில் கூடுதலானவர்களைப் பங்கு கொள்ள வைக்கும் நோக்கோடு வதிவிட வேளாண்மையின் அவசியம் தொடர்பான தெருக் கூத்தினை தமிழீழமெங்கும் பரவ லாக நடாத்திவருகிறது.

## கயிறு உற்பத்தி நிலையம்

தும்பிலிருந்து கயிறு உற்பத்தி செய்யும் நிலையம் மகளிர் அபிவிருத்தி நிலையத்தின் ஏற் பாட்டில் ஆரம்பிக்கப்பட்டிருக் கிறது. இந்த இரண்டாவது நிலையத்தில் பாசையூரில் உள்ள பன்னிரண்டு குடும்பங்கள் பயன்பெறுவார்கள் என எதிர் பார்க்கப்படுகிறது.

## புகைப்பட விளக்கம்

பக்கம். 44

புகைப்படக் கண்காட்சியில் கலந்துகொண்டு சிறப்பித்த டாக்டர் ஜெறால்ட் டி வாங்கனும் (எப். ரி. டி. ஏ. யின் ஸ்தாபகர்) அவரது துணைவியாரும் (எப். ரி. டி. ஏ. யின் செயலாளர் நாயகம்)

www.tamileelamarchive.com

தமிழீழ ஆவணக் காப்பகம்

# நிலா தமிழின்தாசனின் 'நாளை' ஓர் அறிமுகம்






இலக்கியம் என்பது மனித வாழ்வை வளம்படுத்துவதற்கு மட்டுமல்ல, அது மனித வாழ்வோடு இரண்டறக் கலந்தும் இருக்க வேண்டும் என்பதை நோக்கமாக வரித்துக் கொண்டிருக்கும் கவிஞர்களில் நிலா தமிழின்தாசன் குறிப்பிடக் கூடிய ஒருவர் என்பது பலராலும் அறியப்பட்ட ஒன்றே. அவர் இன்றைய எமது தாயகத்தின் வாழ்வோடு இரண்டறக் கலந்து நிற்பவைகளாக அண்மையில் எழுதிய கவிதைகளின் தொகுப்பாக 'நாளை' வெளிவந்துள்ளது.

விடுதலை என்னும் விதையை ஊன்றுவதே தனது கவிதைப் படைப்புக்களின் நோக்கம் என்று பறைசாற்றும் கவிஞர், அதற்காக படுகொலை செய்யப்பட நேரிட்டாலும் பரவாயில்லை என்று முரசறைந்து எழுதியுள்ள கவிதைகள் யாவும் அவரது சத்திய வேட்கைக்கும், தர்மாவேசத்திற்கும் சாட்சி சொல்லக்கூடியவை ஆகும். அத்தகையவற்றில் 'பாடித்தீர்ப்பேன்' என்பது முதல் "வான் முகிலே ஏன் அழுதாய்" என்பது வரையிலான முப்பத்தொன்பது கவிதைகளின் தொகுப்பாக 'நாளை' இப்போது வாசகர் கரங்களுக்குக் கிட்டும் வாய்ப்பு ஏற்பட்டுள்ளது.

ஆங்கிலேய ஆதிக்கத்திடமிருந்து விடுபடத் துடித்த இந்தியா, சுதந்திரப் போராட்ட காலத்தில் சுப்பிரமணிய பாரதி, தாகூர் போன்ற கவிஞர்களைப் பிரசவித்தது. திராவிடர் இயக்கத்தின் எழுச்சியின் மூலம் பாரதிதாசன் பிறப்பெடுத்தார். இவை போல வீறுகொண்டெழுந்து நிற்கும் தமிழீழ விடுதலைப் போராட்டம், ஆற்றல் மிக்க பல்வேறு கவிஞர்களைப் பிரசவித்திருக்கின்றது. இவர்கள் காட்டிடையிலான முகாம்கள் பற்றி கற்பனையில் கண்டவர்களாக இல்லாமல் அத்தகையவற்றில் வாழ்ந்து, போராட்ட வாழ்க்கைக்குப் பழக்கப்பட்டவர்களாகவும், போராட்டத்தோடு இரண்டறக் கலந்தவர்களாகவும் இருப்பது இவர்களது படைப்புக்களின் உயிரோட்டத்திற்கு துணை செய்வதாகும். இத்தகைய கவிஞர்களின் வரிசையில் நிலாதமிழின்தாசனுக்கும் குறிப்பிடக் கூடிய இடமுண்டு என்பதற்கு 'நாளை' கட்டியம்

www.tamileelamarchive.com

தமிழீழ ஆவணக் காப்பகம்



கூறுகின்றது.

குண்டு விழுந்திடும்- குடிசை எரிந்திடும்- குடும்பம் சிதறிவிடும். ஆனால் இந்தத் துயர் கண்டு அழுதிடும் தன்மை மறைந்து கண் கனலை உமிழ்ந்து ஒளிரும் எனத்தொடங்கி விடியலை நாடும் இன்றைய தமிழீழம் எப்படியிருக்கின்றது என்பதை விபரிக்கும் ஒவ்வொரு வரியிலும் நிகழ்கால நிதர்சனங்கள் பளிச்சிடுகின்றன. அதிலும்

"புலிகள் அதிரடி கொடுத்து நித்தமும்
புலையர் தலை அறுக்கும் தமிழர்
வலிமை தற்கொடை வானை இடித்திடும்
வாழ்வு விடிவு பெறும்"

என்று அழுத்தி உரைக்கும் போது நம்பிக்கை அழுத்தம் பெறுகின்றது. தைப்பாவையின் வரவு கூறுகையிலும், சித்திரைப் புத்தாண்டின் மலர்ச்சி பாடப்படுகையிலும் "நாடழிவுறக் கோல் பிடிப்பவர் தம்மைத் துரத்தி விடுவான் அதிர்ந்திட தேன் தமிழொலி நீ எழுப்பி விடு" என்று கூறித் தாயகத்தின் மீதான நேசத்தையும், மொழியின் மீதான பாசத்தையும் வெளிப்படுத்தி நிற்கின்றார்.

மாவீரர் புகழ்பாடும் பன்னிரெண்டு கவிதைகளும் இத் தொகுப்பின் மணியாரங்கள் ஆகும். பல்வேறு கவியரங்குகளின் போதும் பாடப்பட்ட இக் கவிதைகள் மண்ணுக்காய் மரணித்த மாவீர வேங்கைகளின் எண்ணத்தில் நனைவதோடு மட்டும் நிற்காமல் ஈழத் தமிழர்கள் இணைந்து ஒன்றுபட்டு அந்த மாவீரர் பாதையில் பாதம் பதித்திடுவோம் என்று அறைகூவுவதாகவும் இருப்பது மிகவும் பாராட்டக் கூடியதாகும்.

'அடிமையென அகதியென அகிலந்தோறும் அல்லலுறும் நிலை ஒழிந்து உரிமை பெற்று குடியரசாக மக்கள் எல்லாம் குலவி வாழ- விடுதலையாம் சுகந்தத்தின் இன்பம் துய்க்க தமிழினமே வேங்கையாவாய்' என்று கவிஞர் அழைப்பு விடுவது இன்றைய சந்ததியின் செவிகளில் உறைக்கும். அதனால் அனைவரும் அணிதிரண்டு பரணி பாடும் நிலை உருவாகும். இது தலைவர் பிரபாகரன் காலத்தில் தமிழீழம் விடுதலை பெற்றது என்று வரலாறு பதிக்கப்படுவதற்கு இட்டுச் செல்லும் என்பது உறுதி.

செயலுக்கு உந்தும் இப் படைப்பு போல இன்னும் பல வெளியிடப்பட வேண்டும் என்றும், கடந்த இரண்டு தசாப்தங்களுக்கும் மேலாக எழுதிவரும் கவிஞரின் படைப்புக்கள் அனைத்தும் தொகுப்புரு பெறவேண்டும் என்றும் மனம் அவாவுறுகின்றது.



# மாயை எரிந்தது

எனக்கொரு நாடு
விடுதலைத் தீயில்
குளித்து எழுந்து
வெற்றிநடை போடும்.

அந்நிய தேசமொன்றில்
அகதியாய்....
அடிமையாய்....
நானிங்கு நாதியற்று....

களத்தில் நின்ற
தங்கையின் கண்களில்
கனன்ற தீயில்
என் முன் இருந்த
மாயை எரிந்தது.

எங்கிருந்தாலும்
விடுதலைக்காய்
உன் பணியை
விரைந்தே நீ செய்
அவளின் மரணம்
என்னிடம் சொல்லும்.

அவளின் தியாகம்
உணர்த்திய கடமை
நெஞ்சை அழுத்தும்
சுமையை விலக்க
தீர்மானமாய் நான்
எழுந்து நடக்கின்றேன்.

-நிரஞ்சனா-

www.tamileelamarchive.com

தமிழீழ ஆவணக் காப்பகம்



இந்தியா அயலில் இருக்கின்றது. அயலில் இருந்துகொண்டதே ஒருவகையில் எங்களுக்குத் துன்பமாய்ப் போனது.

எங்களின் விடுதலை- அது எங்களின் உணர்வு- அது எங்களின் பிறப்புரிமை.

விடுதலை பெறவேண்டும் என்கிற உணர்வு தீயாகத்தான் பற்றிக்கொள்கிறது.

இந்தத் தீயை இந்திய அரசு வளர்ப்பதற்குப் பதிலாக அவித்துவிடத்தான் துடியாய்த் துடிக்கிறது.

இந்தத் துஷ்ட குணம் வெளிப்பட்டபோது எங்களின் மண்ணில் இரத்த ஆறு பெருக்கெடுத்தோடியது.

எமது தாயழுதாள்.

அந்த அழுகைதான் வீரத்தைப் பிறப்பித்தது. அது அவர்களுக்குத் தெரியாது போய்விட அவலம் மீண்டும் தொடர்ந்தது.

அசோகச் சக்கரத்தில் குருதிக்கறை படிந்தால் என்ன? அகிம்சை முகத்திரை கிழிந்து போனால் என்ன? அவர்களுக்கு அதில் வெட்கப்படுவதெற்கென்று ஒன்றுமில்லை.

சுதந்திரத்தின் தூதாகச் சென்றுகொண்டிருந்த கப்பல் வழி மறிக்கப்படுகின்றது. கிட்டண்ணாவும் அதில் இருந்த ஒன்பது போராளிகளும் சரண் அடையும்படி கேட்கப்படுகின்றனர்.

'விடுதலை வேண்டி நின்றவர்
விலங்குகள் சுமக்கச் சம்மதியார்'

www.tamileelamarchive.com

தமிழீழ ஆவணக் காப்பகம்


# எங்களின் மண்ணில் இவர்களின் கதை துயரோடு பேசப்படுகின்றது



தெரிந்திருந்தென்ன, அவர்கள் கேட்டார்கள் சரணடையும்படி.

கப்பலைத் தகர்த்து கிட்டண்ணாவும் அவருடன் சென்ற ஏனைய ஒன்பது போராளிகளும் கடலில் சங்கமித்தார்கள்.

'விடுதலை உயிரின் மூச்சு

மூச்சுள யாவும் வீச்சுடன் நிமிரும்.'

அது உயிரின் பண்பாயிற்றே.

அவர்கள் இதனை உணர்ந்து கொண்டதாகத் தெரியவில்லை.



www.tamileelamarchive.com

தமிழீழ ஆவணக் காப்பகம்

உணர்வதற்கு எங்கே ஆட்சியாளர்களுக்கு நீண்ட பார்வை? யார் உண்மை நண்பர்கள் (Strategic allies) என்று பின்னோக்கியும், முன்னோக்கியும் பார்த்துத் தற்காலத் திட்டம் வகுக்கக்கூடியவர் யார் உள்ளனர் இந்திய அரசியலில்? இது இந்திய அரசியலில் முற்றும் முரணான வெளிவிவகாரச் செயல்களுக்கல்லவா வழிவகுத்து வருகிறது. பங்களாதேஷை உருவாக்கினார்கள். அது இன்று இஸ்லாமிய அடிப்படைவாதத் தீயுனுள் மூழ்கி வருகிறது. தமிழீழ விடுதலையை எதிர்த்து கலாச்சாரப் பிணைப்பை அறுத்து விரிசலை அதிகப்படுத்துவதால் யாருக்கு இலாபம்?

அயலில் இருந்துகொண்டு இந்தியா எங்கள் இதயத்தில் விளைத்த காயங்கள் எங்களின் மக்களால் துயரத்தோடு பேசப்படுகின்றன. ஆறாத காயங்களை ஆற்றுவதற்குரிய முன்னெடுப்புக்களை எடுப்பதற்குத் தகுதியான ஆளுமையும் தீர்க்கதரிசனமும் கொண்ட இந்திய அரசியல் தலைமை உருவாக தமிழீழ மக்கள் எவ்வளவு காலம் பொறுக்கவேண்டும்?

❦❦❦



www.tamileelamarchive.com

தமிழீழ ஆவணக் காப்பகம்


## வளர்க உங்கள் தமிழர் உணர்வுகள்!

ஆசிரியர், எரிமலை.
'எரிமலை' என்ற தமிழிதழ் வெளிவருவது அறிந்து, எனது நண்பர்கள் மூலம் இதழை வாங்கிப் படித்தேன். தமிழர் வாழ்வும், தமிழர் உயர்வும், தமிழ் வளரவேண்டியும் வெளிவரும் இதழ் 'எரிமலையைப்' படிக்க ஆவலுடன் இந்த மடலைத் தீட்டியுள்ளேன்.

ஆ. வேலாயுதன்
மலேசியா.

## புலிகளின் தாகம் தமிழீழத் தாயகம்

அன்புள்ள ஆசிரியர் அவர்களுக்கு,
தமிழீழத்தில் நடைபெறும் நிகழ்வுகளையும் தமிழ் அறிஞர்களின் ஆய்வுக் கட்டுரைகளையும் மிகச்சிறப்பான முறையில் எரிமலை சஞ்சிகை தாங்கி வருவதை எண்ணி மிகவும் மகிழ்ச்சியடைகின்றேன். தங்களின் வெளியீடுகளான எரிமலை சஞ்சிகை எனக்குத் தொடர்ந்து கிடைப்பதற்கு இதன் வழி வேண்டிக் கொள்கின்றேன்.

பாரதிதாசன்
மலேசியா.

## அக்கரைப் பூக்கள்

எரிமலை ஆசிரியருக்கு,
மலேசிய நாட்டில் வசிக்கும் எனக்கு தமிழீழப் புலிகளின் போராட்டத்தை எரிமலை இதழ் மூலம் அறிமுகம் செய்தமைக்கு நன்றி. நாளிதழ்களில் வெளியாகும் செய்திகளில் நிறையப் பொய்யுள்ளன என்பதை அறிந்தேன். எரிமலையின் மூலம் உண்மை நிலவரம் அறிந்து என்மனம் ஆழ்கடலில் சிக்கிய தோணியாகிற்று. என் இன மக்கள் உலகத்தில் இவ்வளவு துயரங்களா அடைகின்றனர் என்பதை அறியும்போது உயிரின் ஓரத்தில் கறையானின் அரிப்புத் தென்படுகின்றது.
வீரர்களே! என் இன மக்களே! ஓயாதீர்கள்! விடுதலை என்பது எல்லோருக்கும் உரிமையானது. தொடருங்கள்! வெல்க!

அருணாசலம்
மலேசியா.

சிறப்பும், சிந்தனையும் மிக்க பத்திரிகையாக 'எரிமலை' வெளிவருவதில் தமிழன் என்ற உணர்வு மிக்க துணிவோடு விடுதலைப் புலிகளின் வீரம் மிக்க வெளியீடுகளைக் கண்டு பெருமைப் படுகின்றேன்.
தமிழீழத்தின் தலைவர் வே. பிரபாகரன் அவர்கள் தமிழீழத்தின் தலைவர் மட்டுமல்ல உலகத் தமிழரின் தலைவர் என்றும் துணிவுடன் கூறலாம். அநீதியை எதிர்க்கும் விடுதலைப் புலிகளின் இரத்தப் போராட்டம் வெற்றி பெற்று அதன் வரலாறுகள் உலகத் தமிழனையே தலைநிமிரச் செய்துவிடும் என நம்புகின்றேன்.
தமிழீழத்தின் தாய்க்கு நானும் ஓர் மகனாகப் பிறந்திருக்கக்கூடாதா என்று வருந்துகின்றேன். தமிழனின் நாடி நரம்புகளைத் தட்டி எழுப்பி சிந்திக்க வைக்கும் வெளியீடாக 'எரிமலை' வெகு சிறப்பு. அதன் ஆசிரியர் குழுவுக்கு எனது




மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்வதிலும் பெருமைப்படுகிறேன்.
சாதாரண தோட்டத் தொழிலாளியான எனக்கு, எரிமலையின் படைப்பு என்னுடைய அறிவு சிந்தனைக்கேற்ற வெளியீடாகவே வெளிவருவதில் மகிழ்ச்சியடைகின்றேன்.

அர்ஜுனன் அலையப்பன்
மலேசியா

எமது பாசமிகு ஆசிரியர் குழுவுக்கு,
தங்களால் வெளியிடப்படும் 'எரிமலை' மாத இதழை மனந்திறந்து வாசிக்கும் மலர்களில் நானும் ஒரு இதழ். உலகெங்கும் மூலை முடக்குகளில் வாழும் தமிழீழ மக்கள் குறிப்பாக ஐரோப்பிய நாடுகளில் வாழும் பலர் எமது மண்ணை, மக்களை, கலை கலாச்சாரம் யாவும் மறந்து மாறிவரும் வேளைகளில் தங்களின் இவ்விதழ் மிகவும் அவசியமானது. அதிலும் இவ்விதழில் வெளிவரும் தமிழீழ மண்ணில் நிகழும் உண்மைச் சம்பவங்களை வாசிக்கும்போது நிச்சயமாக நாம் அனைவரும் மீண்டும் எமது மண்ணை அங்கு வாழ்ந்த நாளை நினைவு கூர்ந்து ஒவ்வொருவரும் எமது மண்ணை நேசிக்கும் எண்ணத்தை உருவாக்கும் திறன் எரிமலைக்கே உண்டு. குறிப்பாக வீரமரணம் அடைந்த போராளிகளின் வரலாற்றுச் சம்பவங்கள் அவர்களின் உண்மையான, சாதாரண நிகழ்வுகள் என்போன்றவர்களை மிகவும் கவரும். மேலும் மேலும் மாவீரர்களின் உண்மை நிகழ்வுகளை பிரசுரிக்குமாறு வேண்டி இச்சிறப்பிதழ் மென்மேலும் பெருமலையாய் உலகெங்கும் விளங்க தமிழீழ மக்களின் சார்பில் எனது வாழ்த்துக்களை மேற்படி ஆசிரியர் குழுவுக்குக் கூறுகின்றேன்.
தமிழ் மண்ணை, மக்களை நேசிக்கும்

எஸ்.என். யோகேஸ்
சுவிஸ்.

அன்பின் எரிமலை ஆசிரியர் அவர்கட்கு,
எரிமலை மாதாந்த சஞ்சிகையைத் தொடர்ந்து வாசித்து வரும் நான் கடந்த மாதத்திற்குரிய சஞ்சிகையிலே தமிழீழ நாட்டின் பிரச்சினையிலே அக்கறை கொண்டு இத்தாலிய நபரொருவர் எழுதி வெளியிட்டுள்ள புத்தகம் பற்றிய செய்தியை அறிந்து மனம் மகிழ்கின்றேன். அதேசமயம் இத்தகைய முன்னெடுப்புக்கள் நீங்கள் குறிப்பிட்டது போல ஆங்கில, மற்றும் தமிழ், பிரெஞ்சு, டொச்சு ஆகிய மொழிகளில் மொழிபெயர்க்கப்பட்டு வெளியிடுவதன் மூலம் எமது நாட்டின் உண்மை நிகழ்வுகளை ஐரோப்பிய மக்களும் உணரும் வகை செய்யலாம் எனத் தெரிவிப்பதோடு அந்தப் புத்தகத்தை எழுதி வெளியிட்டவருக்கு நன்றி தெரிவிப்பது மக்களின் சார்பில் எரிமலையின் கடமையுமாகும்.
மொழிபெயர்க்கப்பட வேண்டும் என்ற கருத்துக்கள் எழுத்தில் மட்டும் இல்லாமல் செயல்வடிவிலும் வரவேண்டும் என்றே விரும்புகின்றேன். பின்பு அத்தகைய புத்தகங்களை எம்முடன் தொழில் புரியும் ஐரோப்பிய நண்பர்களுக்குக் கொடுப்பதன் மூலம் உண்மைகளை வெளிக்கொணர முடியும்.

நன்றி

யோ. சுரேஸ்
சுவிஸ்.

எரிமலை ஆசிரியர் குழுவினர்க்கு வணக்கம்.
தங்கள் ஆரம்பகால எரிமலை இதழ்களுக்கும் அண்மைக்கால இதழ்களுக்கும் ஏராளமான வித்தியாசங்கள் உண்டு. அண்மைக் கால இதழ்கள் நல்ல ஆரோக்கியமான, தரமான ஆக்கங்களை உள்ளடக்கியதாக மிளிர்கின்ற வேளை, காத்திரமான இலக்கிய சஞ்சிகை என்ற நிலைக்கு உயர்ந்ததாக கருதப்படக் கூடியதாக உள்ளது. மென்மேலும் இதழ் சிறப்பான ஆக்கங்களைக் கொண்டதாக வெளிவர வேண்டும் என எதிர்பார்க்கிறேன்.
அண்மையில் விடுதலை அமைப்பு சார்பாக வெளியிடப்பட்ட நாட்காட்டியில் தூய தமிழில் நாட்கள் அறிமுகப்படுத்தப்பட்டிருந்தது. அதேபோல் எரிமலையும் சுறவம் திங்கள் எனவே குறிப்பிட்டு வெளியிட்டிருந்தது. அதைப் பார்க்கும் மனம் மகிழ்ச்சியாயிருந்தது. ஆனால் மாசியிதழில் ஆசிரியர் குறிப்பில் தாங்கள் தூயதமிழ் இயக்கம் நடத்தவில்லை எனக் கூறி அதை மீளப்பெற்றதை அறியும் போது கவலை கொள்ள வைக்கின்றது.
இன்று தமிழில் ஏராளமான பிறமொழிகள் கலந்து அவையும் தமிழ் மொழிச் சொல்லாக மாறிநின்ற வேளை தூய தமிழ்ச் சொற்களை நடைமுறைக்குக் கொண்டுவர சாத்தியமான வழிமுறைகளை தங்களின் பலமான அமைப்பின் ஊடாகக் கையாண்டு உயிரூட்ட முடியும். அப்படியிருக்க அந்த புதிய நடைமுறையை மாற்ற முயற்சிக்க வேண்டாம். இந்தப் புதிய அறிமுகங்கள் ஊடாகத்தான், சிறிது சிறிதாகத்தான் தமிழ் மக்களின் பாவனைக்கு தூய தமிழ்ச் சொற்களை புகுத்த முடியும் என்பதைப் புரிந்து கொள்க. இன்று புலம்பெயர்ந்து வாழும் தமிழ் மக்கள் அன்றாட பாவனைக்கு உலக மொழிகளைத் தமிழில் புகுத்துகின்ற வேளை, தமிழின் தரம் மாறாமலிருக்க தூய தமிழ் இயக்கம் நடத்துவதிலும் தவறில்லை. அதுவும் தங்கள் அமைப்புக்கூடாகவே சாத்தியம் என்பதையும் அறிவீர்கள் என நம்புகின்றேன்.

சுபனேஸ்
பிரான்ஸ்.

www.tamileelamarchive.com

தமிழீழ ஆவணக் காப்பகம்

# பூமிப்பந்தின் நெற்றியில் பூநகரி சுவரொட்டியானது!

மனுக்குலத்தின் தலையில்
சாதனை மகுடம் சூட்டி
அமெரிக்கன் ஒருவன் நிலவில் நின்றானே
அந்தநாள்
தமிழனும் ஆடிப்பாடினான்.

## உலைக்களம்

-வியாசன்-

"ஆம்ஸ்ரோங்"
இங்கும் பலருக்கு "அத்தை பையன்" ஆனான்.
"சாள்ஸ்சும் டயானாவும்"
லண்டனில்தான் கைபிடித்துக் கொண்டார்கள்.
தமிழன் சந்தோஷத்தில்
இங்கே சந்தனம் பூசிக்கொண்டான்.
"வேல்ஸ் பரம்பரைக்கு" விசுவாசம் தெரிவித்து
வெற்றிலை போட்டுக் கொண்டான்.
வாழ்த்து அனுப்பிவைத்த வரலாறும்
இங்கே சிலருக்கு உண்டு.
"எலிசபெத் மகாராணி"
எங்களுக்கு எந்தவழி உறவு?
"யாதும் ஊரே யாவரும் கேளிர்"
சொன்னவன் தமிழன் தானே
அந்த உறவில் போலும்
தமிழர்கள் ஆனந்தம் கொண்டார்கள்.
குதூகலித்தோர் மீது குற்றமில்லை.
ஆனால்.... நேற்றிரவு
பூநகரியில்....
பகைவன் இருந்த படைத்தளத்தினுள்ளே
இவர்களின் பிள்ளைகள் புகுந்தார்கள்.
விடியும்வரை வெடிச்சத்தங்கள் கேட்டன.
உறக்கம் கலைந்தவர் மட்டும்
உற்றுணர்ந்து கொண்டனர்
"பூநகரிக்குள்ளே பொடியள் போட்டான்கள்"
"அப்பனே முருகா பிள்ளைகளைக் காப்பாற்று"
"கர்த்தரே! எங்கள் குஞ்சுகளைக் காத்தருளும்"
என்றபடி விடியும்வரை விழித்திருந்தார்கள்
அடுத்தநாள் அடிவானம் சிவந்தது.
காகங்களின் சத்தங்கள் கூட சங்கீதமானது.
வழமைக்கு மேலாகப் பூக்கள் புன்னகைத்தன.
"வழுக்கியாறு" பெருக்கெடுத்து ஓடியது.
ஆயிரம் பகைவரைப் போரினில் அழித்து,
அள்ளிய ஆயுதங்களைத் தோளினிற் சுமந்து,
சாவினைத் தழுவிய தோழர்களையும்,
தோழியையும்
தங்கள் கைகளில் ஏந்தியபடி,
முகத்தினில் வெற்றியின் வீரியத்தோடும்,
நெஞ்சினில் இழப்பின் சோகத்தோடும்,
எங்களின் வீதியால்
எங்கள் பிள்ளைகள் உலாவந்தனர்.
பூநகரிக்கு
பக்கத்து ஊரிலே... பாதை கேட்டாலே...
திக்குக்காட்டத் தெரியாத சின்ன ஊர்.
மொட்டைக்கறுப்பன் அரிசிக்கு
முகவரி இதுதான்
மடுமாதா திருப்பதிக்கும்
மாதோட்ட நன்நகருக்கும்
தலயாத்திரை போவோரின் தங்குமிடம்.
எங்கும்போல் இங்கும் காற்றுவீசும்
மாரிகாலமென்றால் மழைபொழியும்
ஊர்கூடி உழுவார்கள்
வயல்கள் விளைந்திருக்கும் போது
வடிவாக இருக்கும்
வரம்புகளில் வெண்கொக்குகள் பூத்திருக்கும்
சின்னக் கோவில்களிலும் திருவிழா நடக்கும்
பூமியெங்கும் பேரபதியும் பொசிப்பில்லாமல்

www.tamileelamarchive.com

தமிழீழ ஆவணக் காப்பகம்


பூநகரி ஊமையாய் உறங்கிக் கிடந்தது.
"நாகதேவன்துறை"
பெயரைப் பார்த்துப் பிரமிக்கக்கூடாது.
இது கப்பல் துறைமுகமல்ல-
கட்டுமரத் துறைதான்.
என்றாலும் எங்களின் முந்தையரின்
பாதம் படிந்துள்ள படகுத்துறை
இந்தியப் படைகளின் இருண்ட நாட்களில்
வரிப்புலிகள் வன்னிக்குப் போய்வந்த
வரலாறு இதற்குண்டு.
10-11-93 அன்று
சாமம் கழிய மறுநாள் சந்தித்துக் கொண்டது.
ஞானிமடத்து மேலே
நின்ற நிலவு காணாமல் போயிருந்தது.
மேகம் உருகி மழையாகத் தூற்றலிட்டது.
கௌதாரிகளும், ஆட்காட்டிப் பறவைகளும்
குளிரில் விறைத்துக் குறண்டிப் போயிருந்தன.
நடக்கப் போவதை அறிந்த கடல்மட்டும்
ஆனந்தத்தில் ஆர்ப்பரித்தது!
புலிகள் பூநகரிக்குள் புகுந்துகொண்டனர்.
அவர் இட்ட ஒவ்வொரு அடிக்குள்ளும்
பூமி புல்லரித்துக் கொண்டது.
இருளை ஊடறுத்து "எங்கள் பிள்ளைகள்"
பகைவனின் பாசறையைப் பார்த்தார்கள்
காயவிட்டிருந்த "கறுப்புச்சட்டைகள்" தெரிந்தன.
குருதிவழியும் வெட்டரிவாள்கள்
எதிரியின் இடுப்பிலே இருப்பது தெரிந்தது
"செல்லுங்கள் வெல்லுங்கள்"
தலைவனின் தாரகமந்திரம் காதில் ஒலித்தது.
புலிகளின் கால்களுக்குள்ளே
புயல் புகுந்து கொண்டது
விழிகள் சிவப்பேறி விரிந்து கொண்டன.
விடிந்தபோது
யானை உழக்கிய கரும்புக் காடாய்
எதிரிகள் சிதறிக் கிடந்தனர்
பூமிப்பந்தின் நெற்றியிலே
பூநகரி சுவரொட்டியானது.
துருவப் பகுதிகள் கூடச் சூடேறின.
பசுபிக் சமுத்திரம்
நாகதேவன்துறைக்கு பாதை கேட்டது.
உலக அசைவியக்கம் ஒருகணம் நின்று
பிரபாகரனின் பெயரை உச்சரித்துக் கொண்டது.
"தலைதப்பியது தம்பிரான் புண்ணியம்"
அன்றே வந்தது நன்றே என்று
பக்கத்து நாடு சுவாசத்தைச் சீராக்கியது.
உறங்கிக் கிடக்கும் தமிழனே! எழடா!
உன்வேலிக்கு அப்பாலும்
உலகம் இருப்பதை உணர்ந்துகொள்.
கடாரம் வென்ற தமிழனைச் சொல்லி
கவிதை எழுதிக் குவிக்கும் கவிஞனே!
பூநகர் வென்ற புலிகள் மீதிலே
புதிய பரணியை எப்போது எழுதுவாய்?
இது விடுதலைக்கு விலை கொடுக்கும் காலம்
பதுங்குகுழி உனது பாதுகாப்புக்கே தவிர
பயந்து கிடக்கும் படுக்கையறை அல்ல.
விடுதலையை உயிர்மூச்சாக உள்வாங்கிக்கொண்டு
சாவைச் சாதாரண நிகழ்வாக நினைத்துக்கொள்.
காற்றுக்கு வேலியிட்டு கதவுசாத்த
நினைப்பவர்களே!
ஆற்று வெள்ளத்தை அள்ளிக் குடிக்க
நினைப்பவர்களே!
சிங்களதேசமே! எங்களைத் தெரிந்துகொள்
மாணிக்க கங்கையை
மடியிற் கட்டும் ஆசை எமக்கில்லை.
கொழும்பில் கொடியேற்றும் குறிக்கோளும்
கிடையாது.
நம்புங்கள்.
நாங்கள் எங்கள் நாட்டிலும்
நீங்கள் உங்கள் நாட்டிலும்
நல்ல நண்பர்களாக வாழ்வோம்.
மதித்தால் மதிப்போம்
மிதித்தால் மிதிப்போம்!

www.tamileelamarchive.com

தமிழீழ ஆவணக் காப்பகம்



# எதிர்கொள்ளல்

'காணிநிலம் வேண்டும்...' என்ற பாரதியார் பாடலின் அடிகள் நினைவுக்கு வந்தன.

'காற்று வரவேண்டும்- கத்தும்
குயில் ஓசை கேட்கவேண்டும்-
பத்துப் பன்னிரண்டு தென்னை
பக்கத்திலே வேண்டும்- நல்ல முத்துச்
சுடரொளி போல நிலவொளி
முன்பு வரவேண்டும்.'

நான் இருக்கிற கட்டிடக் காட்டுக்குள் இவை வருமா? ஏக்கப் பெருமூச்சு என்னுள் எறிய அந்த விள்ம்பரத்தைப் படித்தேன்.

தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனத்தால் வருடா வருடம் வதிவிட வேளாண்மைப் போட்டி நடாத்தப்பட்டு



விவசாயத்தில் மக்களுக்கு ஊக்கமளிக்கப்பட்டு வருவது சகலரும் அறிந்ததே. சென்ற வருடமும் இப்போட்டிக்கான விளம்பரம் ஒன்று 'ஈழநாதம்' பத்திரிகையில் பிரசுரமாகியிருந்தது. என் பார்வையில் அந்த விளம்பரம் எனக்குள் ஒரு நிறைவை, வியப்பை ஏற்படுத்தியது.

அந்தப் போட்டியில் பங்குபற்றிய பலர் பரிசுகள் பெற்றிருக்கிறார்கள். அப்படிப் பரிசுபெற்ற ஒருவரின் வீட்டைச் சுற்றி என் எண்ணம் சுழன்றது.

வீட்டைச்சுற்றி நிற்கின்ற மரங்கள் காற்றுக்கு உயிர்க்கிறது. பழ மரங்களில் கனிகள் குலுங்க அணில்கள் தாவுகின்றன. தேனீக்கள் பாடுகின்றன. பசுக்கள் தொழுவத்தில் அசைபோட்டபடி... கறந்த பால் செம்புடன் அடுக்களைக்குள் நுழைகிறாள் வீட்டுத் தலைவி. அவளுக்கு ஒரு நிறைவு வருகிறது- பால், தயிர், வெண்ணெய், முட்டை, மரக்கறி, தேன், பழம், தானியம், இறைச்சி... பாடுபட்டதன் பலன் நிறையத்தான்.

வீட்டுத் தலைவன் தோட்டத்தைச் சுற்றி வருகிறான். மரக்கறிகள், கிழங்கு வகைகள், தானியங்கள், கீரை வகைகள், வாசனைச் சரக்குகள், மூலிகைகள், பழமரங்கள், கால்நடை, கமுகு, தென்னை, நிலவு- அவற்றின் செழிப்பும் உயிர்ப்பும் அவனுக்குள்ளும்.

செல் விழுகிறது- விமானங்கள் குடியிருப்புக்கள் மீது குண்டு பொழிகின்றன. துப்பாக்கிகள் இடைவிடாது முழங்குகின்றன. பேரினவாத அரசு காட்டுமிராண்டித்தனமான நீதியற்ற யுத்தத்தை நடாத்திவருகின்றது. இருந்தும் எமது மக்கள் அந்தப் போர் வாழ்வுக்கூடாக நிமிர்கின்றனர். இந்தப் போராட்டம் தமிழ் மக்களின் அனைத்து ஒடுக்குமுறைகளையும் உடைத்துவருகிறது. ஒவ்வொரு வீட்டையும் தன்னிறைவு மயப்படுத்தும் இலக்குடன் நடத்தப்படும் இந்த வதிவிட வேளாண்மைப் போட்டி பொருண்மியத் தடையை தகர்த்தெறியும் தகைமையை தமிழ் மக்களுக்குக் கொடுத்திருக்கிறது.

***

www.tamileelamarchive.com

தமிழீழ ஆவணக் காப்பகம்


# அந்நிய ஆக்கிரமிப்புக்கு எதிரான வரலாற்று நெருப்பு

## பண்டாரவன்னியன்

இன்றைய தமிழீழ விடுதலைப் போராட்டமானது சகல ஆக்கிரமிப்புக்கும் அடக்குமுறைக்கும் எதிராக தனது போரை நகர்த்திச் செல்கிறது. தமிழீழ விடுதலைப் புலிகள் சிங்கள இனவாத அரசுக்கு எதிராகப் போரை நடத்திக்கொண்டிருக்கும் அதேவேளையில் இந்திய ஆக்கிரமிப்பாளர்களுக்கு எதிராகவும் போரிடவேண்டியவர்களாக உள்ளனர். 1987இல் எமது தமிழீழ மண்ணில் கால் பதித்த இந்திய ஆக்கிரமிப்பாளர்களை எதிர்த்துப் போராடி அதில் வெற்றிகொண்டார்கள் புலிகள். இது வரலாறு. இக்காலகட்டத்திலேதான் தமிழர்களின் கடந்தகால வீரவரலாற்றினைப் புரட்டிப் பார்க்கவேண்டியதும் அதனைத் தெரிந்துகொள்ளவேண்டியதும் காலத்தின் தேவையாகின்றது.

இந்தவகையில்தான் ஆங்கிலேயரின் படையெடுப்புக்கு எதிராக இறுதி மூச்சுவரை உறுதியுடன் போராடிய மாவீரன் பண்டாரவன்னியனின் நினைவுகளை மீட்டிட விளைகின்றோம். குலசேகரம் வைரமுத்து என்னும் இயற்பெயரைக்கொண்ட பண்டாரவன்னியன் வடக்கே யாழ்ப்பாணப் பரவைக் கடலையும் தெற்கே அருவி ஆற்றையும் மேற்கே மன்னார் மாவட்டத்தையும் கிழக்கே திருமலையையும் எல்லைகளாகக் கொண்ட 'அடங்காப்பற்று' என அழைக்கப்பட்ட வன்னி இராச்சியத்தை சிறந்தமுறையிலே ஆட்சி பரிபாலனம் செய்தான்.

தங்கள் படைப்பலத்தின் மூலம் இலங்கையின் சகல ஆட்சிப் பிரிவுகளையும் கைப்பற்றிக்கொண்ட ஆங்கிலேயர் வன்னித் தமிழ் அரசன் பண்டாரவன்னியனுக்கும் கண்டித் தமிழ் அரசன் விக்கிரமராசசிங்கனுக்கும் எதிராகவே உக்கிரமமான போரை நடத்த வேண்டியவர்களாக இருந்தனர்.

வன்னி இராச்சியத்தின் ஒரு எல்லைப்புறத்தினை நல்லநாச்சியார், இன்னொரு எல்லைப்புறமான பனங்காமம் பகுதியை ஊமாச்சிநாச்சியார் என்ற அவனது சகோதரிகளே ஆட்சிபரிபாலித்தனர் என்பதை நோக்கும் போது வன்னி இராச்சியத்தில் தமிழ்ப்பெண்களின் ஆளுமையை எம்மால் உணரமுடிகிறது. அன்றைய வீரவரலாற்றின் இன்றைய தொடர்ச்சிதான் விடுதலைப் புலிகளின் பெண்கள் படையணிகளின் எழுச்சிப் பயணிப்பு என்பதை எம்மால் எண்ணிப் பார்க்காமல் இருக்கமுடியாது. இறுதிவரையிலும் தமது ஆட்சிக்குட்பட்ட மக்களின் இறைமையை காப்பாற்ற முழுமூச்சாக நின்று வெறும் வாளுடன் டி.ஜி. போக் என்ற ஆங்கிலத் தளபதியின் படையணியை வீராவேசத்துடன் எதிர்கொண்ட பண்டாரவன்னியன் இறுதியாக 31.10.1803இல் கற்சிலைமடு என்னும் இடத்திலே களச்சாவடைந்தான். மாவீரனின் வீழ்ச்சிக்கு ஆங்கிலேய படைப்பலத்தை விட இனத்துரோகிகளின் காட்டிக்கொடுப்பு காரணமாய் அமைந்ததென்பது கறுப்புச் செய்தியாக அவனது வீரவரலாற்றுடன் பதிந்துள்ளது.



ஏகாதிபத்தியம் எதுவாக இருந்தாலும் அந்த ஏகாதிபத்தியம் ஒரு இனத்தின் இறைமையை பறிக்க முற்படும்போது அந்த இனம் வீறுகொண்டு எழுந்து தனது உரிமைக்காக போராடும் என்பதை பண்டாரவன்னியனின் வாழ்க்கை எமக்குத் தெளிவாகக் காட்டுகிறது.

மாணி நாகேஷ்

www.tamileelamarchive.com

தமிழீழ ஆவணக் காப்பகம்



# தமிழீழப் பெண்களின் எழுச்சி வடிவங்கள் சுமந்த புகைப்படக் கண்காட்சி

உலகப் பெண்கள் தினத்தை முன்னிட்டுப் புகைப்படக் கண்காட்சியும் தொலைக்காட்சி விவரணமும் கடந்த 19ம், 20ந் திகதிகளில் பிரான்ஸ் "தமிழ்ப் பெண்கள் அமைப்பினால்" ஒழுங்கு செய்து நடாத்தப்பட்டது. சனிக் கிழமை பகல் 12 மணியில் இருந்து மாலை 6.30 மணி வரையிலும் ஞாயிறு காலை 11 மணியில் இருந்து மாலை 6.30 மணி வரையிலும் என இரண்டு நாட்கள் நடாத்தப்பட்ட இந்நிகழ்வு தமிழீழப் பெண்களின் எழுச்சியினை வெளிக்காட்டுவதாகி அமைந்தது. இக்கண்காட்சியைக் காண எம்மவர்கள் குறைந்தள விலேயே கலந்துகொண்டாலும் கூட, அவர்கள் தமிழீழத்தில் பெண் விடுதலையின் பல்வேறு பரிமாணங் களை அறிந்திருப்பார்கள் என்பதில் ஐயமில்லை. இப்புகைப்படக் கண்காட்சியானது சிறிதாக ஆனால் சிறப்பாகப் பயன்பாடுள்ளதாக அமைந்தது குறிப்பிடத்தக்கதாகும். முக்கியமாக வெளிநாட்டவர்கள் பலர் இதில் ஆர்வமுடன் பங்கெடுத் துக்கொண்டமை இந்நிகழ்ச்சிக்குக் கிடைத்த பெருவெற்றி என்றே கூறவேண்டும்.

"தமிழீழ மக்கள் பற்றி தமக்குக் கிடைத்த புதிய ஆச்சரியமான தகவல்கள் இவை" என சில வெளி நாட்டவர் கருத்துத் தெரிவித்தமை யும், 'செஞ்சோலை' சிறுவர் பராமரிப்பு மையத்திற்கு சிலர் பங்களிப்பு செய்ய விருப்பம் தெரி வித்தமையும் போன்ற நிகழ்வுகள் மேற்படி நிகழ்ச்சியானது தொடர்ச் சியாக நடத்தப்பட வேண்டிய அவசியத்தை எமக்குத் தெளிவுறுத்தி நிற்கிறது. காட்சிக்கு வைக்கப்பட்ட புகைப்படங்கள் நல்லமுறையில் வகுக்கப்பட்டு காட்சிப்படுத்தப் பட்டமை குறிப்பிடத்தக்கதாகும்.

தமிழ் ஈழமண்ணில் தமிழ்ப் பெண்களின் பங்கு என்ற வகையில் காவல்துறையில் பெண்கள், நீதித் துறையில் பெண்கள், தமிழீழப் போரில் மாவீரர் ஆகிவிட்ட பெண்கள், நினைவாலயங்கள் மற்றும் போர்க்காலச் சூழலில் ஆதரவற்ற பெண் சிறுவர் பரா மரிப்பு மையமான 'செஞ்சோலை' பற்றிய விவரணப் புகைப்படங்கள், நிர்க்கதியான தமிழீழப் பெண்களின் பராமரிப்பு மையமான 'உதய தாரகை' போன்ற பல்வேறு அம்சங்களைத் தெளிவுறுத்தி நின்ற புகைப்படக் கண்காட்சியானது நிச்சயமாக பார்த்தவர்களுக்கு மிக ஆழமான, உணர்வார்ந்த செய்தி களைச் சொல்லியிருக்கும் என்றே நம்பலாம்.

எமது தமிழீழ தேசிய விடுத

www.tamileelamarchive.com

தமிழீழ ஆவணக் காப்பகம்




லைப் போரில் பெண்கள் பங்களிப்பின் வரலாற்றுப் பொக்கிஷமாக விளங்கும் 'அன்னை பூபதி' தனித்துவமாகக் காட்சிப்படுத்தப்பட்டமையையும் சிறப்பம்சமாகக் குறிப்பிட்டுக் கூறலாம்.

இன்று தமிழீழ தேசிய விடுதலைப் போராட்டத்திலே தமிழ் பெண்களின் பல்துறை சார்ந்த தீவிரமான ஈடுபாட்டின் வெளிப்பாடாகவே வெளிநாடுவாழ் தமிழீழப் பெண்களின் இத்தகைய உணர்வலை தோன்றுவதாயும் நாம் கருதலாம். புலம்பெயர்ந்து வாழும் தமிழீழப் பெண்கள் காலத்தின் தேவை உணர்ந்து தமிழீழப் போராட்டத்திற்கு ஆதரவாக தமது செயற்பாட்டினை மென்மேலும் விஸ்தரிக்கவேண்டியது அவசியமாகின்றது. இந்த வகையில் பிரான்ஸ் தமிழ் பெண்கள் அமைப்பில் மட்டுமல்ல, ஏனைய நாடுகளிலுள்ள அமைப்புக்களிலும் வெளிநாடு வாழ் பெண்கள் இணைந்து செயல்படுவார்கள் என எதிர்பார்க்கலாம். எதிர்காலத்தில் இன்னமும் வலுவான செயற்பாடுகளுடன் தமிழீழப் பெண்களின் எழுச்சிக்கு தமது உணர்வோடிணைந்த நேசக்கரத்தினை நீட்டுவார்கள் என நம்பலாம்.

மாணிநாகேஷ்

## கருவறைப் பூக்கள்

அவர்களை
பிரசவிக்க
ஈழத்தாயின்
கருவறைகள்
சம்மதிப்பதும்
களத்தில் நிற்பார்களென்ற
நம்பிக்கையிலே!

அந்த தாயின்
மார்பகம்
பாலூட்டி
பயிற்சி தருவதும்
எதிரியிடம் அகப்படாமல்
சயனைடு குப்பி கடிப்பதற்காகவே!

ஈழக்காற்றும்
அவர்களின்
சுவாசத்திற்கு
ஒத்துழைப்பது
அவர்களும்
நம்மைப் போல
சுதந்திரம்
கேட்பவர்கள் என்பதாலேயே!

அந்த
செடிகளும் கொடிகளும்
அவர்களை
உருமறைத்துக் காப்பதும்
நமக்கும்
விடுதலை கிடைக்கு மென்பதாலே!

அந்த
மலைகளும் பாறைகளும்
அவர்களுக்கு
பாதுகாப்பாய் நிற்பதும்
அந்நியன்
ஆக்கிரமிப்பு
நம் மீதிருந்து அடியோடு
அகல வேண்டுமென்பதாலேயே!

பதுங்கு குழிகளும்
பாதுகாப்பாய்
அவர்களுக்கு
பதுங்க இடம் கொடுப்பதும்
எதிரியின் கால்கள்
இனி நம் தேசம் மீது
படக்கூடாது என்பதற்காகவே!

அவர்களின்
துப்பாக்கியிலிருந்து
எதிரியை நோக்கிப் பாயும்
குண்டுகளின் வேகம்
அடிமை
தலைமுறையின் கோபம்
அடக்க முடியாமலேயே!

அந்த மண்ணும்
அவர்களை சுமப்பது
தன்னை
மீட்பார்களென்ற
நம்பிக்கையிலே!

வவுனியன், சோலை மாநகர்
தமிழ்நாடு.

www.tamileelamarchive.com

தமிழீழ ஆவணக் காப்பகம்




# வங்கக்கடல் தமிழன் கடலாகும்

நீல வானத்தில் முழுநிலவு ஒளிக்கதிர்களை பரப்பிக்கொண்டிருக்கிறது. கடலரசியோ ஆர்ப்பரித்து தனது ஆயிரமாயிரம் அலைக்கரங்களை நீட்டி நிலவைத் தழுவ முயன்றுகொண்டிருக்கிறாள். இந்த அழகிய பின்னணியில் மட்டக்களப்பிலிருந்து யாழ். நோக்கி படகில் பயணமாகிக் கொண்டிருக்கிறோம். எனது அருகில் கவிஞர் காசிஆனந்தன் அமர்ந்திருந்தார். ஒரு கவிஞனும் ஒரு ரசிகனும் சேர்ந்துவிட்டால், அதுவும் எழிலார்ந்த சூழ்நிலையில் சேர்ந்துவிட்டால் பேசிமகிழ்வதற்கு கேட்கவா வேண்டும்.

தமிழீழ விடுதலைப் போராட்டத்தைப் பற்றிப் பேசினோம். இதே வங்கக் கடல் எத்தனை விடுதலைப் புலிகளையும் தமிழீழ மக்களையும் கொள்ளை கொண்டுவிட்டது என்பதை, வேதனையோடு நினைவுகூர்ந்தோம். நாங்கள் பயணம்செய்த படகின் முகப்பில் விடுதலைப் புலிகளின் கொடி கம்பீரமாகப் பறந்துகொண்டிருந்தது. பொங்கியெழும் அலைகளின் மீது ஏறி ஏறி இறங்கும் போது சடசடவென புலிக்கொடி ஆடிப்பறந்த அந்தக் காட்சி என்னை ஆயிரம் ஆண்டுகளுக்குப் பின்னே கொண்டுபோய் விட்டது.

சோழப் பேரரசர்களான இராசராசனும், இராசேந்திரனும் ஆண்டகாலத்தில் புலிக்கொடி பறந்த கப்பல்கள் வங்கக் கடலில் இப்படித்தான் சென்றிருக்கவேண்டும் எனக் கவிஞரிடம் கூறினேன். அவரும் பெருமிதத்தோடு 'ஆம்' என ஆமோதித்தார்.

இந்தியாவின் புகழ்பெற்ற வரலாற்று அறிஞரான கே. ஏ. நீலகண்ட சாஸ்திரி அவர்கள், தான் எழுதியுள்ள சோழ வரலாறு பற்றிய நூலில் பின்வருமாறு கூறுகின்றார்: "வங்கக் கடலில் சோழர்கள் ஆதிக்கம் செலுத்தினர். உண்மையில் வங்கக் கடல் சோழர்களின் ஏரியாகத்தான் திகழ்ந்தது."

சாஸ்திரியின் மேற்கண்ட கூற்று வெறும் புகழ்ந்துரையல்ல; வங்கக் கடலில் மட்டுமல்ல கீழைக் கடல்கள் முழுவதிலும் சோழர்களின் ஆதிக்கம் பரவியிருந்தது. பர்மா, மலேசியா, இந்தோனேசியா, சீனா வரையிலும் புலிக்கொடி தாங்கிய கப்பல்கள் தங்குதடையின்றிச் சென்று வந்தன.

ஆயிரம் ஆண்டுகளுக்குப் பிறகு, புலிக்கொடி தாங்கிய கலம் ஒன்றில் பயணம் செய்யும் பேறு எங்களுக்குக் கிடைத்தது குறித்து இருவரும் மகிழ்ந்தோம்.

தம்பி பிரபாகரன் அவர்களை மறுநாள் சந்தித்தபோது, மேலே குறிப்பிட்டவற்றை அவர்களிடம் கூறினேன். அப்போது அவர், 'கடற்புலிகள்' என்ற பெயரோடு தனியான கடற்படை அமைக்கப் போகும் திட்டம் பற்றிக் கூறினார்.

'தம்பி'யின் முகத்தில்தான் எவ்வளவு தன்னம்பிக்கை! எவ்வளவு பெருமிதம்! நினைத்ததை முடிக்கும் 'தம்பி'யின் காலத்தில், மீண்டும் வங்கக் கடலில் தமிழர்கொடி பறக்கப் போகும் நாள் அதிக தூரத்தில் இல்லை என்பதை அந்தக் கணத்தில் உணர்ந்தேன்.

பழ. நெடுமாறன்.

www.tamileelamarchive.com

தமிழீழ விடுதல … பலியான
பெண்புலி … து ஆண்டு
… வு நாள்

தமிழீழ ஆவணக் காப்பகம்




பூமியில் பிறந்த புலிகளில் இருந்து
புதுப் புது வேர்கள் பிறந்திடும் உறுதி.
வேர்கள் பரவி விடுதலை மரமாய்
விழுதுகள் விட்டு வெல்வதும் உறுதி.

புலிகளின் தாகம் தமிழீழத் தாயகம்

www.tamileelamarchive.com

தமிழீழ ஆவணக் காப்பகம்



www.tamileelamarchive.com